உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 மாசி 18 புதன்கிழமை (02.03.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 096



02 மலிங்கவின் வேட்டையில் சிக்கிய கென்யா



03 ஆச்சரியம் கொடுக்குமா அயர்லாந்து



13 கூட்டமைப்புக்கு மட்டுமே எடுத்துக் கூறும் ஆற்றல்



18 மக்கள் தேவையை நிறைவேற்ற தேசிய மருத்துவம்




30 பதவியை ராஜினாமா செய்வராம் சுபைர்

### கம்பஹா வான் பரப்பில் நேற்றுப் பயங்கரம்

# முள்ளிவாய்க்காலில் குண்டுபொழிந்த 'கிபீர்' விமானங்கள் வெடித்துச் சிதறின

### ஜனாதிபதி நேரில் சென்று பார்வையிட்டார்



கொழும்பு, மார்ச் 02

முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது முன்னேறிய அரச படையினருக்கு பக்கபலமாக - பேருதவியாக - சீறிப் பாய்ந்து தாக்குதலில் ஈடுபட்ட 'கிபீர்' குண்டு வீச்சு விமானங்களில் இரண்டு நேற்றுக்காலை கம்பஹா வான் பரப்பில் ஒன்றுடன் ஒன்று மோதி தீப்பிடித்தபடி கீழே விழுந்து நொருங்கின.

கம்பஹா, வரான என்ற பகுதியில் இந்த பயங்கரச் சம்பவம் இடம்பெற்றது. விமானங்கள் மோதிக்கொண்டபோது சுயமாக இயங்கும் பரசூட் மூலம் இரண்டு விமானப்படை விமானிகளும் கீழே குதித்தனர். ஒரு விமானி கீழே விழுந்தபோது இறந்துவிட்டார். மற்ற விமானி காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எரிந்த நிலையில் விமானங்கள் கீழே விழுந்தபோது, பொதுமகன் ஒருவரும் காயமுற்றார் என கம்பஹா பொலிஸார் தெரிவிக் கின்றனர்.

இலங்கையின் 13ஆவது விமானப் படைத் தளபதியாக எயார் மார்ஷல் ஹர்ஷ அபேவிக்ரம (29ஆம் பக்கம் பார்க்க)

### சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப விசாரணை இல்லை எனில்

# போர்க்குற்ற நீதிமன்றின் முன் இலங்கை இழுத்து வரப்படும்

### எச்சரிக்கிறது அமெரிக்கா

வோஷிங்டன், மார்ச் 2

**இறுதிப்போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் குறித்து ஒழுங்கான விசாரணைகளை கொழும்பு மேற்கொள்ளவில்லை எனில் போர்க்குற்ற விசாரணைத் தீர்ப்பாயத்தின் முன்பாக இலங்கை இழுத்து வரப்படலாம் என்று எச்சரித்துள்ளது அமெரிக்கா. சுயாதீன சர்வதேச விசாரணை ஒன்றுக்கு இலங்கை முகங்கொடுக்க வேண்டிய ஆபத்திருக் கின்றது என்று தெரிவித்துள்ளார் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்கச் செயலர் ரெபேர்ட் ஒ பிளேக்.**

சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் சபையின் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் அமெரிக்காவின் இந்த எச்சரிக்கை வெளியாகியுள்ளது. ஏற்கனவே ஐ.நா. கூட்டத் தொடரில் இலங்கை மீது மீண்டும் போர்க் குற்றங் (29ஆம் பக்கம் பார்க்க)

## தூத்துக்குடி கப்பல் சேவை 14 இல்

கொழும்பு, மார்ச் 02

கொழும்பு - தூத்துக்குடி கப்பல் சேவை எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.

சேவைக்கு பயன்படுத்த விருந்த கொழும்பு - தூத்துக்குடி பயணிகள் கப்பல், லிபியாவில் தொழில் புரிந்த இலங்கை (29ஆம் பக்கம் பார்க்க)

### வெளிநாட்டுப் பெண்ணிடம் தகாத செயல்

## பருத்தித்துறை பிரபல பாடசாலையின் மாணவர் மூவருக்கு விளக்க மறியல்

நெல்லியடி, மார்ச் 02

பருத்தித்துறை, தும்பளை மேற்குப் பகுதியில் கடலில் குளித்துக்கொண்டிருந்த வெளிநாட்டுப் பெண்ணுடன் தகாத முறையில் நடக்க முயற்சித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் (29ஆம் பக்கம் பார்க்க)

# ஆரிய - திராவிட பாஷா விருத்திச் சங்கத்தை சொந்த இடத்திலிருந்து அகற்ற படைகள் உத்தரவு

### வடமாகாண ஆளுநர் அடாவடி

யாழ்ப்பாணம், மார்ச் 02

யாழ். கொட்டடியில் உள்ள கட்டடத்தில் இயங்கிவரும் ஆரியத் திராவிட பாஷா விருத்திச் சங்கத்தை அங்கிருந்து அகற்ற இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளது.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

தமிழ் ஆர்வலர்கள், புலவர்கள், தமிழ் மொழி பற்றாளர்கள் இந்த நடவடிக்கை குறித்து கொதித்துப் போய் உள்ளனர். இது ஒரு திட்டமிட்ட புறக்கணிப்புச் செயல் என்று அவர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

ஆரிய - திராவிட பாஷா விருத்திச் சங்கம் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொட்டடியில் உள்ள பாரதி பாஷா வித்தியாசாலை கட்டடத்தில் இயங்கி வருகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணச் செயலாளரின் பணிப்புரைக்கு அமைய கட்டடம் 1999 ஆம் ஆண்டு சங்கத்துக்குச் சொந்தமாக கையளிக்கப்பட்டது. அன்றிலிருந்து சங்கம் இதனை தனது சொந்தக் கட்டடமாகவே பராமரித்து வருகிறது.

தீடீரென அந்தக் கட்டடத்தை விட்டு வெளியேறுமாறு இராணுவத்தினர் நேற்றுச் சங்கத்தினருக்கு அறிவித்துள்ளனர். மாகாண ஆளுநர் உத்தரவின் பேரில் இந்தக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே கட்டடத்தைத் தம்மிடம் ஒப்படைக்கும் படி சங்கத்தின் செயலாளர் ம. கடம்பேஸ்வரனுக்கு இராணுவம் உத்தரவிட்டுள்ளது.

(32 ஆம் பக்கம் பார்க்க)

இன்றைய உதயனுடன் வெற்றோரியின் வர்ணப்படம்



ஏமாற்றத்தைத் தவிர்க்க இன்றே உங்கள் உதயன் முகவரிடம் முன்பதிவு செய்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மலிங்கவின் விக்கெட் வேட்டையில் சிக்கிச் சின்னாபின்னமாகியது கென்யா



மலிங்கவின் [illegible]றிக் விக்கெட்டாய் சேம் நொக்சீ வீழ்ந்தபோது....

-டிலீப்-

சோகமாய் அமைந்தது பாகிஸ்தானுடனான ஆட்டம் இலங்கைக்கு. காத்திருந்தது இதற்குப் பழி தீர்க்க. வாய்த்தது கென்யா, வரிந்துகட்டி தாக்குதல் நடத்தியது இலங்கை.

பதினான்காவது ஆட்டம் உலகக் கிண்ணத் தொடரில். நிரம்பியது ஆர்.பிரேமதாசா விளையாட்டரங்கு நேற்று. நாணயச்சுழற்சி கிடைக்கவில்லை இலங்கைக்கு நேற்றும். துடுப்பெடுத்தும் வாய்ப்பு பெற்று களம் கண்டது கென்யா.

ஒயுமா-வோர்டேஸ் இறங்கினர் ஆரம்பத் துடுப்பாட்டத்துக்காய். காயத்தினால் அவதி, கடைசி ஆட்டத்தில் இலங்கைக்கு வேகப்பந்து வீச்சில் பற்றாக்குறை. திரும்பினார் மலிங்க மீண்டும் அணிக்கு. ஆரம்ப ஓவர் வீசினார். விழவில்லை விக்கெட்டுக்கள். குலசேகர வீசினார் இரண்டாவது ஓவர். பிரிந்தது கென்யர்களின் ஆரம்பம். சரியத் தொடங்கியது விக்கெட்டுக்கள். அணி நான்கு ஓட்டங்கள், ஒயுமா ஒரு ஓட்டம் மட்டும் பெறுகை.

மலிங்க சளைத்தவர் அல்லர் நிரூபித்தார். மூன்றாவது ஓவரில் சரிந்தது அடுத்த விக்கெட். கென்யர்களின் ஆரம்பத்துடுப்பாட்டம் முற்றாய் வெளியேற்றம். எட்டு ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்கள். இணைந்தனர் சகோதரர்கள், தொடங்கினர் புதிய இணைப்பாட்டம்.



ஒன்கொண்டோவின் விக்கெட் மலிங்கவின் பந்தில் தகர்ந்தபோது..

கொலின் ஒபுயா-டேவிட் ஒபுயா கென்யாவை மீட்பதற்காய்போராட்டம். நிதானித்து ஆடினர் முதலில். விக்கெட் இழப்பு தவிர்ப்பது அவர்கள் நோக்கம். துடுப்பாட்டம் சிறப்பாய் அமைத்தனர். சகோதரர்கள் இணைந்து நிமிர்த்தினர் கென்யாவின் ஓட்ட எண்ணிக்கையை. சுழலில் விற்பன்னர்கள் இலங்கையர்கள். முரளி-மெண்டிஸ் வீசினர் பந்துகளை. தவிர்த்து ஆடினர் சகோதரர்கள். தட்டி எடுத்தனர் ஒற்றை ஓட்டங்கள். களத்தடுப்பில் பந்துகள் தவறியது இலங்கையின் கையிலிருந்து. பிரிக்க முடியவில்லை சகோதரர்களை. கடந்தனர் இணைப்பாக அரைச் சதம். அதிரடிகளில் முனைப்பில்லை. அதற்கு இடங்கொடுக்கவும் இலங்கை தயாரில்லை.

மெண்டிஸ் பந்து பட்டது டேவிட் ஒபுயா கால்காப்பில். தீர்ப்பளித்தார் கள நடுவர் ஆட்டமிழப்பு. முறையிட்டது கென்யா, பெற்றது வெற்றி. அனுமதி குடுத்ததால் பெற்றார் தொடர்ந்தாடும் வாய்ப்பை. 95 பந்துகளில் கடந்தார் அரைச்சதம்.

முதல் பகுதி பந்து வீச்சு வாய்க்கவில்லை மலிங்கவுக்கு. வீசியது நான்கு ஓவர்கள், கொடுத்தது 20 ஓட்டங்கள், கைப்பற்றியது ஒரு விக்கெட். இரண்டாம் பகுதிக்காய் வந்தவர் பிரித்தார் இணைப்பை. ஆரம்பமாகியது மலிங்கவின் விக்கெட் வேட்டை. கொலின் ஒபுயா ஆட்டத்துக்கு 52 ஓட்டங்களுடன் விடைகொடுக்கப்பட்டது. கென்யாவுக்கு சனியன் நேற்று மலிங்க ரூபத்தில் வந்து ருத்திரத் தாண்டவமாடியது.

இணைப்புப் பிரிந்ததுதான் தாமதம், சரிந்தன பின்வரிசை விக்கெட்டுக்கள். மறுமுனைச் சகோதரர் டேவிட் ஒபுயா கடந்தார் அரைச்சதம். அவருக்கு அரைச்சதம் கடக்க எடுத்தது 105 பந்துகள். அவருக்கு விடைகொடுத்தார் முரளி. நெருங்கியது இறுதி ஓவர்கள். கென்யர்கள் முனைந்தனர் அதிரடிக்கு. டேவிட் ஒபுயாவும் அதிரடிக்கு முனைப்பு. முரளியின் பந்தில் முயன்றதால் சமரவீரவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழப்பு. அணித் தலைவர் கமன்டீ ஓடினார் அவசரம் ஓட்டம். சாமரசில்வாவின் களத்தடுப்பு சிறப்பால் ரன் அவுட். 128/6 கென்யாவின் நிலை இது. மெல்லச் சேர்ந்தன ஓட்டங்கள். எட்டியது 137 ஓட்டங்கள். வந்தார் மலிங்க. ஓவரின் இறுதிப் பந்தில் மிஸ்ராவை சரித்தார் எல்.பி.டபிள்யூவில். அடுத்த ஓவருக்கு மீண்டும் வந்தார் மலிங்க. ஒன்கொண்டோவின் விக்கெட் மலிங்கவின் 'ஜோக்கரில்' சரிந்தது. ஹட்றிக் வாய்ப்பு வந்தது மீண்டும் மலிங்கவுக்கு. இலங்கையர் மீட்டனர் 2007 உலகக் கிண்ண நினைவுகளை. மீட்டுப் பார்ப்பதற்குள் அடுத்த விக்கெட்டும் 'போல்டில்' சரிந்தது. 'ஜோக்கர் மன்னன் நான் மட்டுமே என', மீண்டும் நிரூபித்தார் மலிங்க. நான்காவது விக்கெட் தொடர்ந்து வீழுமா? காத்திருந்தது அரங்கு. வீசினார் 'ஜோக்கர்'. தவறியது விக்கெட்டிலிருந்து, சென்றது அகலப்பந்தாகி. அதைப் பிடிப்பதற்கு தவறியதால் சென்று தொட்டுவிட்டது எல்லைக் கோட்டை. அடுத்த பந்து தப்பவில்லை விக்கெட்டை தகர்ப்பதற்கு 142 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது ஆட்டம்.

மலிங்கவின் கைக்குக் கிடைத்தது 6 விக்கெட்டுக்கள். அதற்கு கொடுத்தது 38 ஓட்டங்கள்.

பதிலுக்கு விரட்டும் இலக்கை கலைத்தது இலங்கை. இறங்கினர் டில்ஷான்-தரங்க. ஆரம்பம் அதிரடி காட்டவில்லை, அடக்கி வாசித்தனர். மூன்று ஓவர்கள் முடிந்ததுடன் தொடங்கியது அதிரடி. டில்ஷான் கடைசி ஆட்டத்தில் காட்டாததை காட்டினார். அதிரடிகள் அமர்க்களமாய் பறந்தது. ஓட்ட வேகம் எகிறியது. பதிலுக்கு தரங்கவும் காட்டினார் கைவண்ணம். பந்துகள் பறக்கவில்லை எல்லை கோட்டின் மேலாய். பவுண்டரிகளால் காட்டினர் தம் அதிரடிகளை. இணைந்து கடந்தனர் அரைச்சதம் வெறும் 35 பந்துகளில். டில்ஷானின் ஆட்டத்தை அடக்கினார் ஒர்ரினோ. 'தேட்மானுக்கு' தட்ட முயன்றார் பந்தை. தவறியது அவர் இலக்கு. சென்றது விக்கெட் கீப்பர் ஒயுமா கைக்கு. ஆறு ஓட்டங்களால் தவறியது டில்ஷானின் அரைச் சதம்.

வந்தார் சங்கக்கார. இணைந்தார் தரங்கவுடன். மீண்டும் தொடங்கியது நிதானம். நீண்ட நேரம் நீடிக்கவில்லை நிதானம். மீண்டும் இணைந்து ஆரம்பித்தனர் அதிரடி. தரங்க 54 பந்துகளில் கடந்தார் அரைச்சதம். 18.4 ஓவரில் அடைந்தது வெற்றி இலக்கை. இழப்பு ஒரு விக்கெட் மட்டுமே. இறுதிவரை தரங்க 67 ஓட்டங்கள், சங்கக்காரா 27 ஓட்டங்கள்.

விக்கெட்டுக்கள் பல சரித்து சரித்திரம் படைத்த மலிங்க ஆட்டநாயகன்.

## சாதனை நாயகன் மலிங்க



உலகக் கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் புதியதொரு சாதனையை மலிங்க நேற்றுப்பதிவுசெய்தார். உலகக் கிண்ணப் போட்டி வரலாற்றில் இரண்டுதடவைகள்ஹட்றிக் கைப்பற்றிய முதலாவது வீரர் என்ற பெருமையை இலங்கை அணி வீரர் மலிங்க நேற்றுப் பெற்றுக் கொண்டார்.

இதற்கு முன்னரும் 2007 ஆம் ஆண்டு மே.தீவுகளில் இடம்பெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் தென்னாபிரிக்க அணிக்கு எதிராக ஹட்றிக் வீழ்த்தியிருந்தமை [illegible]

## 2011ஆம் ஆண்டு உலகக் கிண்ண பதினான்காவது ஆட்டம்

ஆட்டம்: கென்யா Vs இலங்கை — நாணயச்சுழற்சி: கென்யா

முடிவு: இலங்கை 9 விக்கெட்டுக்களால் வெற்றி — ஆட்டநாயகன்: மலிங்க

**கென்யா**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஒயுமா | lbw b குலசேகர | 01 | 07 | 0 | 0 |
| வோர்டேஸ் | lbw b மலிங்க | 03 | 04 | 0 | 0 |
| கொலின்ஸ் ஒபுயா | b மலிங்க | 52 | 100 | 4 | 0 |
| டேவிட் ஒபுயா | c சமரவீரா b முரளி | 51 | 106 | 3 | 0 |
| ரிக்கோனோ | c டில்ஷான் b மத்தியூஸ் | 07 | 17 | 1 | 0 |
| மிஸ்ரா | lbw b மலிங்க | 00 | 13 | 0 | 0 |
| கமன்டீ | Runout (சாமரசில்வா) | 01 | 03 | 0 | 0 |
| ஒட்சியாம்போ | ஆட்டமிழக்கவில்லை | 08 | 10 | 2 | 0 |
| ஒன்கொண்டோ | b மலிங்க | 00 | 01 | 0 | 0 |
| சேம்நொக்சீ | b மலிங்க | 00 | 01 | 0 | 0 |
| ஒர்ரினோ | b மலிங்க | 00 | 02 | 0 | 0 |
| உதிரிகள் | (b1, lb6, w9, nb3) | 19 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மலிங்க | 7.4 | 38 | 6 | 0 |
| குலசேகரா | 09 | 18 | 1 | 1 |
| மத்தியூஸ் | 07 | 20 | 1 | 0 |
| மெண்டிஸ் | 09 | 23 | 0 | 2 |
| முரளிதரன் | 08 | 24 | 1 | 0 |
| சாமரசில்வா | 03 | 12 | 0 | 0 |

TOTAL - 142/10 (43.4)

1-4(ஒயுமா), 2-8(வோர்டேஸ்), 3-102(கொலின் ஒபுயா), 4-120(ரிக்கோனோ), 5-127(டேவிட் ஒபுயா), 6-128(கமன்டீ), 7-137(மிஸ்ரா), 8-137(ஒன்கொண்டோ), 9-137(நொக்சீ), 10-142(ஒர்ரினோ).

**இலங்கை**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| தரங்க | ஆட்டமிழக்கவில்லை | 67 | 59 | 12 | 0 |
| டில்ஷான் | c ஒயுமா b ஒர்ரினோ | 44 | 30 | 08 | 0 |
| சங்கக்கார | ஆட்டமிழக்கவில்லை | 27 | 24 | 03 | 0 |
| ஜெயவர்தன | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சமரவீர | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| சாமரசில்வா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மத்தியூஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| குலசேகர | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| முரளிதரன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மலிங்க | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மெண்டிஸ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 7, nb 1) | 08 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஒன்கொண்டோ | 03 | 28 | 0 | 0 |
| ஒட்சியாம்போ | 05 | 26 | 0 | 0 |
| நொக்சீ | 04 | 39 | 0 | 0 |
| கமன்டீ | 01 | 14 | 0 | 0 |
| ஒர்ரினோ | 04 | 26 | 1 | 0 |
| ஒபுயா | 1.4 | 13 | 0 | 0 |

TOTAL - 146/1 (18.4)

1-72(டில்ஷான்).

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

## அணிகளின் நிலைகள்

| பிரிவு A | M | W | L | Pt | N/R |
|---|---|---|---|---|---|
| பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 4 | +2.160 |
| ஆஸ்திரேலியா | 2 | 2 | 0 | 4 | +1.813 |
| இலங்கை | 3 | 2 | 1 | 4 | +2.663 |
| நியூஸிலாந்து | 2 | 1 | 1 | 2 | +1.507 |
| சிம்பாப்வே | 2 | 1 | 1 | 2 | +0.840 |
| கனடா | 2 | 0 | 1 | 0 | -3.850 |
| கென்யா | 3 | 0 | 3 | 0 | -4.825 |

| பிரிவு B | M | W | L | Pt | N/R |
|---|---|---|---|---|---|
| இந்தியா | 2 | 1 | 0 | 3 | +0.870 |
| இங்கிலாந்து | 2 | 1 | 0 | 3 | +0.126 |
| தென்னாபிரிக்கா | 1 | 1 | 0 | 2 | +0.766 |
| பங்களாதேஷ் | 2 | 1 | 1 | 2 | -0.600 |
| நெதர்லாந்து | 2 | 0 | 2 | 0 | -2.275 |
| அயர்லாந்து | 1 | 0 | 1 | 0 | -0.540 |
| மே.தீவுகள் | 2 | 1 | 1 | 2 | +1.879 |

M போட்டி L தோல்வி N/R சராசரி
W வெற்றி Pt புள்ளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆச்சரியம் கொடுக்குமா அயர்லாந்து?




-அருள் மொழி-

உலகக் கிண்ணப் போட்டியின் பதினைந்தாவது ஆட்டத்தில் இங்கிலாந்து - அயர்லாந்து அணிகள் இன்று மோதுகின்றன. இந்த ஆட்டத்தில் அயர்லாந்து அணி, பத்தாவது உலகக் கிண்ண போட்டியில் முதலாவது வெற்றியைப் பதிக்குமா? அல்லது இங்கிலாந்தின் வெற்றிக்கு வழிவிடுமா?

அயர்லாந்து அணி 2007 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில், டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற பாகிஸ்தான் அணிக்கெதிரான ஆட்டத்தில் வெற்றி பெற்றதன் மூலம் தனது திறமையினை நிரூபித்தது. அதன் பிற்பாடு அயர்லாந்தை கத்துக் குட்டி அணியாக எந்த அணியும் கணிக்கவில்லை. இருந்தும் 'சுப்பர் 8' சுற்றுக்குள் நுழைந்த போதும் அதனால் எந்தவொரு பலம் வாய்ந்த அணியையும் வீழ்த்த முடியவில்லை. பங்களாதேஷ் மட்டும் அயர்லாந்திடம் மாட்டுப்பட்டு அடிவாங்கியது.

இங்கிலாந்து அணியை 2007ஆம் ஆண்டு 'சுப்பர்-8' சுற்றில் அயர்லாந்து அணி சந்தித்தது. அந்த ஆட்டத்தில் இங்கிலாந்து அணி 48 ஓட்டங்களால் அயர்லாந்தினை வெற்றி கொண்டிருந்தது. அன்றைய ஆட்டத்தில் அயர்லாந்து அணி இங்கிலாந்துக்குப் பலமான சவாலை வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

அயர்லாந்து அணியின் முன்னணி வீரர்கள் பலர் இங்கிலாந்து உள்ளூர் அணிகளில் விளையாடி வருகின்றனர். அங்கு பெற்றுக்கொண்ட சிறப்பான பயிற்சிகள், அனுபவங்கள் மூலமே அயர்லாந்து அணி ஏனைய அணிகளுக்கு சவால் விடும் அணியாக இருக்கின்றது.

அயர்லாந்து அணியுடனான ஆட்டம் தொடர்பில் இங்கிலாந்து அணித் தலைவர் ஸ்ரோரஸ் கருத்துத் தெரிவிக்கையில், "அயர்லாந்து அணி வீரர்கள் எமது உள்ளூர் அணிகளில் திறமையாக விளையாடி வருகின்றார்கள். அத்துடன் எமது பலம், பலவீனம் என்பன அவர்களுக்குத் தெரியும். அதனால் அவர்களுடனான ஆட்டம் எமக்குச் சவாலானதாக இருக்கும். அவர்களை நாம் எளிதாகக் கருதவில்லை " என்றார்.

உண்மையில் அயர்லாந்து அணி பந்து வீச்சில் மிகவும் பலமான அணியே. அந்த அணியின் ஜோன்ஸ்ரனின் அபார வேகப் பந்து வீச்சு எதிரணிக்கு எப்போதும் ஆபத்தானதே. அவருடன் இணைந்து மித வேகப் பந்து வீசும் போத்தாவின் திறமையும் அயர்லாந்துக்கு பலமானதே. துடுப்பாட்டத்தில் பிரையன் சகோதரர்கள் சிறப்பாகக் கலக்கி வருகின்றனர். பங்களாதேஷுடனான ஆட்டத்தில் பிரையன் சகோதரர்கள் இருவருமே அதிரடியான ஆட்டத்தினை வெளிப்படுத்தியிருந்தனர்.

பங்களாதேஷுடன் இடம் பெற்ற ஆட்டத்தில் அயர்லாந்து பந்து வீச்சாளர்கள் சிறப்பாக வீசி 205 ஓட்டங்களுக்குள் எதிரணியை மட்டுப்படுத்தியிருந்தனர். எனினும் அந்த ஆட்டத்தில் அயர்லாந்து 178 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 27 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்தது. துடுப்பாட்டத்தில் பிரையன் சகோதரர்களை மாத்திரம் நம்பியிருக்காது ஏனையோரும் சிறப்பாக துடுப்பெடுத்தாடினால் மாத்திரமே இங்கிலாந்து அணியை சமாளிக்க முடியும். இருப்பினும் அயர்லாந்து அணி சவாலான அணியாகவே இருக்கின்றது.

மறுபுறம் இங்கிலாந்து அணி சகல துறைகளிலும் சிறப்பாகவே செயற்பட்டு வருகின்றது. இந்தியாவுக்கு எதிராக இடம்பெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து அணியின் பின்வரிசை வீரர்கள்கூட சிறப்பான துடுப்பாட்டத்தினை வெளிப்படுத்தியிருந்தனர். இருந்தும் அவர்களின் பந்து வீச்சு சொல்லிக்கொள்ளும் படியாக இல்லை. சுழற் பந்து வீச்சாளர் சுவான் தவிர ஏனையோரின் பந்து வீச்சில் முன்னேற்றம் தேவை. இல்லாவிட்டால் எதிரணிகளுக்கு அது வாய்ப்பாகிவிடும்.

மத்திய வரிசை துடுப்பாட்ட வீரர்கள் எவரும் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் சோபிக்கவில்லை. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களே சிறப்பான ஆட்டத்தினை வெளிப்படுத்தியிருந்தனர். அவர்கள்கூட அதிர்ஷடத்தினால்தான் அன்றைய ஆட்டத்தில் தப்பிப் பிழைத்து ஆடியிருந்தனர். இப்படியான நிலையில் இவர்களது ஆட்டம் தொடருமாக இருந்தால் அயர்லாந்துடனான போட்டியும் சவாலானதாகவே அமையும்.




## ஐ.சி.சி துடுப்பாட்டத் தரவரிசை

1  அம்லா 883 தென்னாபிரிக்கா

2  ஏ.பி.டி.வில்லியர்ஸ் 804 தென்னாபிரிக்கா

3  விராட் ஹோக்லி 791 இந்தியா

4  மைக்கல் ஹசி 760 ஆஸ்திரேலியா

5  எம்.எஸ்.டோனி 726 இந்தியா

6  ரி.எம்.டில்சான் 717 இலங்கை

6  வீரேந்திர சேவாக் 717 இந்தியா

8  குமார் சங்ககார 706 இலங்கை

9  ஷேன் வொட்ஸன் 698 ஆஸ்திரேலியா

10  சச்சின் டெண்டுல்கர் 688 இந்தியா

28.02.2011 வெளியிடப்பட்ட தரவரிசை

# மஹேல சட்ட நடவடிக்கை

இலங்கை- பாகிஸ்தான் அணிகளுக்கிடையே சனிக்கிழமை நடந்த ஆட்டத்தில், பாகிஸ்தான் அணிக்கு எதிராக 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி தோற்றுப்போயிருந்தது.

வெற்றி பெறக்கூடிய இலக்கையே இலங்கை விரட்டத் தொடங்கியிருந்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக ஆட்டத்தை ஆரம்பித்திருந்த போதும் மத்திய துடுப்பாட்ட வரிசையில் களமிறங்கிய , மஹேல ஜெயவர்த்தன இரண்டு ஓட்டங்களுடனும் திலான் சமரவீர ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்திருந்தனர்.

இலங்கை தோற்க வேண்டும் என்பதற்காக வேண்டு மென்றே இவர்கள் இருவரும் மோசமாக ஆடினார்கள் என்ற அர்த்தம் எழும் வகையில் 'ஐ.ரி.என்' அரச தொலைக்காட்சியில் இந்த ஆட்டம் பற்றிய விமர்சனம் ஒன்று ஞாயிற்றுக்கிழமையன்று ஒளிபரப்பப்பட்டிருந்தது.

சோக ராகம் பின்னணியில் கேட்க இந்த ஆட்டத்தில் இலங்கை அணி பின்னடைவு கண்டிருந்த சில கட்டங்கள் 'ஸ்லோ-மோஷனில்' ஓட அரசு செய்தித்தாள் ஒன்றின் ஆசிரியரான மஹிந்த அபயசுந்தரவினால் எழுதப்பட்டிருந்த விமர்சனம் இந்த தொலைக்காட்சியில்ஒளிபரப்பானது. இந்த ஆட்டத்தில் பாகிஸ்தானே வெல்லும் என்று வர்த்தகர் ஒருவர் 18,000 டொலர்களுக்குப் பந்தயம் கட்டியிருந்ததால்தான் குறிப்பட்ட இலங்கை வீரர்களின் ஆட்டம் தடம் மாறியது என்று அந்த விமர்சனம் அமைந்திருந்தது.

மஹேலவும், திலானும் சேர்ந்துதான் இந்த ஆட்டத்தின் போக்கை மாற்றிவிட்டார்கள் என்றும் அந்த விமர்சகர் சொல்லியிருந்தார்.இந்த விமர்சன ஒளிபரப்பு இலங்கையின் கிரிக்கெட் ரசிகர்கள் பலருக்கு கோபத்தை உண்டு பண்ணியிருந்தது. மஹேலவையும் திலானையும் துரோகிகள் என்று சொல்வது அருவருப்பான வெட்கங் கெட்ட விமர்சனம் என்று கிரிக்கெட் ரசிகர் ஒருவர் சமூக வலைத்தளம் ஒன்றில் கருத்து வெளியிட்டுள்ளார். தம் மீதான இந்தக் குற்றச்சாட்டுக்கு எதிராக அரசாங்கத்திடம் விளக்கம் கேட்டு தனது சட்டத்தரணி கடிதம் ஒன்றை எழுதிவருவதாக மஹேல ஜெயவர்த்தன கூறியுள்ளார்.(15)

| அதிகூடிய ஓட்டங்கள் | M | R | 50'S | 100'S | H.S | Avg. |
|---|---|---|---|---|---|---|
| ஸ்ரோரஸ் (இங்கிலாந்து) | 02 | 246 | 01 | 01 | 158 | 123.00 |
| சேவாக் (இந்தியா) | 02 | 210 | 00 | 01 | 175 | 105.00 |
| குமார் சங்கக்கார (இலங்கை) | 03 | 168 | 01 | 00 | 92 | 84.00 |

| அதிகூடிய விக்கெட்டுகள் | M | W | Best |
|---|---|---|---|
| அப்ரிடி (பாகிஸ்தான்) | 02 | 09 | 05/16 |
| ஜோன்ஸன் (அவுஸ்திரேலியா) | 02 | 08 | 04/19 |
| ரோச் (மே.தீவுகள்) | 02 | 07 | 06/27 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.சி.சி பந்துவீச்சுத் தரவரிசை

1  டானியல் வெற்றோரி 698 நியூஸிலாந்து

2  மோர்னி மோக்கல் 692 தென்னாபிரிக்கா

3  பிரிஸ் 664 சிம்பாப்வே

4  டெயில் ஸ்ரென் 662 தென்னாபிரிக்கா

5  மிச்சல் ஜோன்சன் 661 ஆஸ்திரேலியா

6  சகிப் அல் ஹசன் 659 பங்களாதேஷ்

7  கலான் 658 இங்கிலாந்து

8  அப்துல் ரசாக் 655 பங்களாதேஷ்

9  நுவான் குலசேகர 653 இலங்கை

10  ரொஸ்ரோபே 653 தென்னாபிரிக்கா

28.02.2011 வெளியிடப்பட்ட தரவரிசை

உலகக் கிண்ணி வாசகர் களனி

உதயனின் உலகக் கிண்ண கொண்டாட்டம் 2011





# இந்திய அணிக்கும் கிண்ணம் வெல்லும் வாய்ப்பு

அண்மைக் காலமாக இந்திய அணி மிகவும் சிறப்பாகத் தனது ஆட்டத்தை வெளிப் படுத்தி வருகின்றது. இந்திய அணியின் தலைவர் மகேந்திர சிங்டோனி மிகவும் சிறப்பாக இந்திய அணியை வழிநடத்தி வருகின்றார் என்பதும் குறிப் பிடத்தக்கதாகும். இந்த முறை உலகக் கிண்ணப் போட்டிகள் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் நடைபெற உள்ளதால் இதுவும் இந்தியா அணிக்கு வாய்ப்பாக அமையலாம்.

1983ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது உலகக் கிண்ணப் போட்டியில் கபில்தேவ் தலைமையில் சிறப்பாக விளையாடிய இந்திய அணி 45 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக அமர்நாத் தெரிவு செய்யப்பட்டார். இதன் பின்னர் இந்திய அணி 2003ஆம் ஆண்டு நடை பெற்ற உலகக்கிண்ணப் போட்டியின்போது இறுதிப் போட்டி வரை முன்னேறியது. எனினும் அந்தப் போட்டியில் ஆஸ்திரேலியா அணியே வெற்றி பெற்றது. இந்த முறை இந்தியா மிகச் சிறப்பான அணியைத் தெரிவுசெய்துள்ளது.

ஜெ.ஜெயவர்மன்
அளவெட்டி வடக்கு.

இதில் சேவாக், ஹோக்லி, யூசுப்பதான், யுவராஜ்சிங், ரெய்னா, சச்சின், சகீர்க்கான், ஹர்பஜன் சிங், அஸ்வின், பியூஸ்சாவுலா, ஸ்ரீசாந், கம்பீர், நெஹ்ரா, முனாப்பட்டேல், டோனி போன்ற வீரர்களை தெரிவு செய்துள்ளது. இதில் அனுபவம் வாய்ந்த பதினொரு பேர் களமிறங்குவார்கள் என நம்பப்படுகின்றது. இந்திய அணியில் அதிரடி துடுப் பாட்ட வீரர்களும் எதிரணி வீரர்களை மிரட்டும் அளவுக்கு பந்து வீசக் கூடிய வீரர்களும் உள்ளனர். இந்த முறை உலகக் கிண்ணப் போட்டியில் டோனி தலை மையிலான அதிரடி வீரர்களைக் காணக் கூடியதாக இருக்கும். எனவே இந்த முறை இந்திய அணிக்கு உலகச் கோப்பையை வெல்ல வாய்ப்பு உள்ளது.



## வெற்றியைத் தவறவிட்ட இந்தியா அதிர்ச்சியில் ரசிகர்கள்

இங்கிலாந்துக்கு எதிரான உலகக் கிண்ண ஆட்டத்தில் பெரிய இலக்கை எட்டிய போதும் இந்திய அணி அநியாய மாக வெற்றி வாய்ப்பைக் கோட்டை விட்டது. பந்துவீச்சு மற்றும் களத்தடுப் பில் தடுமாறியதால் போட்டி வீணாக சமனிலையில் முடிந்தது. இது இந்திய ரசிகர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தில் உல கக் கிண்ணத் தொடர் நடக்கிறது. பெங் களூரில் நடந்த 'பி' பிரிவு லீக் ஆட் டத்தில் இந்தியா, இங்கிலாந்து அணிகள் மோதின. முதலில் துடுப் பெடுத் தாடிய இந் திய அணிக்கு சச்சின் சதம் கைகொடுக்க 338 ஓட்டங்கள் குவித்தது. இதையடுத்து இங்கிலாந்தை மிக எளிதாக வீழ்த்தி விடலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. ஆனால் ஸ்ரோரஸ் சதம் அடிக்க இங் கிலாந்தும் 338 ஓட்டங்கள் எடுக்க ஆட் டம் சமனிலையா னது.

இந்த ஆட்டத்தில் ஒட்டுமொத்தமாக 676 ஓட்டகள் பெறப்பட்டதுடன் 18 விக்கெட்டுக்களும் வீழ்ந்தன. இதைத் தவிர இரு வீரர்கள் சதம் அடித்தது போன்றவை ரசிக்கும்படியாக இருந்தது. ஆனால் வெற்றி வாய்ப்பை இந்தியா நழுவவிட்டதைத் தான் இந்திய ரசிகர் களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இது குறித்து கருத்துத் தெரிவித்த இந்திய ரசிகர் ஒருவர்:

முதல் லீக் ஆட்டத்தில் பங்களா தேஷ் அணி இந்தியாவுக்கு எதிராக 280 ஓட் டங்கள் எடுத்தது. அப்போதே இந்தியப் பந்து வீச்சாளர்கள் சுதாரித்துக் கொண்டி ருக்க வேண்டும். இந்தியாவுக்கு எதிராக தரவரிசைப் பட்டியலில் ஐந்தாவது இடத்தில் உள்ள இங்கிலாந்து 338 ஓட் டங்கள் எடுத்துள்ளது. இதேநிலை தொடர்ந் தால் ஆஸ்திரேலியா, தென்னாபிரிக்கா போன்ற வலிமையான அணிகளை எப் படிச் சமாளிக்க முடியும் - என்றார். (15)

## அதிஷ்டம் என் பக்கம் -பெல்



இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் 17 ஓட்டங்கள் எடுத்தபோது ஆட்டமிழக்கும் வாய்ப்பில் இருந்து தப்பிய இங்கிலாந்தின் பெல் 69 ஓட்டங்கள் எடுத்தார். இது இந்திய அணியின் தோல்விக்கு ஒரு காரணமாக அமைந்தது. ஆனால் யு.டி.ஆர்.எஸ். (கள நடுவரின் தீர்ப்பை எதிர்த்து வீரர்கள் மேன் முறையீடு செய்யும் முறை) முறைப்படி விக்கெட்டில் இருந்து 2.5மீ. வெளியே பந்து விழுந்ததால் ஆட்டமிழப்பு தரப்படவில்லை. இது குறித்து இயென் பெல் கூறியதாவது:

யு.டி.ஆர்.எஸ். முறையில் என்ன விதி உள் ளது என்று எனக்குச் சரியாகத் தெரியாது. பந்து விக்கெட்டைத் தகர்ப்பது நன்றாகத் தெரிந்தது. உண்மையைச் சொல்வதென்றால் ஆஷஷ் தொடரில் இதுபோன்ற பெரும்பாலான நேரங்களில் ஆட்டமிழப்புத் தரப்பட்டது.

ஒருவேளை உலகக் கிண்ணத் தொட ருக்காக யு.டி.ஆர்.எஸ். முறையில் ஏதும் மாற் றம் செய்திருக்கிறார்களா என்று தெரிய வில்லை. மீண்டும் விளையாட நான்காவது நடுவர் அனுமதித்தது எனக்கு கிடைத்த அதிர்ஷ்டம் தான் - என்றார். (15)

### பரிசுக் கூப்பன்களை எமது முகவர்களிடம் வைக்கப்பட்டுள்ள அதற்கான பெட்டியில் சேர்க்கலாம்

துர்க்கா புத்தகசாலை
சுன்னாகம்.

ரூபன் பல்பொருள்
அளவெட்டி.

இணுவில் பத்திரிகை
முகவர்
இணுவில்.

இந்திரா பல்பொருள்
வாணிபம்
வேலணை.

அம்பாள் பல்பொருள் வாணிபம்
புங்குடு தீவு.

கந்தசாமி கடை
காரைநகர்.

சிறிமுருகன் களஞ்சியம்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை

மலர் கடை
இளவாலை.

நகுலேந்திரன் பல்பொருள்
வாணிபம்.
முழங்காவில்.

அன்பரசன் புத்தகசாலை
ஒட்டுசுட்டான்.

மதுரா ரெயிலர் கடை
நாச்சிக்குடாச் சந்தி
முன்பாக, நாச்சிக்குடா.

உதயன் அலுவலகம்
கரடிப்போக்குச் சந்தி.

சூரியா பார்மஸி.
அச்சுவேலி.

கிருபா போட்டோ
மல்லாகம்.

பருத்தித்துறையில்
[illegible]

நெல்லியடியில்
மொடோன் ஸ்ரோர்ஸ்
ராஜலக்சுமி புத்தகசாலை
சதா பொன்ஸ்

மந்திகையில்
நாவலர் புத்தகசாலை

உடுப்பிட்டியில்
ரஜினி பீடா

வல்வெட்டியில்
கலைச்சோலை பான்சி கவுஸ்

தென்மராட்சியில்
அருள் விநாயகர் புத்தகசாலை
மணியம் ஸ்ரோர்ஸ்
சுஜனன் மல்ரி சேர்விஸ் சென்ரர்
அல்லாரை ஆர்.டி.
உதயன் காரியாலயம்
சிறீராம் மல்ரி சென்ரர்

கிளிநொச்சியில்
பிள்ளையார் புத்தகசாலை
அறிவுமதி புத்தகசாலை
சோமசுந்தரம் மல்ரி சென்ரர்
புவனேஸ்வரி புத்தகசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் தொடர்ந்தும் சாதிப்போம்

இலங்கை அணிக்கு எதிராக கிடைத்த வெற்றி உலகக்கிண்ண தொடரில் சாதிப்போம் என்ற நம்பிக்கையை எமக்கு அதிகரித்துள்ளது. இவ்வாறு பாகிஸ்தான் அணித்தலைவர் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண தொடரில் பாகிஸ்தான் அணி தனது முதல் ஆட்டத்தில் கென்யாவை வீழ்த்தியது. இரண்டாவது ஆட்டத்தில் அபார திறனை வெளிப்படுத்திய பாகிஸ்தான் அணி இலங்கையை வீழ்த்தியது. இது குறித்து பாகிஸ்தான் அணித் தலைவர் அப்ரிடி கூறியவை வருமாறு:

சமீபகாலமாக ஒருநாள் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் இலங்கை அணியை, அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது எளிதான காரியமல்ல. இலங்கை அணிக்கு எதிராக, துடுப்பாட்டம் மற்றும் பந்து வீச்சில் நூறு சதவீத திறமையை வெளிப்படுத்தியதால் தான் வெற்றி பெற முடிந்தது. இந்த வெற்றி அடுத்துவரும் ஆட்டங்களில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திச் சாதிப்போம் என்ற நம்பிக்கையை அதிகரித்துள்ளது.



இந்த ஆட்டத்தில் எங்களது களத் தடுப்புத் திருப்தி அளிக்கவில்லை. இலங்கைக்கு எதிரான ஆட்டத்தில் எளிய பிடிகளை எடுக்கும் வாய்ப்புகளை வீணடித்ததால் கடைசி ஓவர் வரை போராட நேரிட்டது - என்றார். (15)

# அடுத்த ஆட்டத்தில் சாதிப்போம்



ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் கவனயீனமே இலங்கை அணியின் தோல்விக்கு காரணமென அணியின் தலைவர் குமார்சங்ககார தெரிவித்துள்ளார். உலகக் கிண்ண ஆட்டத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டத்தில் இலங்கை 11 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இந்தத் தோல்வி பற்றிக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் பாகிஸ்தான் அணியை 277 ஓட்டங்களுக்குள் மட்டுப்படுத்தியது நல்லது தான்.

இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாடி வெற்றி பெறக்கூடிய ஓட்ட எண்ணிக்கையை தான் நாம் விட்டுக்கொடுத்திருந்தோம்.

ஆனால் நாங்கள் செய்த தவறு 100 ஓட்டங்களுக்குள் 4 விக்கட்டுகளை இழந்ததுதான் எனக் குறிப்பிட்டார். வெற்றியினை நாம் நூலிழையில் தவறவிட்டோம். அதற்குக் காரணம் சிறப்பாகச் செயற்படாத ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள்தான்.

அவர்கள் கொஞ்சம் சிறப்பாக விளையாடியிருந்தால் நிச்சயம் வெற்றி பெற்றிருக்கலாம். அடுத்தடுத்த போட்டிகளில் ஓட்டங்களை வேகமாக பெறமுயலும் அதேவேளை விக்கட்டுகளைத் தக்க வைத்துக் கொள்ளவும் வேண்டும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (15)

## இன்றைய ஆட்டம்

**மொஹாலி, பி.ப 2.30**

**இங்கிலாந்து – அயர்லாந்து**





ஆலோசனை: இலங்கை - கென்யா அணிகளுக்கிடையிலான நேற்றைய ஆட்டத்துக்காக இலங்கை அணி வீரர்கள் தயார்ப்படுத்தலில் ஈடுபட்டிருந்தபோது....

**அடுத்த வர்ணப் படத்தில் ஹட்றிக் நாயகன் மலிங்க. எப்போது வரும்? இணைந்திருங்கள் உதயனுடன்...**




### தினமொரு பரிசுப் போட்டி

கனடா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான நாளைய (03.03.2011) ஆட்டத்தில் வெற்றிபெறும் அணி எது?

..................................................

பெயர் : ..................................................

தே.அ.இல : ..................................................

முகவரி : ..................................................

..................................................

இந்தக் கேள்விக்கான விடையை இந்தக் கூப்பனில் எழுதி நாளை (03.03.2011) பிற்பகல் 2 மணிக்கு முன் தினமொரு பரிசு, உதயன் பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபாலிலோ அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியிலோ சேர்க்கவும்.

தினமொரு பரிசுப் போட்டி

UTHAYAN IT ISLAND

CLiCT GATEWAY CENTRE JAFFNA

வழங்கும்

4 1/2 லட்சம் ரூபா

பெறுமதியான பரிசுக் கூப்பன்கள்

48 பேருக்கு தலா 9 ஆயிரம் ரூபா பெறுமதியானவை

மாபெரும் காலிறுதிப் போட்டி

1ஆம் பரிசு

தொகையை முடிந்தால் கற்பனை செய்துபாருங்கள்

### மாபெரும் காலிறுதிப் போட்டி

காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெறும் அணிகள் எவை?

1. .................... 5. ....................
2. .................... 6. ....................
3. .................... 7. ....................
4. .................... 8. ....................

பெயர் : ..................................................

தே.அ.இல. : ..................................................

முகவரி : ..................................................

..................................................

போட்டி முடிவுத் திகதி

10.03.2011

### மாபெரும் இறுதிப் போட்டி

உலகக் கிண்ணத்தை வெல்லும் அணி எது?

..................................................

போட்டியின் தொடர் ஆட்ட நாயகன் யார்?

..................................................

பெயர் : ..................................................

தே.அ.இல. : ..................................................

முகவரி : ..................................................

..................................................

போட்டி முடிவுத் திகதி

15.03.2011

கம்ப்யூட்டர் ருடே

வழங்கும்

தினமும் வெல்லும் ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான கம்ப்யூட்டர் ருடே இலவச சந்தா

இறுதிப் போட்டிக்கான சிறப்பு பரிசு

EUROSTAR
Live your Life
CONSUMER ELECTRONICS, HOME & KITCHEN APPLIANCE




2ஆம் பரிசு

மாபெரும் இறுதிப் போட்டி

காத்திருங்கள் மற்றும் 10 ஆறுதல் பரிசுகள்

### போட்டி விதிகள்

ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். போட்டோ பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. தே.அ.அட்டை பெறும் வயதுக்குக் குறைந்தவர்கள் பெற்றோரின் தே.அ.அட்டை எண்ணைக் குறிப்பிடலாம். உதயன் மற்றும் உதயன் சார்ந்த நிறுவனங்களின் ஊழியர்களோ அவர்களது குடும்பத்தவர்களோ போட்டிகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள். நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியானது. முடிவுகள் குறித்து எந்த விளக்கங்களுக்கும் தொடர்புகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. [illegible] திகதி உதயனில் அறிவிக்கப்படும். சகல போட்டிகளுக்குமான பெயர்களை இடது மேல் [illegible] பணிமனை, 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது உதயன் அலுவலகத்தில் உள்ள இதற்கான பெட்டியில் சேர்க்கவும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரசாரத்துக்கு அரச வளங்களை பயன்படுத்தினால் கட்டணம் அறவீடு

## ரயில், பஸ்களில் சுவரொட்டிகளை அகற்றவும் உத்தரவு

கொழும்பு, மார்ச் 2

எந்தவொரு அரசியல் கட்சிக்கும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கென அரச வளங்கள் வழங்கப்படுமாயின் அதற்கு அவசியமான கட்டணம் அறவிடப்பட வேண்டும் - எனத் தேர்தல் ஆணையாளர் நாயகம் அனைத்து அரச நிறுவன அதிகாரிகளுக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

அரசியல் கட்சிகள் கோரிக்கை விடுத்தால் மாத்திரமே அரச வளங்கள் வழங்கப்பட வேண்டும் என சுற்றறிக்கை ஒன்றின் மூலம் தேர்தல் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க மேற்படி அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

தேர்தல் பிரசாரத்துக்கென அரச சொத்துககள் கோரப்பட்டு அதனை வழங்க மறுப்புத் தெரிவித்திருந்தால் அதற்கான உரிய காரணத்தை அறிக்கையிட்டு சமர்ப்பிக்க வேண்டுமென்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு கட்சிக்கும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரச வளங்கள் இலவசமாக வழங்கப்படுமாயின் அரச சொத்துக்களைத் தேர்தலுக்குப் பயன்படுத்தியதாகக் கணிக்கப்படும் - என தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

ரயில்களிலும் இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களிலும் ஒட்டப்பட்டுள்ள விளம்பரங்களை உடனடியாக அப்புறப்படுத்துமாறு தேர்தல் செயலகம் பொலிஸ் மா அதிபருக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

ரயில், இ.போ.ச மற்றும் தனியார் பஸ்களில் தேர்தல் விளம்பரங்கள் ஒட்டப்படுவது தடை செய்யப்பட்டிருந்தபோதும் உள்ளூராட்சித் தேர்தல் விளம்பரங்கள் அவற்றில் ஒட்டப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துக்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளுக்குப் பின்பே பொலிஸ் மா அதிபருக்கு மேற்படி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது எனத் தேர்தல்கள் செயலகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துக்கும் கட்சிச் செயலாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்தவிடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். (சி)

# தனியார் பல்கலைகள் அமைந்தால் அந்நியச் செலாவணி அதிகரிக்கும்

இலங்கையில் தனியார் பல்கலைக்கழகங்களை ஆரம்பிப்பதன் மூலம் அதிகமான எமது நாட்டு மாணவர்களுக்கு உயர் கல்வியைப் பெறுவதற்கான வாய்ப்புக் கிடைப்பதுடன், பெருமளவில் வெளிநாட்டுச் செலாவணியையும் பெற்றுக்கொள்ள முடியும் எனப் பிரதமர் டி.எம்.ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெற்ற கண்டி விஹாரமஹாதேவி மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்தொடர்ந்து உரையாற்றுகையில்:

தற்போது உயர்தரத்தில் சித்தியடையும் மாணவர்களுள் குறைந்த எண்ணிக்கையானோரே பல்கலைக்கழகத்துக்குச் செல்கின்றனர். ஏனையவர்களுக்கு என்ன நடக்கின்றது என்பதை நாம் சிந்திக்க வேண்டும். இதனால்தான் ஜனாதிபதி உயர்கல்வி அமைச்சு மூலம் தனியார் பல்கலைக்கழகங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளார். நாட்டில் தனியார் பல்கலைக்கழகங்களை அமைத்தவுடன் அதிகமான மாணவர்களால் இலகுவாக உயர்கல்வியைப் பெற் றுக்கொள்ளமுடியும். இதேபோன்று வெளிநாட்டு மாணவர்களும் எமது நாட்டில் கல்வி கற்கலாம். இதன்மூலம் எமக்கு வெளி நாட்டு செலாவணியும் கிடைக்கும்.

தற்போது பல்லாயிரக்கணக்கான எமது நாட்டு மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கின்றனர். இதற்காகப் பெருந்தொகையான பணத்தை அவர்கள் செலவு செய்கின்றனர். இந்தப் பணத்தை எமது நாட்டில் தக்கவைத்துக் கொள்வதற்கும் இந்தத் தனியார் பல்கலைக்கழகங்கள் வழிவகுக்கும் - என்றார். (சி)

# 4 லட்சம் பெறுமதி நகைகள் அபகரிப்பு;

## பூசாரி கைது

பெண்ணொருவரை ஏமாற்றி அவரிடமிருந்து 4 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளை மோசடி செய்தார் என்ற சந்தேகத்தில் பூசாரி ஒருவரை இரத்தோட்டைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். தனது மகன் கொண்டிருந்த காதல் தொடர்பை முறிப்பதற்குப் பூசை செய்யவென இந்தப் பெண், பூசாரி ஒருவரைப் பல முறை சந்தித்துள்ளார். அதன் பிறகு அவரை அழைத்துவந்து பூசை நடத்தியுள்ளார். பூசைக்குத் தங்கம் படைக்க வேண்டும் எனவும், பூசை முடிந்து சில நாள்கள் அவை பூசையறையிலேயே இருக்க வேண்டுமெனவும் பூசாரி கூறியுள்ளார். இதை நம்பிய பெண் நகைகளைக் கொடுத்துள்ளார்.

நீண்ட நாள்களாக நகைகள் கிடைக்காததால், இந்தப்பெண் இரத்தோட்டைப் பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து பூசாரி கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின் அந்த நகைகள் இரண்டு வங்கிகளில் அடகு வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது. (204-5)

## கைமாறும் படகு...



கடற்படையினரால் நிர்மாணிக்கப்பட்ட கண்காணிப்புப் படகொன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை கரையோரப் பாதுகாப்பு பிரிவுக்கு கையளிக்கப்பட்டது. இந்தப் படகை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் சோமதிலக்க திஸாநாயக்க, கரையோர பாதுகாப்பு பிரிவுத் தலைவர் தயா தர்மப்பிரியா ஆகியோர் பார்வையிடுகின்றனர். (204)

# சந்தேகநபர் மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை

தங்கச் சங்கிலியொன்றை அபகரித்துக் கொண்டு சென்றார் எனக் கருதப்படும் நபரொருவர், காலி பொலிஸ் குற்றவியல் பிரிவு அலுவலகத்தில் வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட வேளையில் மாடியிலிருந்து. குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

13 வயதான சிறுவனொருவனிடமிருந்து தங்கச் சங்கிலியை அபகரித்தார் என்ற சந்தேகத்தின்பேரில் இவர் கைது செய்யப்பட்டிருந்தார்.

காலி பொலிஸ் நிலையக் கட்டடத்தின் 2 ஆவது மாடியில் அமைந்துள்ள குற்றவியல் பிரிவில் வைத்து விசாரிக்கப்பட்ட போதே அவர் அங்கிருந்து குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார் என தென் பிராந்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர் கிங்ஸ்லி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

எல்பிட்டியவைச் சேர்ந்த இவர் பல கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பாகத் தேடப்பட்டவர் எனவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார். சந்தேகநபர் பொலிஸ் காவலில் இருந்தபோது உயிரிழந்தமை தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

# பாரபட்சமாக நடப்பதாக வெளியான குற்றச்சாட்டு; விசாரணைக்கு தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடும் எதிர்க் கட்சி வேட்பாளர்களுக்கு பொலிஸாரும் கிராமசேவையாளர்களும் ஓர வஞ்சனை காட்டி வருவதாகத் தனக்குப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் அது சம்பந்தமான விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கிராம சேவையாளர்களும் பொலிஸாரும் தேர்தல் பணிகளின் போது பாரபட்சமாக நடப்பதால் தேர்தல் விதிமுறை மீறப்படுவதாக இந்தக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. எதிர்க்கட்சி வேட்பாளர்கள் தெரிவிக்கும் முறைப்பாடுளை பொலிஸார் உதாசீனம் செய்வதாகவும் அவற்றை ஏற்க மறுப்பதாகவும் பல குற்றச்சாட்டுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனவும் அவ்வாறே கிராம சேவையாளர்களும் பாரபட்சம் காட்டுவதாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் உடனடியாகத் தலையிட்டு நீதியை நிலைநாட்டுமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்தல் தருமாறு தேர்தல் கள் ஆணையாளர் நாயகம் பொலிஸ்மா அதிபருக்கு கடந்த வெள்ளிக்கிழமை எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் கிராம சேவையாளர்கள் பற்றிய விசாரணைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் மேலும் தெரிவிதுள்ளார். (204-5)

# பொலிஸ் விளக்கமறியலில் இருந்து மூன்று கைதிகள் தப்பியோட்டம்

கொழும்பு,மார்ச் 2

கொள்ளைகள், திருட்டுக்கள் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டு இருந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்த மூன்று கைதிகள் ஜாஎல பொலிஸ் விளக்கமறியலை உடைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தப்பியோடியுள்ளனர்.

ஜாஎல பொலிஸ் கட்டடத்தின் மூன்றாம் மாடியிலிருந்த இந்த விளக்கமறியலின் கதவுக் கம்பிகளை அறுத்து இவர்கள் தப்பியுள்ளதாகப் பொலிஸ் உயரதி ஒருவர் தெரிவித்துள்ளார். சம்பவ தினம் விளக்கமறியலுக்குக் காவலாக இருந்த இரண்டு கான்ஸ்டபிள்கள் பதவி நீக்கம் செய்யப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவர்களைத் தேடிக்கண்டு பிடிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜாஎல பொலிஸார் தெரிவித்துள்ளனர். (204-5)

# கிழக்கு மாகாணசபையை த.தே.கூ.கைப்பற்றினால் அரசியலிலிருந்தே ஓய்வு- முதலமைச்சர் சந்திரகாந்தன்

கொழும்பு,மார்ச் 2

அடுத்த தேர்தலில் கிழக்கு மாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனித்துப் போட்டியிட்டுக் கைப்பற்றினால் தாம் அரசியலிலிருந்து விலகப் போவதாகத் தெரிவித்துள்ளார் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன்.

கிழக்கு மாகாண சபையின் பதவிக்காலம் எதிர்வரும் 2013 மே மாதத்துடன் நிறைவடையவுள்ள நிலையிலேயே முதலமைச்சர் சந்திரகாந்தன் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை ஒருபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கைப்பற்றவே முடியாது. அவ்வாறு நிகழ்ந்தால் நான் அரசியலிலிருந்தே ஒதுங்கிக் கொள்வேன். அடுத்த மாகாணசபைத் தேர்தலிலும் நான் முதலமைச்சர் வேட்பாளராகவே போட்டியிடுவேன் என்று கூறிய சந்திரகாந்தன் அரசுடன் இணைந்தா அல் லது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் சார்பிலா போட்டியிடுவார் என்பதைக் கூற மறுத்து விட்டார்.

கடந்த 2008ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி அரசுடன் இணைந்து போட்டியிட்டாலும் பின்னர் இடம்பெற்ற தேர்தல்களில் தனித்துப் போட்டியிட்டமையும் குறிப்பிடத்தக்கவை.

கிழக்கு மாகாண சபையின் பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் பொலிஸ், காணி, போக்குவரத்து, வீடமைப்பு, சுற்றுலா உட்பட 20 நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்படவுள்ளதாகவும் முதலமைச்சர் சந்திரகாந்தன் மேலும் தெரிவித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# சுத்த ஜனநாயகம் மலர்வது எப்போது?

ஆளும்கட்சியில் சேரும்போது, இணையும்போது தமக்குத் தருவதாக வாக்களிக்கப்பட்ட நிதி இதுவரை வழங்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் குறைப்பட்டிருக்கிறார். தம்மோடு கூட அரசாங்கக் கட்சியில் இணைந்த நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கும், அதேமாதிரி உறுதி அளிக்கப்பட்ட அபிவிருத்திக்கான நிதி கிடைக்கவில்லை என்றும் அவர் தகவல் தெரிவித்துள்ளார்.

அரச தரப்புக்குத் தாவினால் தமது தொகுதி மக்களுக்கும் தமக்கும் பல அனுகூலங்களை அள்ளிக் கொள்ளலாம் என்ற ஆசையில், ஆளுங்கட்சி அல்லாத தரப்பினர், பக்கம் மாறுவது எங்கள் நாட்டில் ஒன்றும் புதிதல்ல.

தமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்யலாம், தமது பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு மற்றும் சலுகைகளையும் பெற்றுக் கொடுத்து மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாவதற்கு வாய்ப்பை உண்டாக்கிக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடனும் - நப்பாசையுடனும் - அரசுப் பக்கம் பாய்ந்த எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை இந்நாட்டின் வரலாற்றில் மிகப்பல.

தமிழ்ப் பிரதேசங்கள் மற்றும் சிங்களப் பிரதேசங்களில் கட்சி மாறுதல் சர்வ சாதாரணம். ஒரு கொள்கைக்காகத் தேர்தலில் போட்டியிட்டு, எதிரான கட்சிக் கொள்கைகளைக் கண்டித்துப் பிரசாரக் கூட்டங்களில் முழங்கியவர்கள், சந்தர்ப்பத்துக்கு ஏற்பக் கட்சி மாறுவது, குறிப்பாக அரசுப் பக்கத்துக்குத் தாவுவது இந்த நாட் டில் தாராளமாகவே நடந்து வருகின்றது. இந்த வரிசையிலேயே பிரபா மனோ கணேசனும், திகாம்பரமும் அரசாங்கக் கட்சியில் சேர்ந்தனர்.

ஒருவர் இரண்டு தடவைகளுக்குக் கூடுதலாகவும் ஜனாதிபதியாகப் பதவி வகிக்க வகை செய்யும் அரசமைப்புக்கான பதினெட்டாவது சட்டத்திருத்தத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு எதிர்க்கட்சிகள் தரப்பில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசு தூண்டில் போட்ட காலத்தில்-

ஐக்கிய தேசியக் கட்சியின் சில உறுப்பினர்களை, ஆசை காட்டி அரசு வளைத்தெடுத்ததை அடுத்து, அந்தப் பக்கம் போய்ச் சேர்ந்தவர்கள்தான் பிரபா கணேசனும், திகாம்பரமும்.

தாம் சார்ந்த பிரதேசங்களை, பகுதிகளை அபிவிருத்தி செய்வதற்கென வழங்குவதாக உறுதி அளித்த நிதியை இன்னமும் கொடுக்கவில்லை என்று அவர்கள் அழும் நிலை வந்திருக்கிறது.

அரசாங்கத்துடன் சேர்ந்து மேலே குறிப்பிட்ட அரசமைப்புக்கான சட்டத் திருத்தத்துக்கு வாக்களித்து எட்டு மாதங்களாகியும் வாக்குறுதியை அரச தரப்பு இன்னமும் நிறைவேற்றவில்லை என்று ஆதங்கப்படுகிறார் பிரபா கணேசன்.

ஆனாலும், அரச தரப்பில் சேர்ந்தவேளையில் வாக்குறுதி தரப்பட்ட அபிவிருத்திக்கான நிதி கிடைக்காவிடினும், தாம் தொடர்ந்தும் அரசுக்கே தமது ஆதரவை வழங்கப் போவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத் தரப்பில் இருந்து வெளியேறினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை அவர் ஊகித்து உணர்ந்துவிட்டார் என்று கொள்ளலாம்.

அரசாங்கக் கதிரைகளில் வீற்றிருப்பவர்களாயினும் சரி, ஏனைய அரசியல்வாதிகளாக இருந் தாலும் சரி, மக்களின் மேம்பாட்டுக்கும் நாட்டு நலனுக்கும் முதன்மை கொடுத்தே உழைக்க வேண்டும். ஆனால் இந்த வாய்ப்பாட்டைப் பின்பற்றி நடப்பவர்கள் இலங்கையில் மிகக் குறைவு என்பது புதிய விடயமோ, பிந்திய தகவலோ அல்ல.

தமக்குக் கிடைக்கக்கூடிய நலன்கள், வெகுமதிகள் மற்றும் வெவ்வேறு நன்மைகளைக் கருதி, அரசியல்வாதிகள் மட்டுமன்றி கட்சிகளின் தலைமைப் பீடங்கள் கூட அரசின் நல்ல பிள்ளையாக இருந்து பெறக்கூடியவற்றைப் பெறுவோம் என்ற போக்குடன் செயற்படுவது இந்த நாட்டில் சகஜம்.

ஆளுந்தரப்பாக மாறும் எந்த அரசியல் கட்சியும் தனது செல்வாக்கை உயர்த்துவதற்காக வாக்குறுதிகளை வழங்குவதும் அவற்றை நிறைவேற்றாமல் விடுவதும்-

பின்னர் தேர்தல் நெருங்கும்போது சில மக்கள் நலன்நாடிய திட்டங்களைச் செயற்படுத்தி வெற்றிபெற முயல்வதும் - இலங்கையில் - தென்னிலங்கையில் - நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் ஒரு வழக்காகிவிட்டது.

ஜனநாயகம் எழுபத்தைந்து சதவீதமேனும் நிலவும் வேறு நாடுகளில், குறிப்பாக மேலை நாடுகளில், மக்கள் நலன் திட்டங்களுக்கும் நாட்டின் அபிவிருத்திக்குமே முதன்மை இடம் தந்து ஆட்சியும், அரசுகளும் இயங்குகின்றன.

இலங்கையில் அத்தகைய சுத்தமான ஜனநாயகம் எப்போதைக்காவது மலருமா என்று கனவு தானும் காணமுடியுமா?

# கிழக்கு மாகாண சபையின் காணிகள் பஸில் ராஜபக்ஷவின் கட்டுப்பாட்டில்

கொழும்பு, மார்ச் 2

கிழக்கு மாகாண சபையின் கீழுள்ள பெருந்தொகையான காணிகள் எந்தவொரு காரணங்களும் கூறப்படாமல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் சுவீகரிக்கப்பட்டு பல்வேறு திட்டங்களுக்காக வழங்கப் பட்டுள்ளதாக கிழக்கு மாகாண சபையின் காணி மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பாணமை மற்றும் லாஹுலுகல கரைப் பிரதேசத்திலுள்ள 100 ஹெக்டேயர் வரையான நிலம் உல்லாசப்பயணத்துறையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கெனத் தனியார்துறை சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

கடற்கரைகளைப் பாதுகாக்கும் திணைக்களம், இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம், வனவளப்பாதுகாப்புத் திணைக்களம், வனவாழ் உயிரினங்கள் திணைக்களம் போன்ற அரச நிறுவனங்களுக்கு இந்த நிலப்பரப்புக்கள் சொந்தமானவை எனவும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, மேற்படி நிறுவனங்களுடன் நேரடியாகப்பேசி, இடைத்தரக ரொரு வராகச் செயற்பட்டு சில திட்டங்களுக்கு அந்தக் காணிகளைக் கையளிப்பதால் அது தொடர்பாக மாகாண சபைக்கு எது வும் தெரியவரவில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

காணி நிலங்கள் தொடர்பாக அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் எந்தவொரு இணக்கப்பாடும் இல்லாதிருப்பதே இந்த நிலைப்பாட்டுக்குக் காரணம் எனவும் அவர் கூறினார். (த-22)

# இரட்டைக் குடியுரிமை விசா அனுமதியை நிறுத்தியது அரசு

கொழும்பு, மார்ச் 2

பாதுகாப்பு அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள உத்தரவுக்கு அமைய குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினால் வழங்கப்படும் இரட்டைக் குடியுரிமை விசா அனுமதி இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் திணைக்களத்தின் உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஊடகமொன்று இது தொடர்பாகக் குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரான சூலானந்த பெரேராவைத் தொடர்புகொண்டு கேட்டபோது -

தற்போதுள்ள இரட்டைக் குடியுரிமைக்கான விண்ணப்பப்படிவம் திருத்தங்களுக்கு உள்ளாக்கப்படவுள்ளதால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் புதிய விண்ணப்பத்துக்கு ஜனாதிபதியின் அனு மதி கிடைத்தன் பின்னர் மீளவும் இரட்டைக் குடியுரிமையைப் பெற முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

குடியுரிமை வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் நாட்டுக்குப் பொருளாதார இலாபத்தைக் கிடைக்கச்செய்வது குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக'ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் தெரிவிக்கையில் -

அரசினால் இருவிதமான போக்கு கையாளப்படுகின்றன. புலம்பெயர் தமிழர் தரப்பின் நிதிவளம் அவசியப்பட்டாலும், இது அவர்கள் இலங்கையின் குடியுரிமையைப் பெறு வதற்கான ஆற்றலை முடக்குவதற்கு அரசு மேற்கொள்ளும் முயற்சி எனவும், ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற்றும் வாய்ப்பு கைவிட்டுப்போனதால் சினமுற்றுள்ள ஜனாதிபதி புலம்பெயர் தமிழர் தரப்புக்கு வழங்கும் தண்டனை எனவும் அவர் தெரிவித்தார்.

(த-22)

# வேலணை மத்திய ம.வி. ஊடாக இ.போ.ச சேவையை ஆரம்பிக்குக

யாழ்ப்பாணம், மார்ச் 2

வேலணை சந்தியில் இருந்து மத்திய கல்லூரி ஊடாக ஊர்காவற்றுறைக்குச் செல்லும் வீதி போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டு நீண்டநாளாகியும் இந்த வீதியூடாக இ.போ.ச பஸ்சேவை இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதி ஊடாக வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய ஆரம்பித்துள்ளன. இந்த வீதியில் அனைத்து வாகனங்களும் பயணிக்கின்றபோதும் இ.போ.ச பஸ் மட்டும் இது வரை இந்த மார்க்கத்தில் தனது சேவையை ஆரம்பிக்கவில்லை.

இந்த வீதியில் இ.போ.ச பஸ், சேவையில் ஈடுபடாமையால் வேலணை மத்திய மகா வித்தியாலத்துக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் சிரமப்படுவதாக வித்தியாலய அதிபர் பொ. அருணகிரிநாதன் ஏற்கனவே சுட்டிக்காட்டி பஸ்சேவையை ஆரம்பிக்குமாறும் கேட்டிருந்தார்.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இ.போ.ச. பஸ் சேவையை இந்த வழித்தடத்திலும் உடன் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(த-7)

# உயிரியல் பல்வகைத் தன்மை தொடர்பான வேலைப் பட்டறை

யாழ்ப்பாணம், மார்ச் 2

சர்வதேச உயிரியல் பல்வகைத்தன்மை ஆண்டு நிகழ்வின் இரண்டாவது வேலைப் பட்டறை திருநெல்வேலி மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தாவர பிறப்புரிமை மூல வளங்கள் நிலைய உத்தியோகத்தர்களினால் நடத்தப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் விவசாயப் பணிப்பாளர் நாயகம் கமால் மான்கோட்டே, உணவு விவசாய நிறுவனத்தின் பிரதிநிதி, தாவர பிறப்புரிமை மூலவள நிதியத்தின் பணிப்பாளர் பி.டபிள்யூ ரட்ணசிறி, ஆராய்ச்சி உத்தியோகத்தர் என். பார்த்தீபன், புதிய கண்டுபிடிப்பு அலகின் பொறுப்பதிகாரி ... லகின் பொறுப்பதிகாரி ... அபிவிருத்தி அலகின் பொறுப்பதிகாரி டாக்டர் ஹெட்டப்பி ஆராய்ச்சி, மரபணு அலகின் பொறுப்பதிகாரி திருமதி பிரியந்தி, தரவுகள் பராமரிப்பு நிலையத்தின் பொறுப்பதிகாரி திருமதி ஸ்ரீமதி திசநாயக்க ஆகியோருடன் வடமாகாண விவசாயத் திணைக்கள விவசாயப் பணிப்பாளர் கே. சுப்பிரமணியம், வட மாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர்கள் மற்றும் விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி கலாநிதி திருமதி சி. சிவச் சந்திரன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

உயிரியல் பல்வகைத் தன்மை பற்றிய ஆர்வலர்கள் இந்த வேலைப்பட்டறையில் கலந்து கொள்ளலாம் எனவும் இது பற்றி விவசாயப் பணிப்பாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் யாழ்.விவசாய பணிப்பாளர் சி.சிவகுமார் அறிவித்துள்ளார். (த-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகர சபை வர்த்தக மையத்துக்கு கேள்வி அறிவித்தல் கோரப்பட்டதா?

## மக்கள் மத்தியில் சந்தேகம்

யாழ்ப்பாணம்,மார்ச் 2

யாழ்.நகரில் கஸ்தூரியார் வீதியில் யாழ்.மாநகர சபைக்குச் சொந்தமான நிலத்தில் அமைக்கப்பட்டுவரும் வர்த்தக மையம் தொடர்பாக வர்த்தக சமூகத்தினரிடமும் பொது மக்களிடமும் பலத்த சந்தேகமும் அதிருப்தியும் ஏற்பட்டுள்ளன.

ஐந்து மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்படவுள்ள இந்தக் கட்டடத் தொகுதிக்கு கடந்த 10 ஆம் திகதி யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா ஆகியோர் இணைந்து அடிக்கல் நாட்டி வைத்தனர்.

இந்த வர்த்தக மையத்தின் கட்டட நிர்மாணப்பணிகள் தனியார் ஒருவராலேயே மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிய முடிகிறது. இந்த நிலையில் யாழ். மாவட்டத்திலிருந்து வெளிவரும் ஊடகங்களில் இந்தக் கட்டடத்தை அமைப்பதற்கான கேள்வி அறிவித்தல் எதுவும் வெளியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு இருக்க இதற்கான ஒப்பந்தம் தனியாரிடம் எப்படிக் கைமாறியது என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. அப்படியாயின் இந்தக் கட்டடம் தனியாருக்கு உரியதா? அல்லது மாநகர சபைக்குரியதா? என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

இது மட்டுமன்றி இந்த வர்த்தக மையம் அமைக்கப் படும் நிலத்தில் ஏற்கனவே இயங்கி வந்த ஆறு கடைத் தொகுதிகளும் இடித்தழிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக யாழ். மாநகர சபையால் குறித்த கடைத் தொகுதிகளின் உரிமையாளர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்குப் புதிதாக அமைக்கப்படும் கட்டடத் தொகுதியில் இடம் வழங்கப்படவுள்ளது எனவும் மாநகர சபையால் கூறப்பட்டுள்ளது.

எனினும் புதிய கட்டடத் தொகுதியில் எந்த அடிப்படையில் அதாவது எவ்வளவு முற்பணம், எவ்வளவு மாதாந்த வாடகை என்பன குறித்து அவர்களுக்கு இன்னமும் அறிவிக்கப்படவில்லை. இது அந்தக் கடை உரிமையாளர்களுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும், புதிய வர்த்தக மையத்தின் கீழ்தளக் கடைத் தொகுதிகள் அதனை நிர்மாணித்து வரும் ஒப்பந்தகாரரான தனியாருக்குச் சொந்தமானது என்றும் அவரது சிபார்சுடனேயே அவை வாடகைக்கு விடப்படும் எனவும் மாநகரசபை முடிவெடுத்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இவையே பொதுமக்கள் மத்தியிலும் வர்த்தகர்கள் மத்தியிலும் அதிருப்தியும் சந்தேகமும் எழக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. எனவே இவை தொடர்பாக யாழ்.மாநகர சபையால் தெளிவான விளக்கம் அளிக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-14)

# 'நேர்ப்' திட்டத்தின் கீழ் இதுவரை 9ஆயிரத்து 11 வீடுகள் அமைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச்.2

உலக வங்கியின் நிதியுதவியுடன் 'நேர்ப்' திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் இதுஷெஷெவரை 9 ஆயிரத்து 11 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளதாகத் திட்டத்தின் மாவட்டப் பணிப்பாளர் த.சாம்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

வடக்கு-கிழக்கு வீடுகள் மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் (நேர்ப்) கடந்த 2004 ஆம் ஆண்டு முதல் வடக்கில் 13 ஆயிரத்து 350 வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதில் 14 பிரதேச செயலர் பிரிவுகளில் வீடுகள் அமைக்கும் பணிகளுக்காகப் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

ஐந்து கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த அபிவிருத்திப் பணியில் தற்போது ஐந்தாம் கட்ட வீடமைப்பு அபிவிருத்திப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்தக் கட்டத்தில் 2 ஆயிரத்து 606 வீடுகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக இதுவரை முதலாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவிட்டன.

13 ஆயிரத்து 350 வீடுகளில் தற்போது 9 ஆயிரத்து 11 வீடுகள் பூர்த்தியடைந்துள்ளன.

இன்னும் 4 ஆயிரத்து 339 வீடுகளை அமைக்கும் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன - என்றார். (த-9)

## தொன்மையான....



வரலாறு: சர்வதேச நாணயங்களின் கண்காட்சி சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. நாணயங்களைப் பார்வையிடும் மாணவிகள். (த)

# மனித உரிமை ஆணைக்குழுவினர் சிவில் அமைப்புக்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 2

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிவில் சமூகத்துக்கும் மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் இடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் விசேட கலந்துரையாடல் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் யாழ்.மத்திய கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து சிவில் அமைப்புகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.மாவட்ட இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் உள்ள சிவில் அமைப்புகளுக்கும் மனித உரிமை ஆணைக்குழுவுக்கும் இடையே தொடர்பினை வலுப்படுத்துவதற்கு இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மக்களின் பிரதிநிதிகளாக உள்ள சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களை எடுத்துரைப்பதன் மூலம் அவை சமூகத்தைச் சென்றடையும் என்ற நம்பிக்கை உள்ளது.

இதன் காரணமாகவே இத்தகைய ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது- என்றார். (த-9)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலைக்கு கல்வியமைச்சின் விசாரணைக்குழு

அச்சுவேலி,மார்ச் 2

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அண்மைக்காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இரண்டு உயர் அதிகாரிகள் உள்ளடங்கலாக மூவர் கொண்ட உயர் மட்டக்குழு மற்றும் மொழிபெயர்ப்பாளர் உள்ளடங்கிய அதிகாரிகள் சில தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து இந்த விசாரணைகளை மேற்கொண்டு கல்வி அமைச்சுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளனர்.

குறிப்பிட்ட சிலர்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இந்தக்குழுவினர் உண்மைநிலையைக் கண்டறிவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை தொடர்பாகக் கல்வி அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டமையை அடுத்து இந்த விசாரணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. (த-11)

# நெடுந்தீவுத் துறைமுகம் ஆழமாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படாதது ஏன்?

## நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டபோதும் இந்த நிலை

நெடுந்தீவு,மார்ச் 2

நெடுந்தீவுத் துறைமுகப் பகுதியை ஆழமாக்கும் பணிகளுக்கு நிதி வழங்கப்பட்டுள்ள போதும் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தற்சமயம் நெடுந்தீவுச் சேவைக்கென வந்துள்ள வடதாரகை தனது சேவையை வழங்க முடியாமல் துறைமுகத்தில் நங்கூரமிட்டுள்ளது.

இதேவேளை குமுதினிப் படகும் இன்னும் தனது சேவையை ஆரம்பிக்கவில்லை. இதனால் மக்கள் வழமைபோன்றே நெடுந்தீவுக்குத் தமது பயணத்தை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

குமுதினிப் படகின் [illegible] கள் பூர்த்தியடைந்துள்ள[illegible] சமீபத்தில் தகவல்கள் கிடைத்த போதும் இயந்திரத்தில் உள்ள பழுதுகள் திருத்தி முடிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

துறைமுகப் புனரமைப்புக்கென நிதி வழங்கப்பட்டுள்ள போதும் பணிகள் ஆரம்பமாகாதிருப்பது குறித்து [illegible] (த-110)

# நெடுந்தீவில் புதிய ஆலயத்தை யாழ்.ஆயர் திறந்து வைப்பார்

நெடுந்தீவு,மார்ச் 2

யாழ்.மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நெடுந்தீவுக்கு வருகை தரவுள்ளார்.

நெடுந்தீவுத் துறைமுகத்தில் ஆயரை நெடுந்தீவுப் பங்குத்தந்தை அருட்திரு அமலராஜ் தலைமையில் மதவேறுபாடுகளின்றிப் பொதுமக்கள் வரவேற்பார்கள். அன்றைய தினம் மாலை 4 மணிக்கு தூண்காலை குடியேற்றத்திட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இறை இரக்க ஆண்டவர் ஆலயத்தை ஆயர் திறந்து வைப்பார்.

நெடுந்தீவில் மூன்று தினங்கள் தங்கியிருக்கும் ஆயருக்கு புனித யுவானியார் தேவாலயத்திலும் வரவேற்பு வழங்கப்படும். இங்கு உள்ள கத்தோலிக்க தேவாலயங்களையும் சென்று பார்வையிடுவதுடன் திருப்பலிப் பூசைகளையும் ஒப்புக் கொடுப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(த-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் நிலையங்களில் தொடர்ந்தும் தனிச் சிங்களத்திலேயே முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்.2


குடாநாட்டில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்கச் செல்லும் பொதுமக்கள் தொடர்ந்தும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸ் நிலையங்களில் பொதுமக்களால் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் தமிழில் பதிவு செய்யப்படாமையே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்கள் அனைத்திலும் பொதுமக்கள் தமிழில் முறைப்பாடு செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக அரசு தொடர்ந்து தெரிவித்து வருகின்றது.

பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லும் மக்கள் தமது முறைப்பாடுகளைத் தமிழில் மேற்கொள்ள முடியும் எனவும் பின்னர் அவற்றைத் திருப்பி வாசித்து அதன் கீழ் கையொப்பம் இடமுடியும் எனவும், முறைப்பாடு செய்தமைக்கான பிரதியும் தமிழிலேயே வழங்கப்படுவதாகவும் அரசு தொடர்ந்து தெரிவித்துவருகின்றது.

எனினும் இந்த நடவடிக்கை பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் இதுவரை நடைமுறைக்கு வரவில்லை என்று முறைப்பாடு செய்யச் செல்லும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.




தமிழில் முறைப்பாடுகளை மேற்கொள்ள வசதியாக அண்மையில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஆள்சேர்ப்புச் செய்யப்பட்ட தமிழ் பொலிஸாரும் பயிற்சிகளை முடித்த பின்னர் யாழ்.மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களிலேயே கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகவும், மேலும் ஒரு தொகுதி தமிழ் இளைஞர், யுவதிகளைப் பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் தொடர்ந்து தெரிவித்து வருகிறார்.

இந்த நிலையில் தொடர்ந்து பொலிஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடு பதிவு செய்யப்படாமை குறித்து மக்கள் மத்தியில் கடும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு செய்யச் சென்ற ஒருவருக்கு முறைபாடு பதிவு செய்யப்பட்ட பின்னர் அதற்கான பிரதி தனிச் சிங்களத்திலேயே வழங்கப்பட்டது. அதனையே இங்கு காண்கிறீர்கள்

இந்தச் செயற்பாடு இங்குள்ள பல பொலிஸ் நிலையங்களில் தொடர்ந்து நடைபெறுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். (த)

## முதலையைக் கண்டு பதற்றமடைந்ததால் வீதி விபத்து

தென்மராட்சி, மார்ச். 2

மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்தவர் வீதியின் குறுக்கே ஓடிய பெரிய முதலையைக் கண்டு பதற்றத்தில் மோட்டார் சைக்கிளை நிறுத்த முயற்சித்த வேளையில் தூக்கி வீசப்பட்டு காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த 26 ஆம் திகதி வரணி, முள்ளியில் இடம்பெற்றது. வரணியைச் சேர்ந்த ரி.சபிதாசன் (வயது 35) என்பவர் காயமடைந்தார்.

இதேவேளை கொடிகாமம் பகுதியில் ரியூசனுக்குச் செல்வதற்காக அவசரமாக முகம் கழுவச் சென்ற மாணவன் கிணற்றடியில் காணப்பட்ட பாசியில் சறுக்கி வீழ்ந்து காயமடைந்த சம்பவம் நேற்று இடம் பெற்றது.

இதே இடத்தைசேர்ந்த செ.லக்ஸன் (வயது-10) என்பவரே காயமடைந்தவராவர். காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (த-207)

# இலவச பயிற்சி வகுப்புகள் பச்சிலைப்பள்ளியில் ஆரம்பம்

பளை,மார்ச் 2

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையின் இலவச கணினி, தையல் ஆகிய பயிற்சி வகுப்புகள் கடந்த 22 ஆம் திகதி பேரவையின் அலுவலகக் கட்டடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பேரவைத் தலைவர் க.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு பயிற்சி வகுப்புக்களை ஆரம்பித்து வைத்தார்.

பிரதேச படைஅதிகாரி மற்றும் பேரவையின் லண்டன் கிளையின் பிரதிநிதி சிவபாலராஜா உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

பயிற்சிக்குத்தேவையான கணினிகள், தையல் இயந்திரங்கள் ஆகியவை வெளிநாடுகளில் உள்ள பளைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்களால் வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (207)

## நெல் அறுவடை பணியாளர் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், மார்ச். 2

அரியாலை கிழக்கு, செம்மணி மற்றும் நாயன்மார்கட்டுப் பகுதிகளில் நெல் அறுவடை செய்யும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

இந்தப் பகுதிகளில் அறுவடை செய்து சூடு மிதிப்பதற்கு போதிய தொழிலாளர்கள் இன்றி விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

அரியாலை கிழக்கு பகுதியில் பல ஆண்டுகளின் பின்னர் இம்முறை பெரும்போக நெல் செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் நல்ல விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். (த-26)

**உழைப்பின் பலன்...**



மகிழ்ச்சியுடன்: காரைநகர் பிரதேசத்தில் நெல் அறுவடை தற்போது மும்முரமாக இடம்பெற்று வருகின்றது. காரைநகரில் உள்ள வயல் ஒன்றில் தொழிலாளர்கள் சூடடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். (த-250)

## மாணவருக்கு கல்வி ஊக்குவிப்புக் கொடுப்பனவு

கோப்பாய் தேசியக் கல்வியியற்கல்லூரியில் பயிற்சி பெற்றுவரும் வன்னிப் பெரு நிலப் பரப்பைச்சேர்ந்த29 மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புக்கான கொடுப்பனவுகள் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை கோப்பாய் சத்திய சுயம் புலிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

ஹவாய் சுப்பிரமுனிய சுவாமிகள் ஆச்சிரம ரிஷி தொண்டுநாத சுவாமிகள் மற்றும் ஆச்சிரம தொண்டர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆலயத்தில் சிவராத்திரி விழாவை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகளும் நடைபெறவுள்ளன. (த-11)

# வீதிகளின் அகலிப்புப் பணிகள் மீண்டும் இவ்வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்.2

யாழ்.நகரப் பகுதியில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை யின் கீழ் உள்ள வீதிகளுக்குக் 'காப்பெற்' போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது ஸ்ரான்லி வீதிக்குக் 'காப்பெற்' போடும் பணிகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இந்த வீதிக்கு ஏற்கனவே 'காப்பெற்' போடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அண்மையில் பெய்த மழையினால் அது கைவிடப்பட்டிருந்தது. தற்போது ஸ்ரான்லி வீதியில் வெலிங்டன் சந்தியில் இருந்து இராசாவின் தோட்டச் சந்திவரைக்கும் 'காப்பெற்' போடும் பணிகள் நடைபெறுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் 'காப்பெற்' போடும் பணிகள் ஒட்டுமடம் சந்திவரையும் நடைபெறும்.

இதேவேளை-

பருத்தித்துறை வீதியின் அகலிப்புப் பணிகளும் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

கோப்பாய் வரைக்கும் இடம் பெற்று இடைநிறுத்தப்பட்டுள்ள இந்த அகலிப்புப் பணிகள் மீண்டும் இந்த வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி கூறினார்.

தற்போது அகலிப்புப் பணிக்கு முன்னர் இந்த வீதியில் உள்ள பாலங்களை அகலமாக்கிப் புனரமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன என்றும் பூதர்மடம் பகுதியில் உள்ள பாலம் அகலமாக்கிப் புனரமைக்கப்பட்டுள்ளது என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

பாலங்களின் புனரமைப்பு முடிந்ததும் வீதிகளின் அகலிப்பும் விரைவில் ஆரம்பமாகும் எனவும் அந்த அதிகாரி மேலும் கூறினார். (த-26)

# குடியமர அனுமதிக்காத பகுதிகளின் விவரம் திரட்டும் பிரதேச செயலகங்கள்

சண்டிலிப்பாய், மார்ச் 2

வலி. வடக்கு பிரதேசத்தில் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் மீள் குடியமர்வதற்காக விடுவிக்கப்பட்ட பிரதேசம், விடுவிக்கப்படாத பிரதேசம் பற்றிய விவரங்களைத்திரட்டுவதில் பிரதேச செயலகங்கள் ஈடுபட்டுள்ளன.

இதுபற்றி வலி. வடக்கு பிரதேச செயலரினால் உறுதிப்படுத்துவதற்கான விண்ணப்பப் படிவங்கள் தற்பொழுது கிராம உத்தியோகத்தர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. வலி. வடக்கில் கண்ணிவெடி அகற்றப்பட்ட பிரதேசங்களில் இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்கள் அவர்களின் சொந்த இடங்களில் படிப்படியாக மீளக் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள்.

அநேகமான குடும்பங்கள் பல காரணங்களைக் கூறி மீளக் குடியமர முன்வரவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட இடங்கள், அனுமதிக்கப்படாத இடங்கள் போன்ற உண்மையான விவரங்களை அறியமுடியாத நிலை பிரதேச செயலகங்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இது பற்றி வலி. வடக்கு பிரதேச செயலர் மூலம் உறுதிப்படுத்துவதற்காக ஒவ்வொரு பிரதேச செயல கங்கள் மூலமும் இதற்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர், தற்போது இந்தப் பிரதேசம் உயர்பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்டது, பகுதி விடுவிக்கப்பட்ட பிரதேசம், விடுவிக்கப்பட்ட பிரதேசம், இந்தப் பிரதேசத்தில் சொந்தக் காணி உண்டு/ இல்லை போன்ற விவரங்கள் வலி.வடக்குப் பிரதேச செயலரினால் உறுதிப்படுத்த வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (த-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை

வயலும் வயல் சார்ந்த வன்னி வள நாட்டின் பண்டாரவன்னியனின் வரலாறுகள் தடம் பதித்து நிற்கும் கற்சிலைமடு நாகம்மாள் ஆலயத்துக்கு முன்பாகப் புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் வீதியிலே பழைமையும் புதுமையும் சார்ந்த பாடசாலையாகக் கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை விளங்குகிறது.

1933 ஆம் ஆண்டு இப் பாடசாலை ஒரு சிறிய கொட்டிலாக உருவெடுத்தது. இக் கிராமத்தில் அன்றைய காலகட்டத்தில் எமது முன்னோர்களின் பிள்ளைகள் கற்சிலைமடு தான்தோன்றீஸ்வரர் ஆலயத்துக்கு அருகில் ஓலைக் கொட்டிலை அமைத்துக் கல்வி கற்றனர். அன்றைய காலகட்டத்தில் இக்கிராமத்தில் 27 குடும்பங்கள் பழைய குடியிருப்பு, சிவலிங்கக் குடியிருப்பு என்னும் குக்கிராமங்களில் வசித்து வந்தனர். அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்து இறந்து விடுவார்கள். 50 பிள்ளைகள் பிறந்தால் ஒன்று இரண்டு பிள்ளைகளே எஞ்சிநிற்கும். இது ஒரு தெய்வக் குறைபாடு எனக் கண்ட முதியோர்கள் திருகோணமலை சென்று பிராமணக் குருக்கள் ஒருவரிடம் தமது குறைபாட்டைத் தெரிவித்ததன் பயனாக ஊரைக் காவல் பண்ணித் தகடு ஒன்றை ஓர் இடத்தில் வைத்து வணங்கி வந்ததால் பிள்ளைகள் இறப்பது குறைவடைந்தது. அதன் பின்னரே பிள்ளைகளுக்கான பாடசாலை ஒன்றைக் கிராம மத்தியில் அமைக்க எண்ணிய பெரியவர்கள் இப்பாடசாலையை நிறுவினர். இதனைக் கட்டடமாக்கவேண்டும் என்ற டி. ஆர். ஓ. முதலிமார்களின் பெரு முயற்சியால் இப்பாடசாலை 20 அடி நீளம் 10 அடி அகலமான கட்டடமாக 1933 ஆம் ஆண்டு உருப்பெற்றது. அதன் ஆரம்ப கால அதிபராகப் பொன்னம்பலம் என்பவரும் நியமனம் பெற்றார்.

இக்கிராம வாசிகள் விவசாயத்தையும் கால்நடைகளையும் நம்பியே இருப்பவர்கள். புதிது புதிதாகக் காடுகளை வெட்டி நெல், குரக்கன், எள், உழுந்து போன்றவற்றைச் செய்கை பண்ணுவதில் ஊக்கம் கொண்டவர்கள். இவர்களால் செய்கை பண்ணப்பட்ட பயிர்களுக்கு காட்டு விலங்குகள், பறவையினங்களால் அழிவுகள் ஏற்பட்டதால் இவர்கள் படிப்பில் அக்கறை காட்டாது வயல் காவல்களில் கூடுதலான கவனத்தைச் செலுத்தினர். அதன் காரணமாக 1955 ஆம் ஆண்டு எல்லைக்குள் கல்வியில் தேறியவர்கள் எவரும் இங்கு இல்லை. இங்கு கற்பித்த ஆசிரியர்கள் கூட வன்னியில் கிடைக்கின்ற பச்சை அரிசி, முட்டை, கோழி, மான், மரை, பன்றி ஆகியவற்றின் இறைச்சி, தவிடு, வாழை இலை போன்றவற்றை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கான தேடல்களுக்கு மாணவர்களைப் பயன்படுத்தினார்களே யொழிய கற்பித்தலில் ஈடுபடுவதில்லை. இதனால் அக்காலப் பகுதி மக்களின் பிள்ளைகள் கூடுதலாகப் பெருவிரல் அடையாளத்தை மட்டுமே இடுவார்கள். இவர்களுக்குக் கடிதம் வாசிக்கத் தெரியாது. வாசிப்பதற்கு எங்கெல்லாமோ கொண்டு செல்வர். இப்படியாகப் பாடசாலை நிலைமைகள் போய்க் கொண்டிருந்தன. பின்பு மக்கள் புதுக்குடியிருப்பு வீதிக் கருகாமையில் உள்ள காடுகளை அழித்துக் குடியேறத் தொடங்கினர். பாடசாலையிலும் ஒன்றிரண்டாக 55-60 பிள்ளைகள் கல்வி கற்றார்கள். அதிபர் அந்தோனிப்பிள்ளையை அடுத்துக் கரவெட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை, உடுப்பிட்டி சமரபாகுவைச் சேர்ந்த நாகரத்தினம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முத்துலிங்கம், ஒட்டுசுட்டானைச் சேர்ந்த தில்லையம்பலம், அதனை அடுத்து வட்டுப்பிட்டியைச் சேர்ந்த அருமைச்சந்திரன் தற்போது இதே இடத்தைச் சேர்ந்த சி. நாகேந்திராசா ஆகியோர் தலைமை ஆசிரியர்களாகப் பொறுப்பேற்று கல்வி கற்பித்தனர். 1960 ஆம் ஆண்டு காலப் பகுதியில் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்த நாகரத்தினம் என்னும் ஆசிரியர் கற்பித்தல் நடவடிக்கைகளில் மிகவும் அக்கறைகொண்டு கற்பித்தலில் ஊக்கமெடுக்கச் செய்தார். அவர் காலத்தில் அவரிடம் கற்றலில் ஈடுபட்ட மாணவர்களில் சிலர் பதவிகளை வகித்து இளைப்பாறியுள்ளனர். சிலர் கல்வியில் சிறந்த பெறுபேறுகள் பெற்று உயர் கல்விக்காக ஓமந்தை மகாவித்தியாலயமும் சென்றதுண்டு. 5 ஆம் வகுப்புவரை இருந்த பாடசாலை படிப்படியாக வளர்ந்து J.S.C வகுப்புவரை வளர்ந்து பின்பு க.பொ.த. சாதாரண தரம் வரை வளர்ந்தது. மாணவர் தொகையும் 300 இலிருந்து 400 ஆக உயர்ந்து கொண்டிருந்தது. இப் பாடசாலையின் வளர்ச்சி கண்ட பெற்றோர்கள் ஆசிரியரைச் சந்தித்து பிள்ளைகள் மர நிழலில் நிலத்திலே இருக்கிறார்கள், இதற்கு என்ன செய்யலாம் என ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். அப்போதுள்ள வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் எக்ஸ். எம். செல்லத்தம்பு, தா. சிவசிதம்பரம் ஆயோரை இவர்கள் நாடியதன் பயனாக இன்னொரு 100 அடிக் கட்டடம், தளபாட உதவிகளுடன் ஆசிரியர்கள் 6 பேரும் கிடைத்தனர். தொடர்ந்து இப் பாடசாலையின் வளர்ச்சிக்கும் காரணமாக இருந்தவரும் பாடசாலையில் அக்கறை கொண்டவருமாகிய உடுப்பிட்டி, சமரபாகுவைச் சேர்ந்த அமரர் நாகரத்தினம் தலைமையாசிரியரை நினைவு கூருவது சாலப் பொருத்தமாக இருக்கும். இவர் காலத்திலே பயின்ற கற்சிலைமடு வைச் சேர்ந்த மாணவர்களில் பலர் கிராம அலுவலர்களாகவும் தபால் ஊழியராகவும் இதே பாடசாலைக்கு ஆசிரியராகவும் பொறியியலாளராகவும் வங்கி ஊழியர்களாகவும் பஸ் நடத்துநர்களாகவும் பிறப்பு இறப்புப் பதிவுகாரர்களாகவும் சிறந்த கலைஞர்களாகவும் ஆங்கில அறிவுடையவர்களாகவும் இன்றும் இருக்கின்றனர்.

இராஜ் தனபால்

(தொடரும்)

# திட்ட முன்மொழிவு தொடர்பான கூட்டம்

முல்லைத்தீவு,மார்ச் 2

2011 ஆம் ஆண்டின் திட்ட முன்மொழிவு தொடர்பான கூட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கிராம அலுவலர்கள், கமக்கார அமைப்புக்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் என்பவனவற்றின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் இடம்பெற வேண்டிய வேலைத் திட்டங்கள் முன்மொழியப்பட்டு இவை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன. பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் தமது பகுதியில் இடம்பெறவேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகக் கருத்துக்களை வெளியிட்டனர். இவை யாவும் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. காலை 8 மணி முதல் பி.ப. 3 மணிவரை இந்தக் கூட்டம் நடைபெற்றது.

(க-500)

**அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது**

மேற்படி நலன்புரி சங்கத்தினால் 02.03.2011 இல் நடத்தப்பட விருந்த அதிர்ஷ்ட லாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் 02.04.2011 ஆம் திகதி நடைபெறும் என அறியத்தருகின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.
(923) (44-19)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No. 1 புறோயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் 03.03.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

| | |
|---|---|
| ★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை | 0778996085 |
| ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு | 0776904590 |
| ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி | 0774656377 |
| ★ முகுந்தன், பருத்தித்துறை | 0771392593 |

நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் லேன், நல்லூர்.
தொ.பே இல:- 021 222 6944.

## மரண அறிவித்தல்

### செல்லையா இராசா



(முன்னாள் ஊழியர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம் )

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசா 26.02.2011 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் மனோன்மணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, சின்னத்துரை, பொன்னுத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சிப்பிள்ளை, தங்கச்சிப்பிள்ளை, கோசலை, செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயச்சந்திரன், காலஞ்சென்றவர்களான மல்லிகாதேவி, சந்திராதேவி மற்றும் கமலாதேவி (கனடா), ரஞ்சன் (கனடா), விமலாம்பாள் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சகுந்தலாதேவி (பரிஸ்), நீலகண்டன் (வல்வெட்டி), மகேந்திரம் (கனடா), வல்லிபுரம் (கனடா), ராஜலக்சுமி (கனடா), சிவசுப்பிரமணியம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் சுபாஸ்கரன், யாழினி, சுபாஜினி, நிருபன், ரஜிகரன் மனோஜா, ரசோஜினி ஜீவகுமார், கீர்த்தனா சுபாஸ்கரன், டயானி, மாதுரி, ரம்யா ஜெனித்தா, மிதுனா, பவித்திரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆரதி, ராகவி, சாரங்கி, சுவேதா, அஜித், அனுசிறி, அபிசா, நிவிசா, சந்தியா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.03.2011) புதன்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெறாமகன் - கந்தசாமி தியாகராசா
மகள் - கமலா (கனடா).
தொ.பே: 001 905 239 5090

சூராவத்தை,
சுன்னாகம். (924) (44-19-21)

# பழைய மாணவர் ஒன்றுகூடல்

கிளிநொச்சி,மார்ச் 2

கிளிநொச்சி, கண்டாவளை மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளதாகப் பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார்.

பாடசாலை மண்டபத்தில் பி.ப.4 மணியளவில் பாடசாலை அதிபர் திருமதி கோமதி மதியழகன் தலைமையில் நிகழ்வு ஆரம்பமாகும்.

இதில் பாடசாலையின் அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பாகக் கலந்துரையாட இருப்பதால் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறும் பாடசாலை அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (க)

**இறைச்சிக்கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர் சுத்தம் செய்தது (1kg 430/=). கல்பேட் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்
19,முருகேசர் லேன், நல்லூர்.
(757) T.P: 021 222 6944 [19-21]

For G. C. E A/L 2011, 2012 & 2013 Students

**வெளிவந்துவிட்டது**

'இரசாயனவியல் - புதிய பாடத்திட்டப் பகுதிகள்'
குறிப்புகள் - உதாரணங்கள் - பயிற்சிகள் - விடைகள்
ஆசிரியர்:K.Vanimuhunthan B.Sc, Dip.in.Ed.
T.P. 0777172715
★ குடாநாட்டின் அனைத்துப் பிரபல புத்தக சாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
[787] [45-19-21]

**அறை வாடகைக்கு**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில்
[illegible]
அமைதியான சூழலில் அறை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 077 9238376 [021] (45-19-21)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்



செல்வன்
இராசேந்திரம் கருணாகரர்

(யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவன், முகாமைத்துவ உதவியாளர் - மாவட்ட புனர்வாழ்வுச் செயலகம், வவுனியா)

திதி:
அபரபக்க திரயோதசி

தோற்றம்:
18.05.1982

மறைவு:
05.03.2008

பாசமும் பரிவான பொன் மொழியும்
அன்பாலும் பண்பாலும் புன் சிரிப்புடன்
அனைவரையும் கவர்ந்துவிட்டு
அவனியில் எம்மைவிட்டு அகன்றதேனோ?
அழியா நினைவுகளாய் என்றும் நீ
எம் நெஞ்சில் வாழ்ந்திடுவாய் மகனே

சுதுமலை தெற்கு. (48,25,26) குடும்பத்தினர்

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:
02.02.1949

இறைவன் அடியில்:
02.03.2001

அமரர் பஸ்ரியாம்பிள்ளை யோசப் (யோகநாதன்)

பத்தாண்டுகள் ஓடி ஒழிந்தாலும்
உங்கள் நினைவு ஒழிந்திடுமோ
ஒளிவீசும் உங்கள் முகம் காண
ஒவ்வொரு நொடியும் ஏங்கித் தவிக்கின்றோம்.

விழிநீரில் திரிபோடும்
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், செல்வநாயகம் குடும்பத்தினர்.

இல.07, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (48,19,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைபாடுகளுடன் பூநகரி வைத்தியசாலை; நோயுடன் அலைந்து திரியும் மக்கள்

பூநகரி,மார்ச் 2

பூநகரியில் இயங்கும் வைத்தியசாலையில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதால் நோயாளர்கள் சிரமங்களை அனுபவிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பூநகரிப் பிரதேசத்தில் தற்பொழுது இயங்கிவரும் அரச வைத்தியசாலை போதிய இட வசதி, அடிப்படை வசதிகள் இல்லாமலும் ஆளணிப்பற்றாக் குறையுடனும் பாதுகாப்பற்ற சிறிய கட்டடத்தில் இயங்கி வருவதால் அங்கு செல்லும் நோயாளர்கள் தகுந்த சிகிச்சை பெறமுடியாமல் 30 கி.மீற்றருக்கு அப்பால் உள்ள கிளிநொச்சி அரச வைத்தியசாலையை நாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இந்த நிலை குறித்துக் கவலை தெரிவித்துள்ள இப்பகுதி மக்கள், சீரான போக்குவரத்து வசதியின்றிக் கஷ்டப்படும் மக்களின் நலன்கருதி மேற்படி வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்திசெய்து தரும்படி சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர்.

பூநகரிப் பிரதேசத்தில் பல வசதிகளுடனும் தேவையான ஆளணியுடனும் சொந்தக் கட்டடத்தில் இயங்கிவந்த பூநகரி அரச வைத்தியசாலை போர்க் காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து மூடப்பட்டது.

நாட்டில் தற்பொழுது சமாதானச் சூழல் ஏற்பட்டதைத் தொடர்ந்து சிவில் நிர்வாகம் படிப்படியாக அமுல்படுத்தப்பட்டு வருவதுடன் இடம்பெயர்ந்த மக்களும் மீள்குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். இதனால் பூநகரிப் பிரதேசத்தில் அரச வைத்தியசாலை ஒன்று திறந்து வைக் கப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்குச் சொந்தமான சகல வசதிகளையும் கொண்ட கட்டடத்தில் பாதுகாப்புப் படையினரின் முகாம் இயங்குவதால் கதவுகள் இல்லாத பாதுகாப்பற்ற ஒரு சிறிய வீட்டில் வசதியீனங்களுக்கு மத்தியில் ஒரு வைத்தியருடனும் ஒரு சில பணியாளர்களுடனும் தற்பொழுது வைத்தியசாலை இயங்கி வருகிறது.

கடந்த காலங்களில் மூன்று வைத்தியர்களுடன் இயங்கி வந்த மேற்படி வைத்தியசாலையில் ஆண், பெண் நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறக்கூடிய வசதிகள் இருந்ததுடன் வைத்தியர்களுக்கான விடுதிகளும் அமைக்கப்பட்டிருந்தன. தற்பொழுது இந்த வசதிகள் இல்லாததினால் இங்கு கடமையாற்றும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த வைத்தியர் இராணுவ முகாமில் தங்கியிருந்தேவைத்தியசாலைக்கு வருகிறார். குடிதண்ணீர் வசதியையும் மின்சார வசதியையும் பாதுகாப்புப் படையினரே வழங்கி வருகிறார்கள்.

இந்தப் பகுதியிலுள்ள கர்ப்பிணிகளுக்குப் போதிய சிகிச்சை அளிப்பதற்கு வசதிகள் இல்லாததால், இவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையை நாட வேண்டியுள்ளார்கள். சீரான போக்குவரத்து வசதியின்றி அல்லற்படும் இப்பகுதி மக்களின் நலன்கருதிச் சகலருக்கும் சிகிச்சை அளிக்கக்கூடிய வகையில், வைத்தியசாலைகளில் வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு இப்பகுதி மக்கள் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளனர். (க-115)

## பல்கலைக்கழக மாணவர்களுக்கு பாதிப்பு

முல்லைத்தீவு,மார்ச் 2

வன்னிப் பகுதியிலிருந்து மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவர்கள் தொடர் அடைமழை காரணமாகப் பல இடர்களை எதிர்கொண்டு மிகுந்த பாதிப்புடன் வந்து சேர்ந்துள்ளனர்.

மழை தொடரும் என ஊடகங்கள் மூலம் அறியவருவதனால் மீண்டும் அவர்கள் அங்கு செல்ல அச்சமடைந்த நிலையில் உள்ளதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் தாம் பட்ட அவலங்களை எடுத்துக் கூறியதுடன் தாம் தப்பி வருவோம் என்றுகூட நினைக்கவில்லை எனக் கூறினர். மீண்டும் மழை தொடருமானால் என்ன ஏற்படுமோ என அவர்கள் அச்சமும் தெரிவித்தனர்.

(க-500)

# வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவில் 78 வேட்பாளர்கள் களத்தில்

வவுனியா,மார்ச் 2

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வவுனியா தெற்குத் தமிழ்ப்பிரிவு பிரதேச சபைக்கு 78 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேச சபைக்குப் பத்து உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இந்த நிலையில் ஐந்து அரசியல் கட்சிகளும் ஒரு சுயேச்சைக் குழுவுமாக 78 வேட்பாளர்கள் களத்தில் இறங்கியுள்ளனர்.

இந்தப் பிரதேச சபைப் பிரிவில் 86 கிராமங்கள் உள்ளன. இதன் மொத்தப் பரப்பளவு 188 சதுர கிலோமீற்றர் ஆகும். மொத்தமாக 48,477பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் உள்ளனர்.

இதேவேளை 10,955 வாக்காளர்களைக் கொண்ட வவுனியா வடக்குப் பிரதேச சபைக்கு 13 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 68 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். 18,925 வாக்காளர்களைக் கொண்ட வெங்கல செட்டி குளம் பிரதேச சபைக்கு 9 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இதைப்போன்று வவுனியா தெற்குப் பிரதேச சபைக்கு 9 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இவர்களை 9,633 பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் தெரிவு செய்வார்கள். இந்த நிலையில் இங்கு 78 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.(க)

**அயராத முயற்சி...**



வெற்றிக்குப் பரிசு: முல்லைத்தீவு செம்மலை மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியின்போது பாடசாலை அதிபர் என்.விஜயரட்ணம் உரையாற்றுகின்றார். வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கிருஸ்ணகுமார் வெற்றிபெற்ற வீராங்கனை ஒருவருக்குக் கேடயம் வழங்குகின்றார். (555)

# மருத்துவர் பற்றாக்குறை காரணமாக அக்கராயன் மருத்துவமனையில் நெருக்கடி

கிளிநொச்சி,மார்ச் 2

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் நிலவும் மருத்துவர்களின் பற்றாக் குறையினால் அங்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளர்கள் நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மருத்துவமனையில் இரண்டுக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் பணியாற்ற வேண்டும். ஆனால் தற்போது ஒரு மருத்துவர் மட்டுமே கடமையாற்றி வருகின்றார். இதனால் அவர் விடுப்பு எடுக்க முடியாத நிலையிலுள்ளார். அவர் விடுப்பில் செல்லும்போது உள், வெளி நோயாளர்கள் சிகிச்சை பெற முடியாதநிலை காணப்படுகின்றது.

இந்த வேளைகளில் பதில் பணியாற்றவரும் உருத்திரபுரம் மருத்துவமனையின் மருத்துவர் முற்பகலிலேயே தமது கடமைகளை முடித்துக்கொண்டு உருத்திரபுரம் திரும்பிவிடுவார். இதனால் பிற்பகலில் வெளிநோயாளர் பிரிவு செயலிழந்து காணப்படுகிறது.

இந்த மருத்துவமனை சுற்றயல்கூறு மருத்துவமனையாகச் செயற்பட்ட காலத்தில் இரு மருத்துவர்கள் பணியில் இருந்தனர். ஆனால் அவர்கள் இருவரும் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டனர்.

அக்கராயன் மருத்துவமனையை நம்பி வன்னேரிக் குளம், ஆனைவிழுந்தான்குளம், அமைதிபுரம், ஆரோக்கியபுரம், ஸ்கந்தபுரம், கோணாவில், யூனியன் குளம், முக்கொம்பன் ஆகிய கிராமங்களில் மீள்குடியமர்ந்த மக்கள் உள்ளனர்.

ஆகவே இந்த வைத்தியசாலையில் நிலவும் மருத்துவர் பற்றாக்குறையை நீக்கித் தமக்கு உதவவேண்டுமெனப் பாதிக்கப்பட்ட மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

# குண்டும் குழியுமான வீதியால் துன்பத்தில் துவளும் மக்கள்

கிளிநொச்சி, மார்ச் 2

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி தம்பிராய் சந்தியில் இருந்து நாலாம்கட்டைச் சந்தி வரையான நான்கு கிலோ மீற்றர் நீளம் கொண்ட வீதி குண்டும் குழியுமாக மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றது.

அத்தோடு பெரியதம்பிராய்ப் பகுதியில் பெரியதம்பிராய்க் குளம் நீர் நிரம்பி வீதிக்குக் குறுக்காகப் பாய்வதால் இவ்வீதியின் பல இடங்களில் பள்ளங்கள் ஏற்பட்டுள்ளன.

இதனால் இவ்வீதியால் பயணம் செய்யும் நல்லூர் ம.வி, செல்லையாதீவு அ.த.க. பாடசாலை, தம்பிராய் அ.த.க.பாடசாலை மாணவர்களும் தம்பிராய் காவாக்குளம் நாலாம் கட்டை, காசிகுடா போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களும் நோயாளர்களும் கர்ப்பிணித் தாய்மார்களும் முதியோர்களும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர்.

அத்துடன் விவசாயிகள் தமது வயல் நிலங்களுக்குச் செல்வதிலும், விவசாய உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்வதிலும் பெரும் சிரமங்களைச் சந்திக்கின்றனர். எனவே இவ் வீதியைப் புனரமைக்க உரிய தரப்பினருக்கு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது. (க-406)

# கேள்வி கோரிய போதும் சந்தையில் இறைச்சிக் கடை இல்லை

பூநகரி,மார்ச் 2

பூநகரிப் பிரதேச சபை எல்லைக்குள் அமைந்துள்ள வாடியடி, பள்ளிக்குடா ஆகிய இடங்களில் இறைச்சிக் கடைகள் அமைக்கப்படாததால் பாவனையாளர்கள் தாம் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கின்றனர்.

பூநகரிப் பிரதேச சபை இறைச்சிக் கடைகளை அமைப்பதற்குக் கூறுவிலைகளைக் கோரியபோதிலும் கடைகள் இன்னமும் அமைக்கப்படவில்லை. இதனால் இங்குள்ள மக்கள் இறைச்சியைப் பெறுவதில் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

அத்துடன் பிரதேச சபையால் மரக்கறிச் சந்தை, மீன் சந்தை ஆகியவற்றை அமைப்பதற்கு இடங்கள் தெரிவு செய்யப்பட்டபோதிலும் இதுவரை சந்தைக் கட்டடங்கள் எதுவும் அமைக்கப்படவில்லை. இதனால் வியாபாரிகள் மரநிழல்கள், ஓலைக் கொட்டகைகள், தெருவோரங்கள் ஆகியவற்றில் தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பொதுமக்கள் வெயிலிலும் மழையிலும் நின்றபடியே தமக்குத் தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

அத்துடன் வியாபாரிகள் தமது பொருள்களைப் பாதுகாப்பாக வைக்க இடம் இல்லாத நிலையில் சிரமத்தையும் நட்டத்தையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே பிரதேச சபையினர் வியாபாரிகள், பாவனையாளர்கள் ஆகியோரின் நன்மைகருதிச் சந்தைக் கட்டடங்களை உடனடியாக அமைக்க வேண்டுமென இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

(க-406)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்கள் தேர்தலில் தமது ஒற்றுமையைக் காட்டவேண்டும்

## ம.ம.மு.தலைவி சாந்தினிதேவி வலியுறுத்து

நுவரெலியா,மார்ச் 2

உள்ளூராட்சித் தேர்தலில் வாக்களிக்கும் மலையக மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கும் மேலாகத் தமது ஒற்றுமையை வெளிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் மலையக மக்கள் முன்னணியின் தலைவி சாந்தினிதேவி சந்திரசேகரன்.

முன்னணி சார்பில் நுவரெலியா பிரதேச சபைக்குப் போட்டியிடும் வேட்பாளர்களைத் தலவாக்கலை அக்கரப்பத்தனை தோட்டக் குழுத் தலைவர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கும் நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:

எமது சமூக ஒற்றுமையைக் காட்டும் ஒரு பரீட்சையாகவே இந்தத் தேர்தல் அமைந்துள்ளது. சமூக நலன்கருதித் தலைமைகள் ஒன்றிணைந்துள்ளதை மக்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் என்பதை இந்தத்தேர்தலில் நாம் நிரூபிக்க வேண்டும்

ம.ம.முன்னணிக்கு மக்கள் வழங்கும் ஒவ்வொரு வாக்கும் அவர்களது உரிமைகளை வலியுறுத்துவதாகவே அமையும். எமது கட்சியானது தேர்தல் காலங்களில் மட்டுமல்லாது எப்போதுமே சமூகத்துடன் இணைந்தே வந்துள்ளது. இதனால்தான் தலைவர் மறைந்தபின்பும் கட்சி ஆரோக்கியத்துடன் இயங்குகின்றது.

எனவே நடைபெறவுள்ள தேர்தலில் எமது வேட்பாளர்களை வெற்றிபெறச் செய்வதன்மூலம் சமூகத்துக்கும் அரசுக்கும் பலத்தை வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம் எமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும்- என்றார்.

# 12 வருடங்களாக முற்றுப் பெறாத பாடசாலைக் கட்டடம் தகர்ப்பு

கடந்த 12 வருடங்களாகக் கட்டி முடிக்கப்படாது காணப்பட்ட பாடசாலை இருமாடிக் கட்டடம் உடைத்து தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. வெலிமடைக் கல்வி வலயத்துக்குட்பட்ட குருத்தலாவை முஸ்லிம் தேசியக் கல்லூரியின் முற்றத்தில் 12 ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட இந்த இருமாடிக் கட்டடம் கட்டி முடிவுறாத நிலையில் காணப்பட்டது.

இந்தக் கட்டடம் தொடர்பாக அதிபர் ஏ.ஏ. சமூன், நலன் விரும்பிகள் உள்ளிட்ட பலர் கல்வி அமைச்சு, ஊவா மாகாண ஆளுனர், அமைச்சர்கள் போன்றோருடன் பல வருடங்களாக நடத்திய பேச்சின் பயனாகவே உடைத்துத் தரைமட்டமாக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலக உத்தியோகத்தர்கள், ஊவா மாகாண ஆளுநர் நந்தா மெத்தியூ, மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆர்.எம். ரத்நாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர், வெலிமடைக் கல்வி வலயப் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், மாகாணசபைச் செயலாளர் மற்றும் வெலிமடை பிரதேச செயலாளர் உள்ளிட்டவர்கள் சம்பந்தப்பட்ட பாடசாலைக்குப் பயணம் செய்து நிலைமையை தீர ஆராய்ந்த பின்னர் உடனடியாக உடைத்து தரைமட்டமாக்கத் தீர்மானித்து கல்லூரியின் அபிவிருத்திச்சபைக் குழுவிடம் ஒப்படைத்தனர். இதன் விளைவாகக் கடந்த மூன்று வாரங்களாகக் கட்டடம் உடைக்கும் பணி ஆரம்பித்து முடிவுறும் நிலையில் காணப்படுகின்றது.

# நோயாளியைப் பார்க்க வந்த பெண்ணின் அ' அட்டையை நறுக்கி வீசிய வைத்தியர்

கண்டி,மார்ச் 2

பேராதனை போதனா வைத்தியசாலையில் நோயாளியைப் பார்வையிட வந்த பெண்ணொருவரின் தேசிய அடையாள அட்டையை அங்கிருந்த வைத்தியர் ஒருவர் கத்தரிக்கோலால் துண்டு துண்டாக நறுக்கி வீசினார் எனப் பேராதனைப் பொலிஸில் கடந்த வியாழக்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஒரு மணித்தியால அவகாசம் முடிவடைந்த பின்பும் இந்தப் பெண் அங்கு நின்றிருந்தார் என்ற கோபத்தில் விசேட சத்திர சிகிச்சை நிபுணர் அந்தப் பெண்ணின் அடையாள அட்டையை வாங்கித் துண்டு துண்டாக நறுக்கி வீசினார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருகோணமலை வாசியான இந்தப் பெண் அடையாள அட்டை சிதைக்கப்பட்டதையடுத்து மீண்டும் சொந்த இடத்துக்குத் திரும்ப முடியாததையடுத்தே பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# பிரசாரக் கூட்டத்துக்குச் சென்ற தமிழ் வர்த்தகர் சடலமாக மீட்பு

காவத்தை நகரிலுள்ள தமிழ் வர்த்தகர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு வெள்ளாந்துறைப் பகுதியிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். நகைக் கடை உரிமையாளரான எஸ்.தயாபரன் (வயது 40)என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவர் காவத்தை, வெள்ளாந்துறையில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் நடைபெற்ற ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ கலந்துகொண்ட தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகச் சென்றிருந்தார் என உறவினர்கள் காவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவரது சடலம் காவத்தை பொது வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவரது மனைவி மற்றும் பிள்ளைகள் குளியாப்பிட்டியில் இருக்கின்றனர் என உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகப் காவத்தைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## மூவருக்கு விளக்கமறியல்

அலவத்துகொடை நகரில் நடத்தப்பட்ட ஆடைகள் மலிவு விற்பனை நிலையத்திலிருந்து 40,000 ரூபா பெறுமதியான ஆடைகளை மூன்று நபர்கள் திருடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மூவரும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கண்டி மேலதிக நீதிவான் தனூஜா ஜயதுங்க முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டபோதே இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கொழும்பு மஹரகமப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆடை விற்பனை நிறுவனமொன்றில் வேலை செய்த மூன்று இளைஞர்கள் இணைந்து சுமார் 40,000 ரூபா பெறுமதியான ஆடைகளைத் திருடி மறைத்து வைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நினைவு அஞ்சலி

**36 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர்
**முருகேசு ஏரம்பு**
(இளைப்பாறிய ஆங்கில ஆசிரியர், யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்)

**2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி**



திருமதி
**ஞானாம்பிகை ஏரம்பு**
(இளைப்பாறிய தலைமை ஆசிரியை, யா/மண்டைதீவு கார்த்திகேய வித்தியாலயம்)

கரவெட்டி மேற்கு சீனியுடையார் வீடு முருகேசு ஏரம்புவினதும் அவரது வாழ்க்கைத் துணைவியாராகிய மண்டைதீவு கனகசபை ஞானாம்பிகையினதும் நினைவு அஞ்சலிகள்

*பாசம் சொரிந்து பாரினிலே எம்மை உயர்த்தி*
*துன்பம் தெரியாமல் துணையாய் இருந்தீர்கள்*
*உங்கள் அன்பை இழந்து ஆண்டுகள் பல சென்றாலும்*
*நாம் வாழும் காலமெல்லாம் நீளும் உங்கள் நினைவலைகள்*
*ஆன்மாக்கள் சாந்திபெற அனுதினமும் வேண்டுகின்றோம்*

**உங்கள் பிரிவால் துயருறும்:**
சற்குணானந்த தேவி (தேவி-இளைப்பாறிய ஆசிரியை - யா/வேம்படி மகளிர் கல்லூரி, காலஞ்சென்ற கேதாரகௌரி தேவி (வாணி), ஸ்ரீபாலமுருகதாஸ் (ஸ்ரீ), திருஞானபாலன் (திரு.UK), காலஞ்சென்ற சிவகுணபாலன் (குணம்), ஆகியோரின் அன்புத் தாய் தந்தையும், தங்கராசா (இளைப்பாறிய தபாலதிபர்), யோகாம்பிகை, யோகராணி (UK) ஆகியோரின் அன்பு மாமா மாமியும், மயூரன் - மகேஸ்வரி (கனடா), ராஜ்குமார் (UK) , தர்மினி- சாரங்கன் (UK), ஞானதீபன்- சுபைதா (UK) காலஞ்சென்ற சசிகரி, நர்மதா (UK), ஜெயராம் (UK), பாலதாஸ் (UK), குகேஸ்(UK) ஆகியோரின் அன்புப் பேரன் பேர்த்தியும் மாயா (UK), இஷானி (UK) ஆகியோரின் பூட்டி பூட்டனாருமாவார்.

(48,19,21)

# காணி ஆணையாளர்; பதவியிலிருந்து இடைநிறுத்தம்

மத்திய மாகாணக் காணி ஆணையாளரான திருமதி அனோமா பொல்வத்தையின் பதவி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இவர் ஹரிஸ்பத்துவ பிரதேச செயலாளராகப் பதவி வகித்த காலத்தில் கண்டி -குருநாகல் பிரதான வீதியை அகலப்படுத்தும் பணிகள் நடைபெற்றன.

இந்த வீதி அகலிப்பு நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுகள் வழங்கப்பட்டன.

மேற்படி நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்போது பணமோசடி செய்துள்ளார் என்ற சந்தேகத்திலேயே இவர் பணியிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார் என அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **796**
சீட்டிழுப்பு திகதி **28.02.2011**

எழுத்து: **X** | வெற்றி இலக்கங்கள்: **13 29 58 70**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 10,173,830.40 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 14 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 334 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 659 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16733 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9442 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 237526 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 37462 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **10,157,740.00**

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு **ரூபா. 10,761,741.60**

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360
இணையதளம்: www.nlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பிரச்சினையை எடுத்துக்கூறும் ஆற்றல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டுமே உள்ளது

## நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவிப்பு

திருகோணமலை, மார்ச் 2

தமிழ் மக்களுக்கு உரிய ஒரே ஒரு கட்சி தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டும் தான். தென்னிலங்கையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசு எவ்வளவு செல்வாக்குடன் காணப்படுகின்றதோ, அதே போன்று வடக்கு, கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே சிறந்த பலத்துடன் காணப்படுகின்றது. அரசியல் தீர்வுக்கான பேச்சை சர்வதேசம் வரை எடுத்துச் செல்வதற்கான ஆற்றல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டுமே உண்டு.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன்.

திருகோணமலை நகர சபைக்கான தேர்தலில் போட்டியிடும் தமிழரசுக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து திருகோணமலை சிவன் கோயிலுக்கு அண்மையில் கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

திருகோணமலை தமிழரின் தலைநகர்தான் என்பதை இன்றைய நிகழ்வு எடுத்துக்காட்டுகின்றது. 2009 ஆம் ஆண்டு மே மாதத்துடன் விடுதலைப் புலிகளை அழித்து அவர்களின் ஆயுதப் போராட்டத்தையும் முடிவுக்குக் கொண்டுவந்து விட்டோம் என இலங்கை அரசு அறிவித்தது. அத்துடன், தமிழர்களின் விடுதலைப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டதால், அவர்களுக்கென எந்தவிதமான அரசியல் தீர்வும், தேவையில்லை என அரசு கருதியது.



தமிழர்களின் விடுதலைப் போராட்டம் இன்னும் ஓயவில்லை. பொருத்தமான தீர்வு கிடைக்கும்வரை அது தொடரும் என்பதைக் கடந்த பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்ததன் ஊடாகத் தமிழ் மக்கள் நிரூபித்திருக்கிறார்கள்.

அதை உணர்ந்து கொண்ட இலங்கை அரசு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசியல் தீர்வு சம்பந்தமாகப் பேசுவதற்கு இணங்கி, முதற்கட்டப் பேச்சும் இடம்பெற்றுள்ளது. இந்த நேரத்தில் இன்னும் ஒரு தேர்தலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சந்திக்கின்றது.

இந்தத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கணிசமானளவு வெற்றியைப் பெறவேண்டும். அந்த வெற்றிதான் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேச்சுத் தொடர்வதற்கு உறுதுணையாக அமையும். எனவே நடைபெறவிருக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தமிழ் மக்கள் ஆதரித்து வாக்களிக்க வேண்டியது அனைத்துத் தமிழ் மக்களின் கடமையாகும்.

இன்று எமது தலைவர் சம்பந்தன் ஐயா பிறந்த திருகோணமலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தத் தேர்தல் பரப்புரையானது எமது வெற்றியையும் அதனூடாக அரசியல் ரீதியான விடுதலைப் போராட்டத்தையும் உறுதிப்படுத்துகின்றது- என்றார்.

திருமலை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ. ஆனந்தசங்கரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், சுரேஷ் பிரேமச்சந்திரன், சுமந்திரன் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். (204)

# ஒலுவிலில் கடலரிப்பைத் தடுக்க நடவடிக்கைகள் ஏதுமில்லை

## அதிகாரிகள் அசமந்தம் குறித்து மக்கள் விசனம்

ஒலுவில் துறைமுகத்தை அண்மித்த கடற்கரைப் பகுதிகள் அதிகளவு கடலரிப்புக்குள்ளாகி வருகின்ற போதிலும் இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்தவர்கள் எவரும் நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங்கள் மூலமாகப் பலமுறை செய்திகள் வெளியிடப்பட்ட போதும், சம்பந்தப்பட்டவர்கள் கடலரிப்பைத் தடுப்பதற்கான எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமையானது கண்டிக்கத்தக்க விடயமெனவும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடலரிப்புக்கு ஒலுவில் துறைமுக நிர்மாண நடவடிக்கைகள் பிரதான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேற்படி கடலரிப்பின் காரணமாக, சுமார் 60 மீற்றர் தூரம் வரையிலான நிலப் பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடலரிப்புக்குள்ளான பகுதிகளில் அமைந்திருந்த மீனவர்களின் வாடிகள் மற்றும் கட்டடங்கள் முற்றாக அழிவடைந்து விட்டதாகப் பாதிக்கப்பட்டோர் கவலை தெரிவிக்கின்றனர்.

கடலரிப்புத் தொடர்ந்து இடம்பெறுமாக இருந்தால், ஒலுவில் பிரதேசத்தின் கடற்கரையை அண்மித்த குடியிருப்புப் பிரதேசங்களும் பாதிப்புக்குள்ளாகக் கூடிய அபாய நிலை உள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் செயற்பட்டு, கடலரிப்பினைத் தடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென அந்தப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (204)

## வழங்கல்...



கிழக்கில் வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு பயணம் மேற்கொண்ட அமெரிக்காவில் வசிக்கும் ரிஷி தொண்டுநாத சுவாமிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, பேர்லின் இந்து மஹா சபையின் உதவியுடன் நிதியுதவிகளை வழங்குகின்றார். (11)

# புனானையில் நேற்று பஸ் தடம்புரண்டதில் 13 பேர் காயம்

மட்டக்களப்பு,மார்ச் 2

மட்டக்களப்பு கொழும்பு வீதியிலுள்ள புனானை பிதேசத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை பஸ்ஸொன்று தடம்புரண்டதால் 13 பேர் படுகாயமடைந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி வந்த தனியார் பஸ்ஸே தடம்புரண்டது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(204)

# ஏறாவூர் நகரசபைக்குப் போட்டியிடும் சுயேச்சைக் குழு ஐ.தே.க.வுடன் இணைவு

மட்டக்களப்பு, மார்ச் 2

எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் ஏறாவூர் நகர சபைக்குப் போட்டியிடும் சுயேச்சைக்குழு-6 ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ளது.

இந்தக் குழு கடந்த வாரம் ஐக் கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய, பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோரை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் சந்தித்துக் கட்சியில் உத்தியோகபூர்வமாக இணைந்து கொண்டது.

இதுதொடர்பாக திஸ்ஸ அத்தநாயக்க கூறியவை வருமாறு:



ஏறாவூரில் மிகவும் செல்வாக்கும் மக்கள் ஆதரவும் உள்ள சுயேச்சை குழு-6 இற்கு ஆதரவு வழங்க நாம் முன்வந்துள்ளோம். இதில் போட்டியிடும் வேட்பாளர்கள் நீண்டகால சமூக சேவைகள் மூலம் ஏறாவூர் மக்கள் மத்தியில் பெரும் நன்மதிப்பைப் பெற்றுள்ளனர்.

எமது ஆதரவின் ஊடாக இந்தக் குழுவால் நகரசபையைக் கைப்பற்ற முடியும். ஏறாவூர் நகர சபைக்குத் தாக்கல் செய்யப்பட்ட எமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதால் ஏறாவூர் வாழ் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் பெரும் கவலையடைந்த னர். அவர்களின் கவலை இந்த சுயேச்சைக் குழு எம்முடன் இணைந்ததன் மூலம் நீங்கிவிட்டது.

ஏறாவூர் வாழ் எமது கட்சி ஆதரவாளர்கள் இந்த சுயேச்சைக் குழுவை ஆதரிக்குமாறு நாம் கேட்டுக்கொள்கின்றோம். இந்த சுயேச்சைக் குழுவின் வெற்றிக்காக எமது கட்சி இன்றிலிருந்து பாடுபடும். இந்தக் குழு ஏறாவூர் நகரசபையைக் கைப்பற்றுவதற்கான அனைத்து வியூகங்களையும் வகுத்து ஐக்கிய தேசிய கட்சி செயற்படும் - என்றார். (ளி)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான செயலமர்வு

மட்டக்களப்பு, மார்ச் 2

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கடமையாற்றவுள்ள சிரேஷ்ட தலைமை தாங்கும் அதிகாரிகளுக்கான விசேட செயலமர்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மட்டக்களப்பு டோபா மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருமான சுந்தரம் அருமைநாயகம், மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எஸ். சுதாகரன் ஆகியோர் தேர்தல் நடைபெறும்போது கடமையாற்ற வேண்டிய ஒழுங்கு விதிமுறைகள் குறித்து விளக்கமளித்துள்ளனர். (204)

# அட்டாளைச்சேனையில் கட்சிகளுக்கிடையில் மோதல்

தமது கட்சி அலுவலகத்தில் இருந்தபோது தாக்கப்பட்டதாகக் கூறப்படும், அட்டாளைச்சேனை பிரதேசசபைத் தேர்தலில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்ப்பாகப் போட்டியிடும் வேட்பாளரும், அவரின் ஆதரவாளர் ஒருவரும் பாலமுனை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 11.45 மணியளவில் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளரான எஸ்.எல்.முனாஸ் என்பவர் அவரின் வேட்பாளர் அலுவலகத்தில் இருந்தபோது அவரும், அவருடைய ஆதரவாளர் ஒருவரும் அதே பிரதேசத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் வேட்பாளராகப் போட்டியிடும் ரி.ஆப்தீன் என்பவரால் தாக்கப்பட்டதாகவும், அலுவலகத்தில் இருந்த பொருள்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அட்டாளைச்சேனை, 08ஆம் பிரிவைச் சேர்ந்த ஏ.எல்.யாசிர் என்பவரே தாக்குதலுக்குள்ளானதாகக் கூறப்படும் ஆதரவாளராவார்.

இதேவேளை, தாக்குதலை மேற்கொண்டதாகக் கூறப்படும் அட்டாளைச்சேனை பிரதேசசபைக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளரான ரி.ஆப்தீன் என்பவர் தன்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டினை மறுத்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளி விழா ஆரம்பித்து வைக்கப்படுகிறது









உயிரிழந்த குடாநாட்டு ஊடகவியலாளர்களுக்கு அஞ்சலி

உதயன் எழுத்தாளர்கள் கௌரவிப்பு

உதயனின் மூத்த ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு


அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை


உதயன் பிரதம ஆசிரியர்
ம.வ.கானமயில்நாதன்


சுடர்ஒளி ஆசிரியர்
ந.பத்மசீலன்


மு.சிவனேசன்


பொ.சண்முகநாதன்


மூத்த பத்திரிகையாளர்
ஞா.குகநாதன்


மூத்த பத்திரிகையாளர்
மா.பேரின்பநாயகம்


கு.மிகுந்தன்

**உதயன்**
**20-02-2011**
**25 ஆவது ஆண்டு விழா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் 25 ஆவது ஆண்டு விழா



கவிஞர் முருகு



கவிஞர் விகடகவி



நிகழ்வில் இடம்பெற்ற நடன நிகழ்வு

## குடாநாட்டின் ஊடகவியலாளர்கள் கௌரவிப்பு



திரு. செல்லப்பா நடராசா



திரு. சி.பெருமாள்



புலவர் ம.பார்வதிநாதசிவம்



திரு. எஸ்.கதிர்காமத்தம்பி



திரு. எஸ்.கதிரவேல்



திரு. ஈ.ஆர்.திருச்செல்வம்



திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம்



நவாலியூர் எஸ்.செல்லத்துரை



மயிலங்கூடலூர் பி.நடராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
02 மார்ச் 2011 புதன்கிழமை

# இயற்கை அழகை விடுத்து செயற்கை அழகில் நாட்டம் ஏன்?

அழகு என்றாலே அனைவருக்கும் பிடித்தமான ஒன்று. அழகாக இருப்பதற்கு யாருக்குத்தான் ஆசையில்லை.

ஆண், பெண் இருபாலாருமே தாங்கள் வெள்ளை நிறத்துடன் அழகியவர்களாக இருக்க வேண்டும், தம் அழகைப்பற்றிப் பலரும் பேசவேண்டும் என எண்ணுவார்கள்.

தற்போது அழகு எல்லோர் மனங்களிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது. இதனால் இவர்கள் அழகுசாதனப் பொருள்களையே நாடிவருகின்றனர். இதனால் அழகுசாதனப் பொருள்கள் அனைத்துக் கடைகளிலும் அதிகமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

இதனை வாங்கிப் பயன்படுத்துவதில் பெண்கள் மிக அக்கறை கொண்டிருப்பதுடன் தம் அழகின் மீது அலாதிப் பிரியமும் மோகமும் கொண்டவர்கள் என்றால் மிகையாகாது. அழகு என்றால் பெண், பெண் என்றால் அழகு எனும் அளவிற்கு இந்த நூற்றாண்டு வளர்ந்து விட்டது.

இயற்கையிலேயே எல்லோருக்கும் இறைவன் அழகினைக் கொடுத்துள்ளான். அதில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு அழகு கொண்டவர்கள். ஆனால் இயற்கை அழகில் திருப்திப்படாது செயற்கை அழகுதான் வேண்டும் என்று அழகு நிலையத்தைத் தேடி ஓடுகின்றனர்.

மேலும் ஊடகங்களில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களும் காட்சிப் பொருள்களும் பெண்களின் கவனத்தைத் திசை திருப்புகின்றன என்று கூறினால் மிகையாகாது.

இவர்கள் அழகு நிலையத்தைத் தேடிச் சென்று பணத்தினையும் பொன்னான நேரத்தினையும் வீணாகச் செலவு செய்கின்றனர். அதன் பக்கவிளைவுகளையும் பாதிப்புக்களையும் அறிந்தும் அறியாத பெண்களாகவே இவர்கள் உள்ளனர்.

செயற்கை அழகுசாதனப் பொருள்களின் பாவனையால் ஏற்படும் விளைவுகள் பற்றிப் பேசினால் ஏதோ தம்மீது பொறாமைகொண்டு பேசுகிறார்கள் என்று முகம் சுழிப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்.

இந்த அழகுசாதனப் பொருள்களைப் பயன்படுத்துபவர்கள் காலப்போக்கில் தமது இயற்கை அழகையே இழந்து பார்ப்பதற்கு அழகின்றிக் காணப்படுகின்றனர்.




பெண்களின் இயற்கை அழகினைப் பார்க்க வேண்டும் எனில் காலையில் துயில் எழும்பி வரும்போது பெண்ணின் முகத்தைப் பார்த்தால் அழகு தெரியும் என்பார்கள்எமது முன்னோர்கள். இந்த அழகான, இயற்கையான முகம் யாருக்கும் திருப்தி தருவதில்லை. அதனாலேயே முகப்பூச்சுக்களைப் பயன்படுத்துவதில் அதிக ஆர்வம் செலுத்திவருகின்றனர். இதனால் அவர்களுக்கு ஏற்படுகின்ற பக்கவிளைவுகள் பற்றியாரும் கவலைப்படுவதில்லை. இந்த முகப்பூச்சுக்களில் உள்ள வேதியல் பொருள்கள் பல பக்க விளைவுகளை ஏற்படுத்துகிறன. இத்தகைய பொருள்கள் ஒவ்வாமை, முகத்தில் சுருக்கங்கள், புற்றுநோய், ஏன் பெண்மையும்கூட வலுவிழக்கச் செய்யும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

கறுப்பி

## மீண்டும் ஒருமுறை



அன்புக்கு அரவணைப்பாகவும்
உன் பிறப்பின்
அடையாளமாகவும்-நீ
எனை எடுத்துக் காட்டினாய்
ஆனால்-நானோ!
உன் பாசத்தின் பிடியில்
சிக்கித் தவிக்கின்றேன்
உனக்கு அன்னையாக!
மீண்டும் ஒரு முறை
பிறக்க விரும்புகிறேன்
உனக்கு நான்
மகளாக!

சுபி, மானிப்பாய்.

# வாயாடியாக இருக்கும் பெண்கள் வாழ்வில் ஏமாந்து விடமாட்டார்கள்

பெண்களை வாயாடி, அமைதியானவள், கோபக்காரி, சிடுமூஞ்சி என்று பல வகைகளில் கூறுவதுண்டு.

இதில் வாயாடிகளாக இருக்கும் பெண்கள் கொஞ்சம் துணிச்சல் உடையவர்களாக இருப்பார்கள். தமது பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்க்கும் தைரியம் இவர்களிடம் கட்டாயம் இருக்கும். இவ்வாறான பெண்களிடம் ஆண்கள் கொஞ்சம் விலகி நிற்பதோடு தமது ஆணாதிக்கத்தைத் திணிக்கும் சக்தியும் இருக்காது.

சமூகத்தின் பார்வையில் அவள் வாயாடி, பொல்லாதவள் என்னும் பெயர் இருந்தாலும் அவளுக்கு எப்பொழுதும் அது துணை இருக்கும் ஆயுதம் போன்றது.

இவ்வாறு தைரியமாகப் பிரச்சினைகளை எதிர்கொள்வதால் சுதந்திரமாகத் தனது தேவைகளைப் பூர்த்தி செய்யவும் தயங்கமாட்டாள்.



எந்த இடத்தில் எந்தப் பிரச்சினைகளை எதிர்கொண்டாலும் தனியாகத் தானே அதற்கான தீர்வுகளையும் தேடிக் கொள்வாள். இதனால்தான் வாயாடிப் பெண்ணை நம்பினாலும் அமைதியான பெண்களை நம்பாதே என்பார்கள். அமைதியாக இருக்கும் பெண்கள் தமக்குள்ள பிரச்சினைகளை வெளிப்படையாகக் கூறுவதற்குத் தயங்குவார்கள். இவ்வாறான பெண்கள்தான் ஆண்களிடம் ஏமாறுவதும்கூட. அவர்கள் தமது பிரச்சினைகளை வெளியில் கூறமாட்டார்கள் என்னும் தைரியம் பல ஆண்களிடம் இருக்கின்றது. இது அவர்களுக்குப் பயனுள்ளதாகவும் அமைகின்றது.

சில பெண்கள் பயந்த சுபாவத்தில் தமது வாழ்க்கையைச் சீரழித்துக் கொள்ளும் சம்பவங்களும் உண்டு.

மனதுக்குள் பயஉணர்வு இருந்தாலும் வாய்விட்டுப் பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டும்.

இந்தப் பண்புதான் உங்களை மற்றவர் ஏமாற் றிக்கொள்வதை இல்லாது ஒழிக்கும்.

-சோபியா

# பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க பெண்களுக்குத் தைரியம் அவசியம்



ஜீவன், மானிப்பாய்

பெண்களின் மனம் மென்மையானது. எளிதில் இளகிச் செயற்படக் கூடியவர்கள். அதுமட்டுமன்றி அதிகளவான துன்பங்களைத் தாங்கும் சக்தியும் குறைந்தவர்கள்.

பெண்களின் மனம் குழந்தை மனம் போன்றது என்று கவிஞர்கள் பலர் வர்ணித்திருக்கின்றார்கள். துக்கத்தைத் தாங்கும் தைரியம் பெண்களிடம் இல்லாததால் அதன் வெளிப்பாடாக அழுகையைப் பயன்படுத்துகிறார்கள் இதனால்தான் சாதிக்க முடியாத ஒன்றைப் பெண்கள் தமது கண்ணீரால் சாதித்து விடுவார்கள் என்று கூறுகின்றனர்.

இவ்வாறான துக்கமான, கவலைகள் நிறைந்த சம்பவங்களைப் பெண்கள் முடிந்தவரை தவிர்க்க முயற்சிக்க வேண்டும். இதனால் மனம் இலோசிவிடும். மனதும் சந்தோசத்துடனும் உடல் ஆரோக்கியத்துடனும் இருக்க முடியும்.

தமக்குவரும் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தைரியம் பெண்களிடம் கட்டாயம் இருக்கவேண்டும். பிரச்சினைகளைக்கண்டு ஒதுங்கி, அதனால் மனக்குழப்பமடைந்து அல்லறப்படுவதால் என்ன பயன்?

மனதில் தோன்றும் கேள்விக்கான பதில்களை உரியவர்களுடன் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கலாமே? தவிர பிரச்சினைகளுக்குத் தீர்வு அழுகைதான் என்று கருதினால் நாள் முழுதும் நீங்கள் நோயாளியாகத்தான் இருக்க வேண்டும்.

பூந்தோட்டம்போல் இருக்கும் குடும்பத்தில் பெண்கள் மலர்களைப் போன்றவர்கள். இவர்கள் மனம் வாடினால் குடும்பத்தில் சந்தோசமே இருக்காது. எனவே குடும்பத்தின் மகிழ்ச்சிக்குப் பெண்கள்தான் காரணம்.

குழந்தையில்லா வீடு இருண்ட காடு போன்றது என்று பெரியவர்கள் கூறுவதுபோல் பெண் இல்லா வீட்டில் பேய் குடிகொள்ளும். இவ்வாறு குடும்பத்தின் ஒளிமயமான எதிர்காலத்துக்கு குத்துவிளக்காய் இருக்கும் பெண்கள் எப்பொழுதும் இன்முகத்துடனும் மனச் சந்தோசத்துடனும் இருந்தால்தான் அவர்கள் வாழும் வீடு இறைவன் வாழும் கோயிலாகும்.

## என் நிழல் ஆசை

உனக்காக
நான்
எத்தனை பக்கங்களில்
வேண்டுமானாலும்
கவி எழுதி விடுகிறேன்
ஆனால்
ஒற்றைப் பக்கத்தை
மட்டும்கொண்ட
என் இதயப் பக்கத்தில்
எனக்காக
ஒரு சில வரிகள்
உன்னால் எழுத முடியுமா?

## என் பெயர்

என் பெயரை
நீ
கேட்டால்?
நான்
சொல்வதற்கு
மனப்பாடம்
செய்து கொண்டிருக்கிறேன்

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை பழைய மாணவர்கள், பெற்றோர் கவனிப்பரா?

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

தீவுப் பகுதியில் 1990 ஆம் ஆண்டில் நிகழ்ந்த இடப் பெயர்வில் தனது முக்கிய ஆவணங்கள் அனைத்தையும் இழந்த போதிலும் தனது கல்விப் பணியைத் தொடர்ந்தும் செவ்வனே ஆற்றி வருகின்ற பாடசாலைகளில் மண்டைதீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் ஒன்றாகும்.

இந்தப் பாடசாலையில் போதிய மண்டப வசதி இல்லாததால் நெருக்கடி நிலையில் கல்வி கற்பதற்குச் சிறுவர்கள் கஷ்டப்பட வேண்டியுள்ளது. வகுப்பறை வசதிகள் போதியதாக இல்லை. குடிதண்ணீர் வசதி இல்லை. சிறுவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் பொருத்தக்கூடிய விளையாட்டுமைதானம் இல்லை. எந்த வசதிகள் குறித்துக் கேட்டாலும் இல்லை என்ற பதிலைத்தான் அதிபர், ஆசிரியர்களால் கூறமுடியும். அந்த அளவுக்கு மிகவும் பின்தங்கியுள்ள ஒரு பாடசாலையாகவே இது காணப்படுகின்றது.

நூலக வசதிகள், கணினி, விளையாட்டு மைதானம் உட்பட ஏற்கனவே இல்லை என்று குறிப்பிடப்பட்ட தேவைகளும் நிறைவேற்றப்பட வேண்டும். போட்டோப் பிரதி இயந்திரம் இல்லை. அவசர தேவைகளுக்கு பிரதி எடுக்க ஆசிரியர்கள்தான் அலைய வேண்டியுள்ளது.

மிதிவெடி அகற்றப்பட்ட காணியில் உலக உணவு நிறுவனம் சமையற்கூடம் அமைத்து உதவியுள்ளது. குழாய்க்கிணறு ஒன்றும் தற்சமயம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை ஈ.எஸ்.டீ.எவ்.பி.இற்கூடாகக் கல்வித் திணைக்களம் வழங்கியது. கட்டடப் புனரமைப்பும் திணைக்களத்தாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்வித்திணைக்கள உத்தியோகத்தர்கள் அடிக்கடி வருகை தந்து நிலைமைகளை அவதானித்துச் சில தேவைகளை நிறைவேற்ற உதவுகின்றனர்.

பாடசாலைச் செயற்பாடுகளுக்குக் கடற்படையினர் முடிந்த வரை உதவுகிறார்கள். சுத்தமான குடிதண்ணீர், பாடசாலைத் தேவைகளைச் சமாளிக்கக் கூடியதாக மின்சார வசதிகள் என்பன அவர்களால் வழங்கப்படுகின்றன. பாடசாலைக்கு அருகில் அவர்களது தளம் அமைந்துள்ளதால் இது சாத்தியமாகிறது. விரைவில் அவர்கள் கடற்கரைப் பகுதிக்குச் செல்லவுள்ளனர் என்று அறியப்படுவதால் இந்த உதவிகளைப் பாடசாலை இழக்க வேண்டியேற்படலாம்.



பாடசலையைப் பொறுத்தவரை மிகப் பெரிய குறை பெற்றோர்களின் பாராமுகம். பாடசாலைத்தேவைகளின் பங்களிப்புக் குறித்துப் பெற்றோர்கள் கரிசனை கொள்வதாக இல்லை. பெற்றோர்கள் பாடசாலை விடயத்தில் மௌனமாகவே உள்ளனர். பழைய மாணவர்களின் உதவி கிடைக்கும் என இங்கு எதிர்பார்க்க முடியாது. இங்கு கல்வி பயிலும் மாணவர்கள் சிறுபிள்ளைகள். அவர்கள் பழைய மாணவர் சங்கமாக இயங்கி எதையும் செய்ய முடியாதவர்கள். பதினோராம் வகுப்புவரை தொடர்ந்தும் இயங்கி வந்திருந்தால் சில சமயம் சங்கம் உருவாக்கப்பட்டுச் சில உதவிகளாவது கிடைத்திருக்கும்.

பெற்றோர்களின் கடைக் கண் பார்வை, பழைய மாணவர் சங்கம் என்று எதுவுமே இல்லாத ஒரு சூழலில் மண்டை தீவைச் சேர்ந்த படித்த வசதியுள்ள மக்களின் உதவியும் தீவைச் சேர்ந்த வெளிநாடுகளில் உள்ள மக்களின் உதவி யும்தான் இந்தப் பாடசாலையை வளப்படுத்தத் தேவையானது.

மீளவும் பதினோராம் வகுப்பு வரை இயங்கக் கூடியதாகப் பாடசாலையை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பது அதிபர், ஆசிரியர்களின் கனவு. நிழல் நிஜமாவதற்கு முதலிட வேண்டியோர் மண்டை தீவு மக்கள்தான்.


# சிரமங்களுக்கு மத்தியிலும் பணியாற்றிய வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்

நாட்டின் அசாதாரண சூழலால் தீவுப்பகுதியில் உள்ள பாடசாலைகள் தமது செயற்பாடுகளை இழந்து இடம் பெயர்ந்து அவதியுற்றபோதும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் அக்கறை செலுத்துவதில் இங்குள்ள பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் கரிசனையாகவே இருந்துள்ளனர் என்பதற்கு வேலணை சைப்பிரகா வித்தியாலயம் ஓர் எடுத்துக்காட்டாகும்.

1991ஆம் ஆண்டு தொடக்கம் 2002ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் மாணவர்கள், ஆசிரியர்கள் பல்வேறு இடங்களுக்கும் பிரிந்து சென்ற நிலையிலும் இந்தப் பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்ற பொ.அருணகிரிநாதன் பல்வேறு சிரமங்களின் மத்தியில் பாடசாலையை முன்நோக்கி நகர்த்திச் செல்வதில் பெரும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தார். வேலணை கொத்தணிப் பாடசாலைகள் 1991ஆம் ஆண்டில் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் மாலைநேரப் பாடசாலையாக நடைபெற்றபோது சைவப்பிரகாச வித்தியாசாலையும் இதில் இணைந்து கொண்டது. பின்னர் யாழ்ப்பாணப் பட்டப்படிப்புக்கள் கல்லூரியில் காலைநேரப் பாடசாலையாக இயங்கியது.

நகரில் தங்கி யிருந்த 430 மாணவர்கள் பாட சாலைக்குச் சமுகமளித்தனர். இக்காலத்தில் யாழ். புனித மரியாள் வித்தியாலயத்தில் விளையாட்டுப்போட்டிகள், கல்விக் கண்காட்சி, ஆசிரியர் தினம், ஆங்கிலதினம், உடற்பயிற்சிப் போட்டிகள் என்பவற்றுடன் கல்வி நடவடிக்கைகம் நடத்திதப்பட்டன. பிரச்சினைகளின் மத்தியிலும் அதிபரின் முயற்சி அப்போது பெருமையாகப் பேசப்பட்டது.

இடம்பெயர்ந்தபோதும் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்தன் போலத் தனது செயற்பாடுகளில் உறுதியாக இருந்து ஆண்டு ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைகளில் வேலணைக் கோட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று முன்னணிப் பாடசாலையாக விளங்கியதையும் பெற்றோர்கள் நினைவு கூருகின்றனர்.



தொகுப்பு:லக்ஸ்மன்

நாவலரின் மாணவராக இருந்த விநாசித்தம்பி கந்தப்பிள்ளை என்பவரால் அங்குள்ள பிரமுகர்களின் உதவியுடன் 1879 ஆம் ஆண்டில் பள்ளம் புலத்து சைவாபிமானி கல்வீட்டு நாகமுத்து ஐயம்பிள்ளை என்பவரின் வீட்டுத் திண்ணையில் சமயாசார முறைப்படி இந்தப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இதே ஆண்டில் "வீலிங்கன் கலடு" எனச் சொல்லப்படும் வித்தியாலய வளவில் அப்போதைய ஊர்காவற்றுறை நீதிபதி லைமன் கதிரவேற்பிள்ளையால் பாடசாலைக்கான அத்திபாரமிடப்பட்டுக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. இந்தப் பாடசாலை கந்தப்பு வாத்தியார் பள்ளிக்கூடம் என்றும் சொல்லப்படுகின்றது.

இங்கு கற்பித்த அனைத்து ஆசிரியர்களும் சைவ சமயத்தவர்களே ஆவர். பல்வேறு கஷ்டங்களின் மத்தியில் 1883ஆம் ஆண்டில் இது அரச நன்கொடைக்குரிய பாடசாலையாகப் பதிவு செய்யப்பட்டது. கந்தப்பிள்ளை இந்தப் பாடசாலையின் முகாமையாளராக இருந்துள்ளார். நாயன்மார் குருபூசைக்கென மண்டபமும் அமைக்கப்பட்டது.

1945ஆம் ஆண்டில் வேலணை மத்திய கல்லூரி அமைப்பதற்கு இடம் வழங்கும் பொருட்டு மீண்டும் இந்தப் பாடசாலை தனியார் ஒருவரின் வீட்டுக்கு மாற்றப்பட்டு பின்பு தனது சொந்த இடத்தில் செயற்படத் தொடங்கியது.

ஆரம்பத்தில் ஐந்தாம் வகுப்பு வரையும் பின்னர் சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு வரையும் அதிகரிக்கப்பட்ட போதும் வேலணை மத்திய மகாவித்தியாலயம் அமைந்ததும் மீண்டும் ஐந்தாம் வகுப்புவரையே மாணவர்கள் கற்கக் கூடியதாக இருந்துள்ளது. எனினும் கல்வித் திணைக்களத்தின் கொள்கைப்படி 1956ஆம் ஆண்டில் மீண்டும் 6ஆம் வகுப்புக்குமேல் ஆரம்பிக்கப்பட்டது.

1961ஆம் ஆண்டில் பாடசாலைகள் அரசால் பெறுப்பேற்கப்பட்டபோது இங்கு பத்து ஆசிரியர்களும் 287 மாணவர்களும் இருந்தனர். 1980 ஆம் ஆண்டில் 700இற்கும் அதிகமான மாணவர்களும் 24 ஆசிரியர்களும் இருந்துள்ளனர். அப்போது பாலர் வகுப்பு முதல் ஜி.சீ.ஈ. சாதாரணதரம்வரை வகுப்புக்கள் இருந்துள்ளன.பாடசாலையில் முதன்முறையாக 1979 ஆம் ஆண்டில் அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் தென்பகுதிக்கான கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டனர். 1980 ஆம் ஆண்டில் மாணவர் நாடாளுமன்றம் அமைக்கப்பட்டு மாணவர்களே பாடசாலைச் செயற்பாடுகளை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டன. அதே ஆண்டில் நூற்றாண்டு விழாவும் மலர் வெளியீடும் இடம்பெற்றன.

1981ஆம் ஆண்டு தொடக்கம் 1991 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் ஏற்பட்ட நாட்டுச்சூழல் காரணமாகப் பாடசாலை பெரிதும் பாதிக்கப்பட்டது. 24.08.1990 ஆம் ஆண்டில் தீவக மக்கள் இடம்பெயர்ந்தனர். இந்தப் பாடசாலை 08.10. 1991 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இரண்டாவது தடவையும் இடம்பெயர்ந்தது.

1995 ஆம் ஆண்டில் தென்மராட்சி மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் இயங்கி மீண்டும் 1996ஆம் ஆண்டில் 51 மாணவர்களுடன் வேலணையில் இயங்கியது. 2002 ஆம் ஆண்டில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அடுத்து பாடசாலைகளில் இருந்து இராணுவம் வெளியேறியதும் மீண்டும் தனது சொந்தக் கட்டடத்துக்கு மாற்றப்பட்டது. மாணவர்கள் தற்சமயம் குறைவாகவே உள்ளனர். எனினும் கல்விச் செயற்பாடுகளைச் சிறப்பாக முன்னெடுக்கத் தேவையான நடவடிக்கைகளை அதிபர், ஆசிரியர்கள் மேற்கொண்டு வருகின்றனர். பாடசாலைக்கான வீதி இன்னமும் முழுமையான போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படவில்லை. வசதிகள் மேம்படுத்தப்பட்டு அனைத்து மக்களும் திரும்பவும் இந்தப் பகுதிக்கு வரும்போதுதான் நல்ல சூழ்நிலை உருவாகும். இக்கிராமத்தில் கல்வி முன் போல வளர்ச்சி பெறும் என்பதை எதிர் பார்த்து சைவப்பிரகாச வித்தியாலய அதிபர், ஆசிரியர்கள் காத்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். தூரத்து உறவினர் ஒருவர் கேட்ட உதவியைச் செய்வீர்கள். உங்களின் பிரச்சினை ஒன்றை நெருங்கிய நண்பர்களிடம் சொல்லி ஆலோசனை கேட்பீர்கள். உங்களின் வேலை ஒன்றுக்காக மற்றவர்களையும் கூட்டிக் கொண்டு அலையலாம். எதிர்பாராத சந்திப்பு நிகழும்.

**இடபம்:**
தேக ஆரோக்கியத்தில் அக்கறை காட்ட வேண்டிய நாள். பிள்ளைகள் விடயத்தில் அதிக கண்டிப்புடன் நடந்து அவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். எந்த விடயத்திலும் அவசரம் இல்லாமல் நிதானமாக செயற்பட வேண்டும். சிறிய தவறு ஒன்று பெரிய பிரச்சினையாகி தொந்தரவு கொடுக்கலாம். புதிய முயற்சிகளைத் தவிர்க்க வேண்டிய நாள்.

**மிதுனம்:**
தேக பராமரிப்பில் அக்கறை காட்டுவீர்கள். அவசர செலவு ஒன்றை சமாளிக்க பிறரிடம் பணம் கைமாத்து வாங்கலாம். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, உறவினர் ஒருவரை எதிர்பாராமல் சந்திக்கலாம். நண்பர்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். சிலரை வெறுப்பேற்றும் வகையில் பேசி அதில் இன்பம் காண்பீர்கள்.

**கடகம்:**
உங்களுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்குவீர்கள். நேரத்தை உருப்படியான வகையில் செலவழிப்பதில் அக்கறை காட்டுவீர்கள். சகோதரர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். சில விடயங்களில் பண ஆதாயத்தைப் பெறலாம். சண்டை போட்ட ஒருவரிடம் சமாதானமாகச் செல்வீர்கள். உற்சாகம் கூடும்.

**சிங்கம்:**
உடல் சோர்வு, உள்ளச்சோர்வு ஆட்கொள்ளும். நீங்கள் நினைத்த வேகத்திற்கு சில காரியங்கள் நடக்காமல் மெதுவாக நடக்கலாம். மற்றவர்களுக்காக உங்களின் பணத்தைச் செலவு செய்யலாம். ஒவ்வாத உணவுப் பண்டங்களை சாப்பிடுவதைத் தவிர்க்கவும். திடீர் வெளியூர் பயணங்கள் செல்லலாம். பிரபலமான ஆலயங்களுக்குச் சென்று வழிபாடு நடத்தலாம்.

**கன்னி:**
சக ஊழியர்கள் அல்லது நண்பர்கள் சிலருடன் ஈகோ பிரச்சினைகள் உருவாகலாம். உறவினருக்கு தெரிந்த ஒருவர் உங்களுக்கும் அறிமுகமாகலாம். ஒரு காரியம் நடக்கும் முன்னரே அதைப் பற்றி மனக்கோட்டை கட்ட வேண்டாம். குறுகிய தூர பயணங்கள் செல்லலாம். தாயார் வழியில் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். கோபம், வேகம் தவிர்க்கவும்.

**துலாம்:**
தனிமையில் இனிமை காண முற்படுவீர்கள். பணியில் உங்களின் திறமை வெளிப்பட வேண்டும் என்பதற்காக அதிக ஆர்வத்தோடு செயற்படுவீர்கள். எதிர்காலம் தொடர்பான விடயங்களில் அக்கறை காட்டுவீர்கள். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். சாமர்த்தியமாகப் பேசி சில பொருள்களைக் குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.

**விருச்சிகம்:**
உறவினர்கள் சிலரிடம் பொய் பேசி உங்களுக்கு வேண்டியதை சாதிக்க முற்படுவீர்கள். வீட்டுக்குத் தேவையான தின்பண்டங்கள் வாங்கிக் கொடுப்பீர்கள். சில அற்ப பிரச்சினைகளால் சிறிது நேரம் உங்களின் மன அமைதி பாதிக்கப்படலாம். கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். சிலரிடம் கடனுதவி கேட்டுப் பெறலாம்

**தனுசு:**
மற்றவர்கள் வியக்கும் வகையிலான சில காரியங்களைச் செய்வீர்கள். ஆபத்தான பொருள்களைக் கவனமாகக் கையாள வேண்டும். பெரிய ஆதாயம் ஒன்றை அடைவதற்காக, சிறிய விடயம் ஒன்றை விட்டுக் கொடுப்பீர்கள். மாமன், மைத்துனர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உங்களின் கடந்த கால அனுபவம் ஒன்றை மற்றவர்களுக்கு அறிவுரையாகச் சொல்வீர்கள்.

**மகரம்:**
மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகள் சாதகமாக அமையும். சங்கடம் தரும் அல்லது சந்தோஷம் தரும் செய்தி ஒன்றைக் கேட்கலாம். உங்களுக்குப் பிடித்த ஒன்று குடும்பத்தினருக்கு பிடிக்காமல் போகலாம். சில விடயங்களில் பிடிவாதமாக நடந்து மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். விமர்சனங்களை எதிர்கொள்ளலாம்.

**கும்பம்:**
கலகலப்பாகப் பேசி மற்றவர்களை மகிழ்விப்பீர்கள். தாமதமாகத் துவக்கினாலும் சில வேலைகளை சரியான நேரத்திற்கு முடிப்பீர்கள். நண்பர்கள் சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம். குடும்பத்தினரின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும்.

**மீனம்:**
மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள். நீண்ட நாள்களாக சந்திக்காத சிலரைச் சந்திக்கலாம். உங்களின் யோசனைகளுக்கு மற்றவர்கள் மத்தியில் வரவேற்பு இருக்கும். பணவரவுகளைப் பெறலாம். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். உறவுப் பெண்கள் சிலரின் அறிமுகம் கிட்டும்.

# மக்கள் தேவையை நிறைவேற்றும் வகையில் தேசிய மருத்துவம் மேம்பட வேண்டும்

உலகில் எந்தப் பகுதியில் என்ன நடந்தாலும் அவற்றை நாம் எமது வீட்டிலிருந்தே பார்க்கக் கூடிய அளவுக்கு விஞ்ஞானத் தொழில்நுட்பம் வளர்ச்சியடைந்துள்ளது.

அந்த வகையில் சுகாதார சேவையை எடுத்துக் கொண்டால் பல வைத்தியமுறைகள் காணப்படுகின்றன.

அடிப்படைக்கொள்கைகளிலும், தத்துவங்களிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றபோதும் பொதுவான நோக்கமாக ஒருவருக்கு ஏற்பட்ட நோயைத் தணிப்பதையே எல்லா மருத்துவமுறைகளும் குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

ஒவ்வொரு நாட்டிலும் மேலைத்தேய மருத்துவ முறையும் அந்த நாட்டுக்கே உரித்தான தேசிய மருத்துவமுறையும் மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கு உறுதுணையாக உள்ளன.

### மேலைத்தேய மற்றும் தேசிய மருத்துவமனைகள்

ஒரு நாட்டின் சுகாதாரக்கொள்கையை அவதானிக்கும்போது மேலைத்தேய மருத்துவமும், தேசிய மருத்துவமும் ஒன்றுக்கொன்று முரண்படாமல் தமது அடையாளங்களைப் பேணி ஒரு வரையறையுடன் சேவையாற்றுவதைக் காணலாம்.

இந்தியா, சீனா போன்ற நாடுகள் இதற்கு உதாரணமாக அமைகின்றன. இலங்கையில் மேலைத்தேய மருத்துவமே காணப்படுகிறது.

தேசிய மருத்துவத்துக்கென ஓர் அமைச்சு, திணைக்களம், ஆராய்ச்சி நிலையம், மருந்துக்கூட்டுத்தாபனம், போதனா வைத்தியசாலை, மாவட்ட வைத்தியசாலை, கிராமிய வைத்தியசாலை, இலவச வைத்திய சாலைகள் அமைந்தள்ள போதும் அதன் பங்களிப்பு முழுமையாகச் சுகாதார சேவையில் உள்வாங் கப்படவில்லை.

பொதுவான சுகாதார சேவையில் சுகாதார சேவை அத்தியட்சகரிலிருந்து சுகாதார சேவைப் பணியாளர் வரை ஒரு நிர்வாகப் பொறிமுறை காணப்படுகின்றது. ஆனால் தேசிய மருத்துவமோ தேசிய மருத்துவர்களின் சேவையோ முதன்மையான சுகாதார சேவையில் இடம்பெறவில்லை.

### அங்கீகரிக்கப்படாத மருத்துவமுறை

இதனால் தேசிய மருத்துவம் தனிப்பட இயங்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது. மேலிருந்து கீழ்மட்டம் வரை ஒரு நிர்வாகப் பொறிமுறையோ அல்லது தொடர்புகளோ இல்லாது செயற்படுகின்றது.

இவ்வாறு அரசால் அங்கீகரிக்கப்படாத ஒரு வைத்தியமுறை மக்கள் மட்டத்தில் வரவேற்பைப் பெறுவது சிரமமான விடயமாகத் தென்படுகின்றது.

அரசு முதன்மையான பொதுச் சுகாதார சேவையில் தேசிய மருத்துவத்தின் சிறப்பு அம்சங்களை உள்வாங்கி மக்களுக்குச் சிறந்த ஆரோக்கிய வாழ்வைப் பெற்றுக்கொடுக்கவேண்டும். இதற்கான முதற்பணியாக இலங்கையின் சுகாதாரக் கொள்கையில் தேசிய அல்லது பாரம்பரிய மருத்துவம் உள்வாங்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

### பட்டக் கற்கையாக அங்கீகரித்தல்

ஒரு காலத்தில் பரம்பரையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்த தேசிய மருத்துவம் இன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கமைய யாழ்.பல்கலைக்கழகம், கொழும்புப் பல்கலைக்கழக, களனிப்பல்கலைக்கழகங்களில் பட்டமாணிக் கற்கை நெறியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மாணவர்களும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் மேற்கூறப்பட்ட கற்கைநெறிகளுக்குக் கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அனுமதிக்கப்படுகின்றனர்.

மேலைத்தேய மருத்துவமுறை வளர்ச்சியடைந்துள்ளதால் மக்கள் அதன் பூரண பயனைப் பெறுகின்றார்கள். அத்துடன் சத்திரசிகிச்சை மூலமும் மக்கள் மிகுந்த பயனைப் பெறுகின்றார்கள். விஞ்ஞான வளர்ச்சியின் பிரதிபலிப்புக்கள் மேலைத்தேய மருத்துவத்தில் செறிந்துள்ளதால் மக்களின் சுகாதார தேவைகளைப் பூர்த்திசெய்து ஆரோக்கியத்தில் அவற்றால் பெரும் பங்காற்ற முடிகிறது. அதேசமயம் சில ரோக நிலைகளில் தேசிய மருத்துவ சிகிச்சை களும் மக்களின் நோய்களைத் தீர்க்கின்றன என்பதை நாம் நிராகரித்து விடமுடியாது.

இதற்கு ஒரு தீர்வுகாண வேண்டுமாயின் மேலைத்தேய மருத்துவர்களும் தேசிய மருத்துவர்களும் மக்களின் சேவையைப் பிரதான இலட்சியமாகக் கொண்டு ஆரோக்கியமான பேச்சுகளை மேற்கொள்ள வேண்டும்.

இரு மருத்துவ முறைகளினதும் தனித்துவம் பாதிக்கப்படாத முறையில் ஒவ்வொரு வைத்தியமுறையிலும் தீர்க்கப்படக்கூடிய ரோகங்களை இனம் கண்டு அதற்கேற்ற சிகிச்சைமுறைகளை மக்கள் பெற்று சுகமடையவேண்டிய நிலையை உருவாக்க வேண்டும்.

இலைமறைகாய் போல் தேசிய மருத்துவத்தில் உள்ள விடயங்களை ஆய்வுக்கு உட்படுத்துவது மூலம் விஞ்ஞான பூர்வமாக வெளிப்படுத்தும்போது தேசிய மருத்துவமும் மக்களைச் சென்றடையும் என்பதில் ஐயமில்லை.

### மக்கள் பயனடைவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்

இரு வைத்திய முறையைச் சார்ந்தவர்களும் தங்கள் வரையறைக்குட்பட்டு பொதுவான ஒரு சுகாதார சேவையை மக்களுக்கு வழங்கவேண்டும்.

பல மேலைத்தேய வைத்திய நிபுணர்கள் தேசிய மருத்துவ மாணவர்களுக்கு விரிவுரைகளை வழங்குகின்றார்கள். அத்துடன் ரோகத்தை நிச்சயிப்பதற்கு தேசிய மருத்துவத்துக்குக் கூறப்படாத வழிமுறைகளையும் கற்பிக்கின்றார்கள்.

அதேநேரத்தில் சிலர் ''இரு வைத்திய முறைகளும் வேறுபட்டவை. தேசிய மருத்துவர்களுடன் இணைந்து செயற்படுவது வைத்தியசபையினால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது'' என வாதிக்கின்றனர்.

ரோகத்தை நிச்சயிக்கும் வழிமுறைகளை அறிந்திருந்தால் காலதாமதமின்றி ஒரு நோயாளியை உரிய ஆரோக்கியசாலைக்கு அனுப்பிவைக்கலாம். உதாரணமாக புற்றுநோய்க்குரிய அறிகுறிகள் காணப்பட்டால் அந்த நோயாளியை புற்று நோய் நிபுணரிடமோ அதற்கான ஆரோக்கியசாலைக்கோ அனுப்பிவைக்கலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மேலைத்தேய மருந்துகளை தேசிய மருத்துவர்கள் பாவிக்கலாம் என்ற வாதத்தை நான் முன்வைக்கவில்லை.

கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்திய சாலையில் பிராந்திய சுகாதார அத்தியட்சகர் டாக்டர் சி.கனகசபையின் அனுமதியுடன் மகப்பேற்று விடுதி ஒன்றை 1990 ஆம் ஆண்டு ஆரம்பித்து செயற்படுத்தினோம்.

1996ஆம் ஆண்டு வரை சுமார் 900 இற்கு மேற்பட்ட பிரசவங்கள் அங்கு நடைபெற்றன. எங்களால் இயலாத நிலையில் சில கர்ப்பிணிகளை மகப்பேற்று வைத்திய நிபுணர் பேராசிரியர் சிவசூரியாவின் அனுமதியுடன் யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தோம்.

இதனால் இடம்பெயர்ந்த மக்கள் பலர் 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை நன்மை பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பில்



தேசிய மருத்துவத்துறையைச் சார்ந்தவர் களுக்கு எந்த ஒரு விடயமும் தெரியாது அல்லது புரியாது என்று சொல்வதைவிட அவர்களுக்குத் தெரியாதவற்றை தெளிவுபடுத்தி புரியாததைப் புரியவைத்தால் பொதுமக்கள் நன்மையடைவார்கள்.

**சுகாதார சேவையில் தடுப்பு**

உலக சுகாதார ஸ்தாபனம் 1976 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக நாடுகளின் சுகாதாரக் குழுக் கூட்டத்தில் பின்தங்கிய மற்றும் கிராமப் புறங்க ளில் சுகாதார சேவையை விஸ்தரித்தால் அதில் தேசிய மருத்துவர்களைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானித்தது.

விசேடமாக ஆரம்ப சுகாதார சேவையில் தேசிய மருத்துவர்கள் ஆற்றக்கூடிய சேவைகளை யும் குறிப்பிடப்பட்டிருந்தது.

அ. சுகாதாரக் கல்வி - ஆரோக்கியத்தைப் பேணவும் நோய் வராமல் தடுக்கவும் செய்யவேண்டி யவை.

ஆ. உணவு- தேசிய உணவுகளும் அவற்றின் பயன்பாடும்.

இ. தாய் சேய் நலம்- கர்ப்பிணிகளுக்கான உணவு, உடற்பயிற்சி குழந்தையின் வளர்ச்சிக்கான ஆகா ரம், நடைமுறை.

ஈ. சுற்றாடற் சுகாதாரம்- சுத்த நீரைப்பெறுதல் தொற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு.

உ. நோய்த்தடுப்பு முறைகளும் ரோகங்களைக் கட்டுப்படுத்தும் முறைகளும்.

உணவு, வாழ்க்கைமுறை, ஆரோக்கியம் பற்றி தேசிய மருத்துவம் பல விடயங்களை மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்குத் தன்னகத்தே கொண் டுள்ளது. இவற்றை மக்கள் பெறவேண்டு மானால் ஒரு பொது சுகாதார சேவை அவசி யமாகின்றது.

இரு மருத்துவ சேவைகளும் புரிந்துணர்வுடன் செயலாற்றும்போது ஒரு மருத்துவ சேவையினால் தீர்க்கமுடியாத ரோகத்தை மற்ற மருத்துவ சேவையினால் தீர்க்கமுடியும். இவ்வாறு செயற்பட் டால் இரு வழியிலும் நோயாளர் பரிமாற்றத்தை மேற்கொள்ளலாம். அத்துடன் இந்த ரோகத்துக்கு இந்த மருத்துவமுறைதான் சிறந்தது என அறிவுரை யும் வழங்கலாம்.

நோயை நிதானிப்பதற்கு நோயாளரின் சரித்தி ரம், உடற்பரிசோதனை, ஆய்வு கூடப்பரிசோதனை என்பன அவசியம். உதாரணமாக நீரிழிவு அல்லது சலரோகத்தை நிச்சயிப்பதற்குத் தேசிய மருத்து வத்தில் ஒரு சிறுநீர் கழித்த இடத்தில் எறும்புகள் மொய்ப்பதை ஓர் அனுமானப் பரீட்சையாகக் குறிப்பிட்டுள்ளனர்.

விஞ்ஞான வளர்ச்சியின் தாக்கம் பலதுறைகளி லும் பிரதிபலிக்கும்போது தேசிய மருத்துவர் களும் சிறுநீர்ப் பரிசோதனை, இரத்தப் பரி சோதனை, மலப் பரிசோதனை போன்றவற்றைச் சிபார்சு செய்வதில் எந்தத் தவறும் இருப்பதாகத் தெரியவில்லை.

அந்தக் காலத்தில் உள்ள சூழ்நிலையில் எழுதப் பட்டவற்றை தற்கால சூழ்நிலைக்கேற்ப நடை முறைப்படுத்துவது நியாயமானது. தேசிய மருத்துவர்கள் என நான் இங்கு குறிப்பிடுவது பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுப் பட்டம் பெற்றவர்களையே. ஏனெனில் அவர்களது பாடத் திட்டம் மேற்குறிப்பிட்ட விடயங்களை உள்ளடக்கியதாகும்.

தற்போது உலகில் காணப்படும் ரோக நிலை களை ரோக நிச்சயம் செய்வதற்குரிய வழிவகைகள் வைத்தியனுக்குத் தெரிந்தால்தான் மக்கள் அதனால் விரைவான பயனைப் பெறமுடியும்.

**காலத்தின் தேவை என்ன?**

அரசு தேசிய மருத்துவத்தை அங்கீகரித்து அதற் கான கல்விமுறையையும் நடைமுறைப்படுத்துகின் றது. அதேபோல் சுதேச வைத்திய அமைச்சும் தேசிய மருத்துவர்களை அங்கீகரித்து அரச உத்தியோ கங்களை வழங்கியுள்ளது.

அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மேலைத்தேய, தேசிய மருத்துவ முறைகள் மக்கள் நலன் கருதி ஒரு வரையறைக்குள் புரிந்துணர்வுடன் செயற்படுவது காலத்தின் அவசிய தேவையாகும்.

இரு வைத்திய முறைகளும் புரிந்துணர்வுடன் செயற்படும் பட்சத்தில் வெளிக்கொண்டு வரப் படாத சில உண்மைகளை ஆய்வுகளின் மூலம் வெளிக் கொணர்ந்து சுகாதார சேவைக்கு மெருகூட்டலாம்.

**சித்த மருத்துவ மாணவரின் கல்விச் செயற்பாட்டு நிலை**

யாழ்.பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத் துறையின் செயற்பாடுகள் வகுப்பறையிலேயே இடம்பெறுகின்றன.

மருத்துவக் கல்வி வகுப்பறை விரிவுரைகளிலும் பார்க்க ஆரோக்கியசாலைப் பயிற்சிகளில் கூடுத லாகத் தங்கியிருக்க வேண்டும்.

சித்த போதனா வைத்தியசாலை கைதடியில் அமைந்துள்ள போதும் சித்த மருத்துவ மாணவர் களின் ஆரோக்கியசாலை பயிற்சி சம்பந்தமான விரிவான கலந்துரையாடல் துணைவேந்தர், துறைத் தலைவர், விரிவுரையாளர்கள், சுதேச வைத்திய அமைச்சின் செயலாளர், ஆயுள்வேத ஆணையாளர் ஆகியவர்களுக்கிடையே நடைபெற வேண்டும்.

உதாரணமாக எந்த ரோகங்களுக்கான பயிற்சி மாணவர்களுக்குத் தேவை என இனங்கண்டு அதற் கான ஆயத்தங்கள் செய்யப்பட வேண்டும்.

2ஆம், 3ஆம் வருட மாணவர்கள் மருந்து தயாரிப் பதில் போதனா வைத்தியசாலையில் பயிற்சி பெறக்கூடிய வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். 3 ஆம் வருட மாணவர்கள் ஆய்வுகூடப் பரிசோத னைகளை மேற்கொள்ளக்கூடிய பயிற்சியைப் பெற வசதிகள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

பலவகைப்பட்ட நோயாளர்களுக்கும் வழங்கக் கூடிய சித்த ஔடதங்கள் (மருந்துகள்) தயாரிக்கப் பட வேண்டும்.

உள்ளகப் பயிற்சி செய்யும் இறுதி வருட பரீட்சை யில் சித்தி எய்தியவர்களுக்கு தகுந்த பயிற்சிகள் வழங்குவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பேராசிரியர்
**சுப்பிரமணியம் பவானி**

(29 ஆம் பக்கம் பார்க்க)

# உயர்வு நவிற்சி



கவிஞர் ஒருவர் மிகவும் சோகமாக இருந் தார். என்ன விடயம் என்று விசாரித்தபோது அவர் மனைவி அவரைப் பேசிவிட்டார் என் பதை எப்படிக் கூறினார் தெரியுமா? ''அவன் தன்னுடைய சொல் அம்புகளால் என் இதயத் தைத் துளைந்து விட்டாள்!'' என்றார்.

கவிஞர் இல்லையா? அது தான் அப்படிச் சொன்னார்.

அது சரி! உண்மையாகவே அந்த அம்மா அப்படியா செய்தார்? இவருடைய இதயம் என்ன ஓட்டையாகவா போய் விட்டது?

இந்தப் பக்கத்தில் இருந்து எட்டிப் பார்த்தால் அந்த ஓட்டை வழியாக அடுத்த பக்கத்தில் இருப்பது தெரிகின்றதா?

அப்படியில்லையே?

கவிஞர் அதை மிகைப்படுத்திச் சொல்கிறார். அவ்வளவு தான்.

இலக்கியத்தில் இதை உயர்வு நவிற்சி என்று சொல்கிறார்கள்.

உயர்வு நவிற்சி என்பது இலக்கியத்தில் உள்ள ஓர் அணி! அதாவது அப்படி சொல்வதே ஓர் அழகு!

கவிதையில் இப்படிச் சொன்னால் பரவாயில்லை. ஆனால் இதையே எல்லா இடங்களிலும் சொல்லிக் கொண்டு இருக்க முடியாது!

ஒரு டாக்டரிடம் சென்று... '' என் மனைவி சொல் அம்புகளால் என் இதயத்தைத் துளைத்து விட்டாள் டாக்டர்!'' என்று சொன்னால்... காயம் பலமா? குறைவா? என்று கேட்பார்.

இப்படி மிகைப்படுத்தி சொல்வது இலக்கியத்திற்கு நன்றாக இருக்கும். விஞ்ஞானத்துக்கு அது நன்றாக இருக்காது.

அறிவியலை மிகைப்படுத்திச் சொல்லும் வேலையே இருக்கக் கூடாது! அப்படிச் சொன்னால் அது தப்பாகப் போய்விடும்.

ஏனென்றால் மிகைப்படுத்துகின்றது உணர்ச்சியின் வெளிப்பாடு! விஞ்ஞானச் சோதனையில் உணர்ச்சிக்கு இடமே இல்லை!

ஒரு விஞ்ஞானி சோதனை செய்தார் இரண்டு திரவத்தை ஒன்றாகக் கலந்து பளபள என்று ஒரு திரவம் உண்டாகும் என்று வைத்துக் கொள்ளுங்கள்.

உடனே அது எப்படி இருக்கும் என்பதை உள்ளது உள்ளபடி குறிப்பு எடுக்க வேண்டுமே தவிர அவரே அந்த பளபளப்பில் மயங்கி ''ஆகா! என் கண்ணையே பறிக்கிறதே! இது என்ன பொன்னா? முத்தோ? வைரமோ? வைடூரியமோ? என்று பேச ஆரம்பித்தால் விஞ்ஞானம் என்னத்துக்கு ஆவது?

யதார்த்தத்தை விட்டு விலகிப் போனால் உண்மையின் தன்மை சிதைந்து போய்விடும்! அறிவியல் அம்சம் குறைந்து விடும்!

அதனாலே, விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் செய்கின்றபோது எது அது எப்படிக் கிடைக்கின்றதோ அது அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். அதில் போய் உணர்ச்சி வசப்பட்டு அதிகப்படுத்திப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது!

ஒரு சோதனை தோல்வி- என்றால் தோல்வி தான்! கீழே விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை என்பது மாதிரி பேசிக்கொண்டிருக்கக் கூடாது.

விஞ்ஞானிகளுக்கும் கவிஞர்களுக்கும் உள்ள ஓர் அடிப்படையான வேறுபாட்ட விளக்குவதுதான் இன்றைய தகவலுடைய நோக்கம்!

விஞ்ஞானிகளும் கவிஞர்களும் ஒரே விஷயத்தில் சம்பந்தப்பட்டால் சில சிக்கல்கள் வரலாம். அதுக்கு ஓர் உதாரணம்

ஒரு கணவன்-மனைவி!

கணவன் ஒரு கவிஞர்! மனைவி ஒரு விஞ்ஞானப் பேராசிரியை!

அந்தக் கணவன் தன் மனைவியுடைய அழகைப் பாராட்டி ஒரு கவிதை எழுதப் போகிறேன் என்று சொன்னார்.

அதற்கு இன்னொருத்தர்''எதுக்கும் கொஞ்சம் எச்சரிக்கையாக இருங்கள் என்று சொன்னார்.

'' இதில் என்ன எச்சரிக்கை வேண்டியிருக்கு? மனைவியைப் பற்றிக் கணவன் கவிதை எழுதக் கூடாதா? நீங்கள் சும்மா இருங்கள்!'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

இரண்டு நாள் கழித்து அதி வேகமாகத் திரும்பி வந்து ஐயா! நீங்கள் சொன்னதுதான் உண்மை நான் கொஞ்சம் எச்சரிக்கையாகவே இருந்தி ருக்கலாம்?'' என்றார்.

''என்ன நடந்தது?'' என்று விசாரித்தேன்! ''ஒன்றுமில்லை ஐயா ஒரு கவிதை எழுதினேன் பெண்களுக்கு இடைமெலிந்திருப்பது அழகு. அது தான் பல கவிஞர்கள் அதை ''நூல் இடை'' என்று ஏற்கனவே பாடியிருக் கிறார்கள்.

நான் இன்னும் ஒரு படிமேலே போய் ''இல்லாத அவள் இடையை'' என்று எழுதினேன் அதாவது இடை என்ற ஒன்று இல்லவே இல்லை என்று எழுதினேன். அதைப் பார்த்துவிட்டு என் மனைவி சண்டைக்கு வந்துவிட்டாள் ஐயா!'' என்றார்.

மனைவியை கூட அவர், இவர் என்று சொல்வார். அவ்வளவு மரியாதை!

''ஏன்!'' என்று கேட்ட போது

''எனக்கு இடையே இல்லை என்று எழுதி இருக்கிறீங்களே! அப்படி என்றால் நான் இரண்டு துண்டாகவா இருக்கிறேன்?'' என்று கத்த ஆரம்பித்து விட்டாள்.

நான் மெதுவாகச் சமாதானப்படுத்தி ''இல்லை! என்று சொன்னால்'' ''உண்மையாகவே இல்லை என்று நினைக்கக்கூடாது! என்று விளக்கம் கொடுத்தேன்! சரி என்று ஒத்துக் கொணடார்'' மறுநாள் காலையில் நான் சாப்பிட உட்கார்ந்தேன் வெறும் தட்டைக் கொண்டு வந்து வைத்துச் சாப்பிடுங்கள் என்று சொன்னார்.


''இட்லி வைக்கவில்லையா?'' என்று கேட்டேன்.

''இல்லை!'' என்றார். என்ன இப்படி சொல்கிறாய் என்றேன்! ''இல்லை'' என்று சொன்னால் உண்மையாகவே இல்லை என்று நினைக்கக் கூடாது. இருக்கிறதாக நினைத்துச் சாப்பிடுங்கள் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார் ஐயா! என்று புலம்ப ஆரம்பித்தார் அந்தக் கவிஞர். அறிவியலும் அழகியலும் மோத ஆரம்பித்தால் அதோட விளைவு இப்படித்தான் இருக்கும்!

கோ.சுவாமிநாதன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுநீர்க் கல்லைக் கரைக்கும் அற்புத பானம் இளநீர்



தண்ணீர்த் தாகத்தை மட்டுமல்ல நோய்கள் ஏற்படாமலும் தவிர்க்கவும் உதவுகிறது இளநீர்.

இளநீரை தினமும் அருந்தி வந்தால் அது சிறுநீர்க் கல்லை கரைக்கும் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தண்ணீர் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள இளநீரை அருந்துங்கள் என்றால், தேங்காய் யானை விலை குதிரை விலைவிற்கும்போது... இளநீரையாவது... அருந்துவதாவது.. என்று எண்ணினால் சிறு நீர்க்கல் நோயில் அவஸ்தைப்படவும் இலட்சக்கணக்கில் பணத்தைச் செலவளிக்கவும் நீங்கள் சம்மதமா?

வழிப் பயணங்களின்போது தாகம் ஏற்பட்டால் கடைத்தெருக்களில் குளிர் பானமொன்றை வாங்கி அருந்துவதும் வீடுகளிலிருப்போர் பெரும்பாலும் குளிர்சாதனப்பெட்டி யிலிருந்து சில்லிடும் ஏதோவொரு குளிர்பானத்தை அருந்துவதும் இன்றைய நவீன உலகின் வழமையாகிவிட்டது.

ஆனால் அவற்றைவிட சாதாரண இளநீர் ஒன்றையோ செவ்விளநீர் ஒன்றையோ தாகம் ஏற்படும்போது அருந்துவது சாலச்சிறந்தது என மருத்துவர்கள் தெரிவிக்கின் றனர். மருத்துவர்கள் அவ்விதம் இளநீரைச் சிபார்சு செய்வதற்குக் காரணிகள் நிறையவே உள்ளன.

அந்தவகையில் மருத்துவக் குணங்கள்கொண்ட மகத்தான ஔஷத மொன்றாக இளநீர் விளங்குகிறது. எட்டு மாதங்கள் வரையில் கடந்துள்ள பச்சை நிறமான இளம் இளநீரில் சுக்ரோஸ், குளுக்கோஸ் மற்றும் ப்ருக்ரோஸ் என்ற இலகுத்தன்மை வாய்ந்த சீனி வகைகள் அடங்கியுள்ளன. ஒன்பது மாதம் வரையில் கடந்துள்ள இளநீரில் குளுக்கோஸ் மற்றும் ப்ருக்ரோஸ் கீழ்மட்டத்துக்கு சுக்ரோஸ் அளவு உச்சமட்டத்தை அடைகிறது. இவற்றைவிட இளநீரில் "எஸ்கோபின்" எனப்படும் ஒருவித விற்றமின் சீயும் அடங்கியுள்ளது.

மாறுபட்ட சூழல், பொருத்தமற்ற செயற்பாடுகள், அதிகமாகச் சிரமப்பட்டுக் களைப்படைதல், நீண்டநேரம் விழித்திருத்தல், விசேடமாகக் கஷ்டப் பிரதேசங்களில் அருந்தநேரும் கடினத்தன்மை வாய்ந்த நீரிலுள்ள அதிகளவு கல்சியம் என்பவற்றால் இன்று பெருமளவிலானோர் சிறுநீரகத்தில் கல் உருவாகும் நோயினால் பெரிதும் அவஸ்தைப்படுகின்றனர்

சிறுநீரகக் கல் உருவாகுவதற்கு ஒக்ஸலிக் அமிலம் செறிந்து காணப்படும். தக்காளி, பசளி, கோவா போன்ற மரக்கறி வகைகள் மற்றும் அன்னாசி போன்ற பழவகைகளை அதிகமாக உட்கொள்ளவதும் காரணமாவதாக மருத்துவ விஞ்ஞானம் தெரிவிக்கிறது.

-சரா.

(தொடரும்)

# உலகில் மிகக் குட்டையான இளம் பெண்



உலகிலேயே மிகச் சிறிய குட்டையான பெண் இவர். சுமார் 59.69 சென்ரி மீற்றர் உயரமும் 5.25 கி.கிராம் எடையும்கொண்ட இவரது பெயர் ஜோதி ஆம்கேத என்பதாகும். மத்திய இந்தியாவின் நாக்பூர் என்ற இடத்தைச் சேர்ந்த இவருக்கு 15 வயதாகின்றது. இவரது பிறப்பில் எதுவித குறைபாட்டையும் காணாத பெற்றோருக்கு 5 வயதாகியபோதுதான் இவரது வளர்ச்சியில் கோளாறு இருப்பது தெரியவந்தது.


முழுவளர்ச்சியடைந்த நிலையில் இனிமேல் அவர் வளரக்கூடிய சாத்தியம் இல்லை. எனினும் வாழ்க்கையை மிக மகிழ்ச்சியுடன் அனுபவிக்கும் அவர் எதிர்காலத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ள இருக்கிறார்.


-ரம்யன்.

# சிந்திக்க சில துணுக்குகள்

* உள்ளத்தை வென்றவன் உலகை வென்றவன் ஆகிறான்.
* விதைத்தது எதுவோ அதுவே விளைவைத் தரும்.
* நீராடுவதால் உடல் அழுக்குப் போகிறது. இறைவன் திரு நாமத்தால் மன அழுக்கு மறைகிறது.
* தன்னைத்தானே சரியாக நடத்த முயற்சித்தால் உலகம் தானாகத் திருந்தும்.
* முறையாக உழைப்பவரே உயர் நிலையை அடைவார்கள்.
* பிறர் நலமும் அவருக்கான சேவையும் வாழ்வுக்கு வெற்றி தரும்.
* நன்மை செய்பவனுக்கு நன்மையே வந்துசேரும்.
* நல்ல செயல்கள்தான் நல்ல பிரார்த்தனையாகும்.
* தன் கையே தனக்கு உதவி என்று எண்ணுபவன்தான் வசதி படைத்தவன்.
* உறுதிப்பாடுகளை உடையவர்கள்தான் அருஞ்செயல்களை ஆற்றுவார்கள்.

# மலர்களும் மருத்துவங்களும்





மலர்கள் அழகுள்ளவை, மணமுள்ளவை. அவற்றிற்கு மருத்துவக் குணங்களுமுண்டு. மலர்களில் அநேகம் தைலம் தயாரிக்க உதவுகின்றன. பல கசாயம் வைத்துச் சாப்பிடக் கூடியவை.

சிலர் மலர்களை வதக்கித் துணியில் முடிந்து இளஞ் சூட்டுடன் ஒத்தடம் கொடுத்துச் சிலவகை வீக்கங்களிலிருந்து நிவாரணம் பெறுகின்றனர். சில மலர்களைச் சர்பத் செய்து சாப்பிடுவதன் மூலம் உடலில் ஏற்படும் எத்தனையோ நோய்கள் குணமடைகின்றன.

### மல்லிகைப் பூ

*பெண்கள் மல்லிகைப் பூவைத் தலையிற் சூடிக் கொண்டால் தலைவலி போகும். அல்லது தலையணைக்குள் மல்லிகையைத் தூவிப் படுத்தாலும் தலைவலி தீரும்.

*மல்லிகைப் பூவைக் கொண்டு தைலம் தயாரித்துத் தலை முழுகி வந்தால் உடல் எப்போதும் குளிர்ச்சியாக இருக்கும்.

*மல்லிகைப் பூ எண்ணெய்யைத் தலையில் தேய்த்து வந்தால் கண்ணெரிச்சல் நீங்குவதுடன் தலைவலியும் நீங்கும். கண்பார்வையும் தெளிவாக இருக்கும்.

*உடலில் தேய்த்துக் குளித்து வந்தால் சரும நோய்கள் குணமாகும்.

*கைக்குழந்தைகள் வயிறு நிறையத் தாய்ப்பால் குடித்து விட்டுச் சிரமப்படுவர். அதற்காக மல்லிகைப் பூக்களை மார்பகங்களில் வைத்துக் கட்டிக்கொண்டு வந்தால் மூன்று நாள்களில் பாற்சுரப்புக் குறைந்துவிடும்.

### அலரிப் பூ

*அலரிப் பூவை அடிக்கடி தலையில் சூடிக்கொண்டால் தலையில் பேன் பிடிக்காது. அலரி வேரும் அலரி விதையும் கொடுமையான நச்சுப் பொருள்கள். நல்ல மருந்துவர்கள் இதிலுள்ள நச்சுத் தன்மையை நீக்கிவிட்டு மருத்துவப் பொருள்களாகப் பாவிக்கின்றனர்.

*அலரிப் பூ வெள்ளைபடுதல் நோயைக் குணப்படுத்த உதவுகின்றது. காய்ச்சல், பித்தம், தலையெரிச்சல் ஆகியவற்றையெல்லாம் போக்குகின்றது.

-சோபி.

(மலர்கள் தொடரும்)

# ஆயுளைக் கூட்ட எளிய வழிகள்

ஆரோக்கியத்துடன் நீண்ட நாள்கள் வாழ வேண்டும் என்பது ஒவ்வொரு மனிதனின் விருப்பமும் ஆகும்.

அவ்வாறு வாழ வேண்டுமானால் நான்கு முக்கிய வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்கிறது மருத்துவ ஆய்வு ஒன்று.

உடற்பயிற்சி, அதிக அளவில் மது அருந்தாமை, அன்றாட உணவில் பழங்கள் மற்றும் காய்கறிகளை மிகுதியாகச் சேர்த்துக் கொள்வது மற்றும் புகைப்பழக்கம் இல்லாமை ஆகிய நான்கினையும் பின்பற்றினால் நமது ஆயுள்காலத்தில் 14 ஆண்டுகளைக் கூட்டலாம் என்கிறது இந்த மருத்துவ ஆய்வு.

இதனை இங்கிலாந்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் மருத்துவ ஆய்வு கவுன்சில் ஆகியவை இணைந்து மேற்கொண்டன.

45 வயது முதல் 79 வயது வரையிலான 20 ஆயிரம் பேர்களைக் கொண்டு இந்த ஆய்வுக் 1993ஆம் ஆண்டில் இருந்து 2006ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சமூகத்தில் பலதரப்பட்ட மக்களையும் வைத்து மேற்கொள்ளப்பட்ட இந்த மருத்துவ ஆய்வில் நம்பகத்தன்மை மிகுந்து காணப்படுவதாக மருத்துவர்கள் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# அதிகம் படிக்காவிட்டால் இதய நோய் வரும் ஆபத்து



தேர்வு நேரங்களில் உருவாகும் மன அழுத்தம், பயம் ஆகியவற்றைப் போக்கப் படிப்பதில் சிறு மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று ஆய்வறிக்கைகள் கூறுகின்றன.

இரத்த அழுத்தத்திற்கும் இது நன்மை பயக்கும் என்று பிரிட்டிஷ் ஹார்ட் பவுண்டேசன் முடிவுகள் தெரிவிக்கின்றன.

இதயநோய்கள், மாரடைப்பு மற்றும் சிறுநீரகச் செயலிழப்புக்கு அதிக இரத்த அழுத்தம் வழிவகுக்கும். மன அழுத்த மும் இதய நோய்களுக்குக் காரணமாக அமைகிறது.

அதேசமயம் படிப்பது குறைவாக இருப்பதாலும் இதய நோய்கள் உருவாகின்றன என்ற முடிவுகள் முப்பதாண்டுகளாக 3,890 பேரிடம் நடத்திய ஆய்வுகளின் அடிப்படையில் வெளியாகியுள்ளன. இதில் மூன்று வகைப் பிரிவினராக மக்கள் பிரிக்கப்பட்டனர்.

குறைவாகப் படித்தவர்கள், நடுத்தரமாகப் படித்தவர்கள் மற்றும் அதிகம் படித்தவர்கள் எனப் பகுக்கப்பட்டு ஆய்வு நடத்தப்பட்டது. இரத்த அழுத்தம் 3 ஆண்டுகளுக்குப் பின் கணக்கிடப்பட்டது. பெண்களில் அதிகம் படித்தவர்களைக் காட்டிலும் குறைவாகப் படித்தவர்களுக்கு இரத்த அழுத்தம் அதிகம் காணப்பட்டது.

இந்த ஆய்வு குறித்துப் பேராசிரியர் சுரிக் லோக்ஸ் கூறுகையில், குறைந்த படிப்புடைய பெண்கள் பல வகையிலும் பாதிக்கப்படுகின்றனர்.

மோசமான வாழ்க்கைச் சூழ்நிலை, வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்தல் போன்றவையும் இதற்குக் காரணம் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவுகளைத் திறந்தவன் (37)




யூலியன் அசாஞ்சே பற்றிய ஒரு விறு விறு தொடர்

அமெரிக்காவும் யூலியனும் நேருக்கு நேர் மோதிக் கொண்ட தருணங்கள் எல்லோரையும் பரபரப்பின் உச்சத்துக்கே கொண்டு சென்றன. உலகின் நிகரற்ற வல்லரசை எதிர்த்து தன்னந்தனியனாக ஒரு மனிதன். கோலியாத் என்ற இராட்சதனை எதிர்த்து நின்ற தாவீது என்னும் சிறுவனைப் போல யூலியனின் நிலை. கோலியாத்தை வீழ்த்த தாவீதுக்கு கவண் (கெற்றப்போல்) இருந்தது போன்று யூலியனுக்கு விக்கிலீக்ஸ். அந்த அடியில் குப்புற விழுந்த அமெரிக்கா ஆவேசத்தோடு எழுந்தது. யூலியனும் விடவில்லை. அமெரிக்காவின் ஏவுதலில் இன்ரபோல் யூலியனை பிரிட்டனில் சல்லடை போட்டுத் தேடிக் கொண்டிருக்கையில், நிதமும் அமெரிக்காவின் மானத்தை விலைபேசும் கேபிள் ஆவணங்கள் விக்கிலீக்ஸில் புதிது புதிதாக வந்தபடியே இருந்தன.

அமெரிக்கா யூலியனின் அடிமடியில். விக்கிலீக்ஸில் தொடர்ச்சியாக ஆவணங்கள் வெளியாவதற்கு யூலியனின் உழைப்போடு பெருந்தொகைப் பணமும் முதலீடாகத் தேவை. ஆயினும் யூலியனின் ஊடகப் பயணத்துக்கு தோள் கொடுப்பதற்கு முன்வந்த பல்லாயிரக் கணக்கானோர் பெருந் தொகைப் பணத்தை விக்கிலீக் ஸுக்கு அனுப்பி வைத்தபடியே இருந்தனர். அந்தப் பணத்தை நேரடியாக அனுப்பினால் தாமும் குறி வைக்கப்பட்டு விடு வோம் என்ற முன்னெச்சரிக்கை காரணமாகவும், இடக்கை செய்வதை வலக்கை அறியக்கூடாது என்கிற எண்ணம் காரணமாகவும் மாற்று வழியூடா கவே அந்தப் பணத்தை விக்கிலீக்ஸிடம் சேர்ப்பித்த னர்.



யூலியனை ஆராதிக்கும் ஆயிரக்கணக்கானோர் பணத்தை அனுப்பி வைக்கும் வழிகளான, விக்கிலீக்ஸ் தளத்தின் சுவிஸ் வங்கிக் கணக்குகள், பேஃபால் (Pay pal) தளத்தின் கணக்குகள், வீசா காா்ட் (Visa Card) மற்றும் மாஸ்டர் காா்ட் (Master Card) போன்ற கடன் அட்டைகள் எனச் சகலமும் அமெரிக்காவின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் முடக்கப்பட்டன. விக்கிலீக்ஸ் தளத்தின் தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கும், யூலியன் இணையத்தில் ஆடும் கபடியாட்டத்துக்கும் பணம் மிக மிக அவசியம். விக்கிலீக்ஸ் தளத்தில் வெளியிடும் தகவல்களை உடனுக்குடன் அவர்களுடன் சேர்ந்து வெளியிடும் அமெரிக்க, ஐரோப்பிய அச்சு ஊடகங்கள் மூலம் விக்கிலீக்ஸ் தளத்துக்கு நிதி அளிக்கப்படுவதாக பரவலாகப் பேசப்பட்டாலும், யூலியனின் முக்கிய நிதி ஆதாரம் விக்கிலீக்ஸ் தளத் துக்கு, பேஃபால் மற்றும் வீசா, மாஸ்டர் கடனட்டைகள் மூலம் நன்கொடை வழங்குபவர்கள்தான். தனது ஜீவ நாடியான நிதி ஆதாரங்கள் முடக்கப்பட்டதும், இனி மறைந்திருந்தும் உபயோகமில்லை என்பதை யூலி யன் உணர்ந்து கொண்டான். தன்னை இழந்தாவது விக்கிலீக்ஸின் உயிரைத் தக்க வைப்பதற்காக ஊடக வரலாற்றில் துன்பியலான அந்த முடிவை எடுப்பதற்கு யூலியன் தள்ளப்பட்டான். விதியின் கரங்களில் விக்கிலீக்ஸ் நிறுவுநரின் வாழ்வு ஒப்படைக்கப்பட்டது.

2010 டிசெம்பர் 8ஆம் திகதி தானாகவே முன்வந்து யூலியன் அசாஞ்சே லண்டன் பொலிஸில் தன்னுடைய சட்டத்தரணிகள் முன்னிலையில் சரணடைந்தான்.வெஸ்ட்மினிஸ்டர் நீதிமன்றத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட அவனை 14ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு வரும்வரை சிறைக்காவலில் வைக்கும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.அதிகாரத்தின் சிறையிலிருந்து மக்கள் எல்லோரும் விடுபடவேண்டுமென்ற விருப்புடன் இணையத்தை ஆயுதமாக்கிப் போரிட்ட இணையப்போராளி சிறகுகள் வெட்டப்பட்ட பறவையாகச் சிறையில் அடைக்கப்பட்டான். தன்னைப் பின் தொடரும் அபாயங்களில் இருந்து தப்புவதற்காகவும், இருளுக்குள் ஒளிந்திருக்கும் மர்மங்களைக் கண்டுபிடிக்கவும் நாடோடியாக அலைந்து திரிந்த யூலியனின் கால்கள் சிறையில் ஓய்வெடுத்துக் கொண்டன. யூலியன் சிறைக்குள் அடைபட்டிருந்த சிலநாள்களில் உலகெங்கும் அரங்கேறிய காட்சிகள் அமெரிக்காவின் வயிற்றில் புளியைக் கரைத்துவிட்டது. அந்த நாள்கள் யூலியனின் சர்வவல்லமையையும், உலகெங்கும் அவனுக்குள்ள ஆதரவாளர்களின் எண்ணிக்கையையும் அவர்களின் சக்தியையும் வெளிப்படுத்தியது.

ஒளண்யன்

சிறைக்குச் செல்வதற்கு முன்பு என் கரங்களுக்கு விலங்கிடப்பட்டு விட்டாலும் விக்கிலீக்ஸின் குரல் வளையை எவராலும் நெரிக்கமுடியாது. விக்கிலீக்ஸ் வழக்கம் போல் செயற்படும் என்று சொல்லிச் செல்ல யூலியன் மறக்கவில்லை. அதுவரை யூலியனால் எதுவும் சாத்தியம் என்று நம்பிக்கை கொண்டிருந்த விக்கிலீக்ஸ் ஆர்வலர்களுக்கு இச்சம்பவம் மிகுந்த ஏமாற்றத்தையும், கோபத்தையும் கொடுத்தது. யூலியனைச் சரித்து விட்டதால் இனிப்பயப்படத்தேவையில்லை! என்று அமெரிக்காவும் அதன் கைக்கூலிகளும் பெருமூச்சைவிட்டன. ஆனால் எதிர்பாராத திசையில் இருந்து, எல்லோரையும் அதிரவைக்கும் இன்னொரு இணையத்தாக்குதல் அமெரிக்காவுக்குத் தாளம் போட்டு, யூலியனின் முதுகில் குத்திய நிறுவனங்கள் மீது தொடுக்கப்பட்டது. அந்தத் தாக்குதல் என்ன? அதை நிகழ்த்தியது யார்?

*(திரைகள் இன்னும் திறக்கும்)*


## Calling for Tender
## Teaching Hospital, Jaffna.

01. The Chairman of the Divisional Tender Board, Teaching Hospital, Jaffna will receive separate sealed tenders for the following works up to 10.00am on 12.03.2011. Tender form may be collected from Director, Teaching Hospital, Jaffna up to 05.03.2011 on payment on non refundable deposit of Rs. 1,000/-.

| No | Nature of Work | Non Refundable Deposit |
|---|---|---|
| 01. | Painting of Ward 30 | Rs, 1,000 |
| 02. | Construction of Storage Facilities for Waste Management | Rs, 1,000 |

02. Tenders will be opened immediately after closing at the office of the Director, Teaching Hospital, Jaffna. Tenders or their authorized representative are requested to be present at the opening Tenders.

03. Tender forms are issued only to the contractor who has valid registration in Grade "M9" and above in the field of Building Constructions and other Institute of Constructions Training And Development (ICTAD) criteria and valid membership of National Construction of Contractors Association of Sri Lanka (NCCASL).

04. Sealed Tenders may be dispatched either by registered post or hand delivered to Director, Teaching Hospital, Jaffna or deposited in the Tender Box at Teaching Hospital, Jaffna on or before 10.00 am on 12.03.2011.

05. Tender Documents may be inspected free of charge at the Residence Engineers Office, CECB, Jaffna.

06. For further details please contact Hospital Secretary, Teaching Hospital, Jaffna.

**The Chairman,**
**Divisional Tender Board,**
**Teaching Hospital, Jaffna.**

(C/576583)


## 115 முன்னாள் போராளிகள் இன்று விடுதலை

கொழும்பு,மார்ச்.2

புனர்வாழ்வு நிலையங்களில் புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளிகளில் 115 பேரை மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு உறவினர்களுடன் இணைக்கவுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார்.

வவுனியா கலாசார மண்டபத்தில் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ள வைபமொன்றிலேயே இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஒற்றுமை, சமாதானம், புனர் வாழ்வு நிலைய அனுபவம், எதிர்கால நடவடிக்கைகள் போன்ற பல்வேறு தொனிப் பொருள்களில் புனர்வாழ்வு நிலையங்களிலுள்ள முன்னாள் போராளிகளுக்கிடையிலான சித்திரப் போட்டியும் இன்று நடைபெறவுள்ளது. (204)


### வீடு வாடகைக்கு

கொக்குவில், நந்தாவில் லேன்,கோவில் வீதிக்கு அருகில் அமைந்துள்ள சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு உடனடியாக வாடகைக்குண்டு.

தொடர்பு:0775056271

### வகுப்பு

ஜேர்மன், சுவிஸ், டொச் மொழி வகுப்பு எதிர்வரும் 7ஆம் திகதி முதல் அடுத்த பிரிவு ஆரம்பம். ஜேர்மன் நாட்டில் படித்த ஆசிரியரால் கற்பித்து பரீட்சைக்கு தயார் படுத்தப்படும். தொடர்பு- 0778245031,
Jaffna College,464 Hospital Road.

### யாழ்/கல்வி வலய மனைப்பொருளியல் ஆசிரிய ஆலோசகரான செல்வி யோகேஸ்வரி தம்பிராசா அவர்களின் சேவைநயப்பும் பாராட்டும்

செல்வி யோகேஸ்வரி தம்பிராசா

**சேவை விவரம்**



1977-1979 வரை கோப்பாய் மகாவித்தியாலயம்
1980-1982 வரை ஆசிரிய கலாசாலை கோப்பாய்
1983-1989 வரை நல்லிணைப்பாற்றி கன்னியர் பாடசாலை
1990-1996 டிசெம்பர் வரை - அச்சுவேலி மத்திய கல்லூரி
1991 ஜனவரி - இன்றுவரை ஆசிரிய ஆலோசகர் கல்வி வலயம்

மனைவளம் சிறக்க கலைபல கற்று மகத்தான ஆசிரியப் பணியதனில் இணைந்தவர். அன்பு, கனிவு, பொறுமை, அடக்கம், ஆளுமை விருத்தியுடன் உள்ளத்தில் உயர் பண்புத் தேர்ச்சிகளால் உருவாக்கப்பட்ட செல்வி யோகேஸ்வரி தம்பிராசா அவர்கள் உன்னதமான பணியிலே தன்னை முற்றுமுழுதாக அர்ப்பணித்தவர். மகளிரின் நலனோம்பி மாணவர் சமூகம் பலவற்றை உயர்த்தி வைத்தவர். ஆசிரிய ஆலோசகர் பணியதனில் இரு தசாப்தங்களாக எண்ணிலடங்காத கருமங்களை ஆற்றி எல்லோர் மனத்திலும் இடம்பிடித்துள்ளார். கற்றோரும் மற்றோரும் போற்றும் வண்ணம் வாழ்ந்தும் வாழ வழிகாட்டிய யோகேஸ்வரி அவர்கள் ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் பணிகள் பல புரிந்து அகவை அறுபதில் கால்பதித்து இளைப்பாறும் இவ்வேளை நோய் நொடியின்றி ஓய்விலும் தன் பணியை உத்வேகத்துடன் தொடரவும், மனநிறைவுடன் வாழவும் இறையருள் கூர வேண்டி வாழ்த்துகின்றோம்.

மனைப்பொருளியல் ஆசிரியர்கள்,
யாழ்.கல்வி வலயம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எகிப்து வந்திருந்த ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கெவின் ரூட்டை (இடது) அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் அகமத் அப்துல் கொயட், தலைநகர் கெய்ரோவில் வெளியுறவுத்துறை அமைச்சக அலுவலகத்தில் வரவேற்றார்.

# மக்களைக் கொன்று குவிக்கும் கடாபி நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்

## அமெ. ஜனாதிபதி ஒபாமா வலியுறுத்து

கெய்ரோ, மார்ச் 2

சொந்த மக்களைக் கொன்று குவிக்கும் கடாபி உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.

**''உடனே வெளியேறுங்கள்''**

அமெரிக்காவின் வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ஜேர்மனிய ஜனாதிபதி மார்க்கெல் ஏஞ்சலாவுடன் தொலைபேசியில் பேசினார்.

அப்போது ஜனாதிபதி ஒபாமா, ''தனது சொந்த மக்களை வன்முறையால் கொன்று குவித்துத்தான் அவர் பதவியில் இருக்கிறார் என்றால், அப்பதவியில் இருப்பதற்கான சட்டபூர்வ அந்தஸ்தை அவர் இழந்துவிட்டார் என்றுதான் அர்த்தம். அதனால் அவர் உடனடியாக லிபியாவை விட்டு வெளியேற வேண்டும்'' என்று கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பதவி விலக மறுக்கும் லிபியத் தலைவர் மும்மர் கடாபி மீதான நெருக்கடியை மேலும் அதிகரிக்கும் விதத்தில், ஐ.நா. பாதுகாப்புச் சபை வெளிநாடு செல்லத் தடை, சொத்து முடக்கம் ஆகியவை உள்ளிட்ட பல்வேறு பொருளாதாரத் தடைகளை விதித்தது.

நாளுக்கு நாள் மோசமாகி வரும் லிபியா நிலவரம் தொடர்பாக வெள்ளிக்கிழமை ஐ.நா. பாதுகாப்புச் சபை மீண்டும் கூடியது. அதில் லிபியா மீதான பொருளாதாரத் தடை விதிப்பது குறித்து, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் கொண்டு வந்த பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

அந்தப் பிரேரணை எதிர்ப்பின்றி, 15 உறுப்பு நாடுகளாலும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது. அத்தீர்மானத்தின்படி, தனது அண்டை நாடுகள் அல்லது வெளிநாடுகளுடன் லிபியா ஆயுதப் பரிமாற்றம் செய்யத் தடை; கடாபி, அவரது குடும்பத்தினர், அவரது நண்பர்கள், நெருக்கமான உதவியாளர்கள், அதிகாரிகள் ஆகியோரது சொத்துக்கள் முடக்கம்; கடாபியும் அவரைச் சார்ந்தோரும் லிபியாவைவிட்டுவெளியே செல்லத் தடை; மனிதப் படுகொலையில் ஈடுபட்ட குற்றத்துக்காக, லிபிய அரசை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி.,) விசாரிக்க சிபாரிசு ஆகியவை உள்ளிட்டவை உடனடியாக அமுலுக்கு வருகின்றன.

# சர்வதேச விண்வெளி மையத்தை அடைந்தது 'டிஸ்கவரி'

ஹூஸ்டன், மார்ச் 2

அமெரிக்காவின் டிஸ்கவரி விண்வெளி ஓடம் வெற்றிகரமாக சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை சனிக்கிழமை (பெப்ரவரி 26) அடைந்தது.

டிஸ்கவரி விண்வெளி ஓடம் அமெரிக்காவின் புளோரிடாவிலுள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து வியாழக்கிழமை புறப்பட்டுச் சென்றது.

சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தை விண்வெளி வீரர்கள் அடைந்ததும் அவர்களை அங்கு ஏற்கனவே ஆய்வில் ஈடுபட்டுள்ள விண்வெளி வீரர்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

டிஸ்கவரியைவிட்டு அதன் கொமாண்டர் ஸ்டீவ் லின்ஸ்டே வெளியேற அவரைத் தொடர்ந்து மற்ற வீரர்களும் வெளியேறினர். சர்வதேச விண்வெளி மையத்தில் ஏற்கெனவே 6 வீரர்கள் ஆய்வில் ஈடுபட்டுள்ளனர்.

இப்போது டிஸ்கவரி மூலம் 6 வீரர்கள் சென்றுள்ளனர். 11 நாள்கள் பயணமாகச் சென்றுள்ள டிஸ்கவரி, சர்வதேச விண்வெளி மையத்தில் இருந்து திரும்பியதும் அருங்காட்சியகத்துக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

# சிலியில் பூகம்பம்: பீதியில் மக்கள் ஓட்டம்

சாண்டியாகோ, மார்ச் 2

தென்அமெரிக்க நாடான சிலியில் ஞாயிற்றுக்கிழமை மாலை கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. வீடுகளும் கட்டடங்களும் குலுங்கின. இதனால் மக்கள் பீதி அடைந்தனர்.

உடனே தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி ஓட்டம் பிடித்தனர். பரபரப்பு ஓய்ந்த பின் மீண்டும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பினர்.

பூகம்பம் காரணமாகக் கட்டடங்களில் இலேசான கீறல்கள் ஏற்பட்டன எனத் தெரிவிக்கப்படுகிறது. பெரிய அளவில் சேதமோ, காயங்களோ ஏற்பட்டது எனத் தகவல் இல்லை. இதற்கிடையே ரிச்டர் அளவுகோலில் 6 புள்ளிகளாகப் பூகம்பம் ஏற்பட்டது என அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்துள்ளது. தெற்கு சிலியைமையமாக வைத்து இந்தப் பூகம்பம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு இதேநேரத்தில்தான் இங்கு ரிச்டர் அளவுகோலில் 8.8 புள்ளிகளாகக் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது.

அதில் 521 பேர் பலியானார்கள். 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்தனர்.

TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

அதியுயர் ஊடக விருதுகள் 2010

சிறந்த ஊடகவியலாளர்களை கௌரவிக்கும் 12 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி

2010 ஆம் ஆண்டிற்கான அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் விண்ணப்பங்களைக் கோருகின்றது.

2010 ஆம் அண்டில் பத்திரிகைத்துறையில் பல்வேறு செயற்பாடுகளிலும் திறமைகளை வெளிப்படுத்தியவர்களுக்கு விருதுகளை வழங்குவதன் மூலம் அவர்களது தொழிலுக்கு அங்கீகாரத்தை வழங்குகின்றது. இலங்கையில் ஊடகத்துறையில் பணியாற்றும் எல்லா ஊடகவியலாளர்களும் இந்த விருதுகளுக்காக விண்ணப்பிப்பதை ஊக்குவிப்பதோடு மும்மொழிகளிலும் பின்வரும் பிரிவுகளிலான விருதுகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டு செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்கு கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிரிவர்தன விருது.



ஊடகத்துறையைச் சேர்ந்த சிறந்த அனுபவம்வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96, கிருல வீதி கொழும்பு 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லது www.slpi.lk என்ற இணையத்தளத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கடைசித் தினம் 2011 மார்ச் மாதம் 31 ஆம் திகதி ஆகும்.

# 127 இந்திய மீனவர்கள் மீதான வழக்கை கைவிட்டது பாகிஸ்தான்

இஸ்லாமாபாத், மார்ச் 2

127 இந்திய மீனவர்கள் மீதான வழக்கை பாகிஸ்தான் அரசு கைவிட்டது. இதை இந்திய மீனவர்கள் கைது குறித்து விசாரிக்க அமைக்கப்பட்ட உயர் நீதிமன்றக் குழு, உச்ச நீதிமன்றத்தில் சனிக்கிழமை தெரிவித்தது.

இதையடுத்து கைதாகி பாகிஸ்தான் சிறைகளில் அவதியுற்றுவந்த இந்திய மீனவர்கள் 127 பேரும் தாயகம் திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தான்கடல் எல்லைக்குள் புகுந்து மீன்பிடித்தனர் என இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து அந்நாட்டுமீனவர்கள்அமைப்பு உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது.

இதை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உச்ச நீதிமன்றம், கைதாகியுள்ள இந்திய மீனவர்கள் குறித்து விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க தனிக் குழுவை அமைக்குமாறு சிந்து உயர் நீதிமன்றத்துக்கு உத்தரவு பிறப்பித்தது.

இதை ஏற்று உயர் நீதிமன்றம் தனிக்குழு அமைத்தது.

அந்தக் குழு இந்திய மீனவர்கள் 127 பேர் மீது பதிவு செய்யப்பட்ட 13 வழக்குகளைக் கைவிடுவதற்கான முடிவை எடுத்தது. அக்குழு தனது முடிவை உச்ச நீதிமன்றத்தில் இப்போது தெரிவித்துள்ளது.

இந்திய மீனவர்கள் மீதான வழக்குகள் கைவிடப்பட்டமை இரு நாட்டு மீனவர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டதை எதிர்த்து தன்னார்வ நிறுவனங்கள் வழக்குத் தொடுத்ததை அடுத்து 442 மீனவர்களை பாகிஸ்தான் அரசு விடுவித்தது.

கண்ணீர் அஞ்சலி

எமது கழக உறுப்பினரும் ஸ்ரீ சரவணபவன் சைவ உணவகம் உரிமையாளருமாகிய

கனகசபை சந்திரபாலன்

அவர்களின் மறைவைக் கேள்வியுற்றுத் துயரடைகின்றோம். அவரின் இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல.165, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (39-19-21)

யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிபியத் தலைநகர் திரிபோலி நோக்கி முன்னேறுகின்றது அரசு எதிர்ப்புப் படை

திரிபோலி, மார்ச் 02

லிபியாவில் அரசு எதிர்ப் புப் படையினர் தலைநகர் திரிபோலியை நோக்கி அசுர வேகத்தில் முன்னேறி வருகின்றனர். இதனால் அங்கு எந்த நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

லிபியாவை ஆட்சி செய்வோம் அல்லது எதிர்ப்பாளர்களைச் சுட்டுக் கொல்வோம் என்று லிபிய ஜனாதிபதி கடாபியும், அவரது மகனும் கூறியுள்ளனர் என ஏற்கனவே தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனவே, எதிர்ப்பாளர்களுக்கு எதிராக ஜனாதிபதி மும்மர் கடாபி அதிரடி நடவடிக்கைகள் ஏதேனும் எடுப்பாரா அல்லது பதவி விலக முன்வருவாரா என்பது மிகப்பெரிய கேள்விக் குறியாக உள்ளது.

இதனால் சர்வதேச சமூகத்தின் ஒட்டுமொத்த கவனமும் இப்போது லிபியாவை நோக்கித் திரும்பியுள்ளது. லிபியாவின் வான் பகுதியில் விமானங்கள் பறக்கத் தடை விதிப்பது குறித்து அமெரிக்காவும், ஐரோப்பியநாடுகளும்ஆலோசித்து வருகின்றன.

தலைநகர் திரிபோலியில் இருந்து சுமார் 50 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள அஷாவியா நகரில் இப்போது திரண்டுள்ள கடாபி எதிர்ப்புப் படையினர், திரிபோலியை நோக்கி வேகமாக முன்னேறி வருகின்றனர்.

கடாபி ஆதரவாளர்களுக்கும், எதிர்ப்பாளர்களுக்கும் அஷாவியா நகரில் பல இடங்களில் மோதல் ஏற்பட்டுள்ளது. இதனால் பல இடங்களில் தெருக்கள் போர்க்களமாக மாறிவிட்டன என அங்கிருந்து வரும் தொலைக்காட்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

**தடை ஏற்படுத்தும் கடாபி**

அஷாவியா நகரிலிருந்து திரிபோலிக்கு வரும் பாதைகளில் கடாபி ஆதரவு இராணுவத்தினர் தடைகளை ஏற்படுத்தியுள்ளனர். அப்பகுதியில் ஏராளமான சிப்பாய்களும் ஆயுதங்களுடன் குவிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்ப்பாளர்கள் இவர்களை நெருங்கும் பட்சத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்க இவர்கள் தயங்கமாட்டார்கள் என்று தெரிகிறது. இதனால் அப்பகுதியில் விரைவில் இரத்த ஆறு ஓடலாம் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

தலைநகரில் கடாபிக்கு ஆதரவாகக் கூடியுள்ள ஒரு பகுதியினர், தலைநகர் தங்கள் கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்றும் அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய நாடுகளின் சதிக்கு உள்ளானவர்கள் நாட்டின் அமைதிக்கு குந்தகம் விளைவிக்கின்றனர் அவர்கள் ஒடுக்கப்படுவார்கள் என்றும் தெரிவித்தனர்.

தாங்கள் இறுதிப் போருக்கு தயாராகிவிட்டனர் எனக் கிளர்ச்சியாளர்கள் அவர்களுக்குப் பதில் தெரிவித்துள்ளனர்.

**முக்கிய நகரங்கள் வீழ்ச்சி**

லிபியாவின் கிழக்குப் பகுதியை ஏற்கனவே கைப்பற்றிய கடாபி எதிர்ப்புப் புரட்சிப் படைகள், சனிக்கிழமை முக்கிய நகரங்களான ஜாவியா மற்றும் மிஸ்ரட்டாவைக் கைப்பற்றிவிட்டன.

பெங்காசி,அல்படா, டெர்ணா உள்ளிட்ட நாட்டின் கிழக்குப் பகுதிகளைக் கடாபி எதிர்ப்பாளர்கள் இராணுவத்தின் துணையுடன் கைப்பற்றினர். (த)

## கடாபி குடும்பச் சொத்து பிரிட்டனிலும் முடக்கம்

லண்டன், மார்ச். 2

லிபிய ஜனா திபதி கடாபி, அவரது குடும்பத்தினர் ஆகியோருக்கு பிரிட்டனில் உள்ள சொத்து, வங்கிக் கணக்கு உட்பட 20 பில்லியன் பவுண்ட்ஸ் மதிப்பிலான சொத்துகள் முடக்கப்பட்டுள்ளது என பிரிட்டன் அறிவித்துள்ளது.

லிபியாவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படாமல் இருக்கும் வகையிலும், ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் வகையிலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடாபிக்கு பிரிட்டனில் வங்கிக் கணக்குகளும், வர்த்தக மையங்களும், லண்டனில் 10 மில்லியின் பவுண்ட்ஸ் மதிப்புடைய வீடொன்றும் உள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (த)

## 100 நாள்களுக்குள் குறைகளை நீக்காவிட்டால் பதவி பறிபோகும்

### அமைச்சர்களுக்கு ஈராக் பிரதமர் எச்சரிக்கை

பக்தாத், மார்ச் 2

''இன்னும் 100 நாள்களுக்குள் மக்களின் குறைகள் நீக்கப்பட்டு, ஊழல் குறைக்கப்பட வேண்டும். இல்லையென்றால் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பதவியில் இருந்து தூக்கி எறியப்படுவர்'' என்று ஈராக் பிரதமர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈராக்கில், அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யவும், ஊழலை நீக்கவும் கோரி, கடந்த சில வாரங்களாக நாடு முழுவதும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர். இந்தப் போராட்டங்களில் இது வரை 13 பேர் பலியாகியுள்ளனர். பல அரச கட்டடங்கள் மக்களால் தீக்கிரையாக்கப்பட்டன.

எகிப்து எழுச்சியைத் தொடர்ந்து, அரபு நாடுகள் பலவற்றில் மக்கள் கிளர்ச்சி அதிகரித்துவரும் நிலையில், ஈராக்கிலும் அதன் பாதிப்பு எதிரொலித்தது.

எகிப்தின் கதி ஈராக்கிலும் நடந்து விடக்கூடாது என்று நினைத்த பிரதமர் நூரி அல் மாலிக்கி, ''இன்னும் 100 நாள்களுக்குள் மக்களின் அடிப்படை வசதிகள் தொடர்பான குறைகள் நீக்கப்பட வேண்டும்; ஊழல் குறைக்கப்பட வேண்டும்; 100 நாள்களுக்குப் பின்னர் ஒவ்வொரு அமைச்சகத்தின் பணிகளும் மதிப்பிடப்படும்; வேலை செய்யாத அமைச்சர்கள் தூக்கி எறியப்படுவர்'' என்று எச்சரித்துள்ளார்.

போராட்டத்தில் வன்முறையால் ஏற்பட்ட உயிரிழப்புக் குறித்து விசாரணை நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (த)



பிரான்ஸின் கிழக்கு மாகாணமான டோரியாஸில் உள்ள ஆயத்த ஆடை உற்பத்தி தொழிற்சாலைக்குச் சென்ற அந்நாட்டுப் பிரதமர் பிராங்கோயிஸ் பில்லான், அங்கு நடைபெறும் உற்பத்திப் பணிகளை பார்வையிட்டார். (த)

## பலூசிஸ்தான் மாகாணத்தில் இரண்டு நீதிபதிகள் கடத்தல்

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில், இரண்டு நீதிபதிகள் கடத்திச் செல்லப்பட்டனர். பலூசிஸ்தானில் வசிக்கும் சிறுபான்மை இந்துக்கள், அங்குள்ள தீவிரவாதிகளால் அடிக்கடி கடத்திச் செல்லப்படுவது வாடிக்கை. கணிசமான பணத்தைப் பெற்றுக்கொண்டு இந்துக்களை அவர்கள் விடுவித்து வந்தனர்.

ஜபாராபாத் மாவட்ட நீதிபதிகள் முகமது அலிக்கார், கோகார் யாசின்சாய் ஆகியோர் உஸ்தா முகமது என்ற இடத்துக்கு, சனிக்கிழமை ஒரு திருமணத்துக்காகச் சென்றனர். ஆனால், அவர்கள் நடு வழியிலேயே காணாமற் போயினர். அவர்கள் சென்ற கார் நசீரா பாத் மாவட்டத்தில் அநாதரவாக கைவிடப்பட்டிருந்தது.

## பான் கீ-மூன் - ஒபாமா விரைவில் சந்திப்பர்

நியூயோர்க், மார்ச்.2

லிபியாவில் நிலவி வரும் பதற்றமான சூழ்நிலை குறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஆகியோர் விரைவில் சந்தித்து விவாதிக்கவுள்ளனர். அப்போது சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என்று தெரிகிறது.

லிபிய அரசு தனது சொந்த மக்களையே கொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டுமென்று சர்வதேச மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது. (த)

# எகிப்து அரசமைப்புச் சட்டத்தில் முக்கியத் திருத்தம்

கெய்ரோ, மார்ச்.2

ஜனாதிபதி பதவிக்கான காலத்தை 4 ஆண்டுகளாக நிர்ணயித்தல், நாடாளுமன்ற ஒப்புதலுக்குப் பின்னர் நெருக்கடிநிலையை அமுல்படுத்துதல் உள்ளிட்ட முக்கியமான அரசமைப்புச் சட்டத்திருத்தங்கள் எகிப்தில் செய்யப்படவுள்ளன.

எகிப்தில் நீண்டகாலமாக ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து சர்வாதிகார ஆட்சியை நடத்தி வந்த ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கை மக்கள் ஆட்சியை விட்டு இறக்கியதைத் தொடர்ந்து அங்கு ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எகிப்தில் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தத்தைகொண்டு வந்து அரசியல் சீர்திருத்தத்தை செய்வது குறித்து ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட குழு தனது பரிந்துரையை அளித்துள்ளது.

அதில் கூறப்பட்டிருப்பவை வருமாறு:-

இனிமேல் ஹோஸ்னி முபாரக்கைப்போல் ஒருவரையே நீண்டகாலமாக ஜனாதிபதி பீடத்தில் அமரவிடக்கூடாது.

ஜனாதிபதி பதவிக்கான காலத்தை 4 ஆண்டுகளாக நிர்ணயிக்கலாம்.

ஒருவரை இரு தடவைகள் மட்டுமே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கலாம்.

ஒருவரை எக்காரணத்தை முன்னிட்டும் இரு தடவைகளுக்கு மேல் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக்கூடாது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோருக்கு குறைந்தபட்சம் 40 வயது இருக்கவேண்டும். (அதிகபட்ச வயது குறித்து ஏதும் பரிந்துரைக்கப்படவில்லை).

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவோரின் பெற்றோர் இருவரும் எகிப்தியராக இருத்தல் அவசியம். பெற்றோரில் ஒருவர் கூட வெளிநாட்டவராக இருத்தல்கூடாது.

ஜனாதிபதி வேட்பாளர்களை நியமிப்பதில் 3 வழிகளைப் பின்பற்றலாம்.

1. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்புவோர் 15 மாகாணங்களில் சுமார் 30 ஆயிரம் குடிமக்களின் ஒப்புதலைப் பெற வேண்டும்.

2. நாடாளுமன்றத்தில் 30 உறுப்பினர்களின் ஒப்புதலைப் பெறவேண்டும்.

3. அரசியல் கட்சிகள் மக்களால் தேர்வு செய்யப்பட்ட உறுப்பினர்களைத் (எம்.பி.) தேர்தலில் நிறுத்தலாம். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 ஜி ஊழல்விசாரணைக்கு வசதியாக கருணாநிதி பதவிவிலக வேண்டும்!

## விஜயகாந்த் வலியுறுத்து



சென்னை, மார்ச் 2

2 ஜி அலைக்கற்றை ஊழல் முறைப்பாட்டில் முதல்வர் கருணாநிதி குடும்பத்தினருக்கு உள்ளதாகக் கூறப்படும் தொடர்பை விசாரிக்க வசதியாக அவர் முதல்வர் பதவியில் இருந்து விலக வேண்டும் - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

2-ஜி அலைக்கற்றை குற்றப் புலனாய்வை உச்ச நீதிமன்றம், சி.பி.ஐ. மூலம் நேரடியாகக் கண்காணிக்கிறது. சி.பி.ஐ. அதன்படியே அவ்வப்பொழுது புலனாய்வின் நிலவரம் குறித்த அறிக்கைகளை உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்து வருகிறது.

எவ்வளவு முக்கியமானவர்களாக இருந்தாலும் ஊழல் செய்தவர்களை விட்டுவிடக் கூடாது என்று கடந்த 10 ஆம் திகதி சி.பி.ஐக்கு உச்ச நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

.2-ஜி அலைக்கற்றை விசாரணையில் ஊழல் பணம் கலைஞர் ரி.விக்கு முதலீடாக வந்துள்ளது என்றும் பின்னர் கலைஞர் ரி.வி. அந்தப் பணத்தைக் கடனாகக் கருதி திரும்ப வழங்கியிருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

சிங்கப்பூரைச் சேர்ந்த 'எஸ்டெல்' நிறுவனம் 2ஜி ஊழலில் சம்பந்தப்பட்டுள்ளது எனத் தெரிகிறது. அந்த நிறுவனத்தின்பணமும் கலைஞர் ரி.விக்கு வந்துள்ளது என்று கூறப்படுகிறது.

கலைஞர் ரி.வியின் உரிமையாளராக தமிழக முதல்வர் கருணாநிதியின் மனைவி தயாளு அம்மாளுக்கு 60 சதவீதப் பங்குகளும் அவரது மகள் கனிமொழிக்கு 20 சதவீதப் பங்குகளும், சரத்குமார் என்பவருக்கு 20 சதவீதப் பங்குகளும் உள்ளன எனத் தெரியவருகிறது.

சரத்குமார் எஸ்டெல் நிறுவனத்திலும் சில காலம் இயக்குநராக இருந்திருக்கிறார். கருணாநிதியின் குடும்பத்தினருக்கு அதிக வருமானம் தரும் எந்தத் தொழில்களும் இல்லை. முதல்வரின் நேரடி உறவினர்கள் என்பதாலேயே பெரும் தொகை கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் முதல்வராக இருப்பதாலும், மத்திய அரசில் கூட்டணிக் கட்சி என்ற முறையில் தி.மு.க. அங்கம் வகிப்பதாலும் சி.பி.ஐ. மேற்கொள்ளும் விசாரணை முறையாக நடைபெறாமல் தடங்கல் ஏற்பட வாய்ப்புள்ளது.

2-ஜி அலைக்கற்றை தொடர்பான விசாரணைக்கு ராசா அமைச்சர் பதவியில் இருந்தால் குந்தகம் ஏற்படும் என்றும் அவர் பதவியில் இருந்து விலக வேண்டும் என்றும் நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சியினரும் வலியுறுத்தியதன் பேரில் அவர் பதவி விலகினார். அதேபோல் தமிழகத்தின் முதல்வராக கருணாநிதி தொடர்ந்தால் முறையான விசாரணை நடைபெறாமல், உண்மையை மூடி மறைப்பதற்கும், ஊழல் குற்றவாளிகள் தப்பிப்பதற்கும் வழி வகைகள் ஏற்படக்கூடும்.

எனவே, முதல்வர் கருணாநிதி பதவி விலக வேண்டும். பதவி விலக மறுத்தால் நீதியை நிலைநாட்ட மத்திய அரசு, தி.மு.க. அரசை உடனடியாக கலைத்துவிட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டுவர வேண்டும். இல்லையென்றால் மத்தியில் உள்ள காங்கிரஸ் அரசும் ஊழலுக்கு உடந்தை என்றே மக்கள் கருதுவர்.

தேர்தல் நடைபெற இன்னும் 2 மாதங்களே இருப்பதனால் எத்தகைய உள்நோக்கத்தோடும் இதை நான் கூறவில்லை.

இந்த ஆண்டு இடைக்கால பட்ஜெட்டும் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்டு விட்டதால் நிர்வாகச் சிக்கலும் இல்லை. ஆகவே இந்த அரசு இருக்க வேண்டிய அவசியமும் இல்லை.

தேர்தல்கள் அமைதியாகவும், நேர்மையாகவும் தமிழ்நாட்டில் நடைபெறுவதற்கு தேர்தல் கமிஷனுக்கும் இது உகந்ததாக இருக்கும். தி.மு.க. அரசு கடந்த காலத்தில் உள்ளாட்சித் தேர்தல்கள், இடைத் தேர்தல்களில் கையாண்ட வழிவகைகளை அறிந்துள்ள மக்கள் நிச்சயம் இதை வரவேற்பார்கள்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சட்டசபைத் தேர்தலில் தி.மு.க.கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 10 தொகுதிகள்

சென்னை, மார்ச்2

எதர்வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு 10 தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

தி.மு.க. தேர்தல் தொகுதிப் பங்கீட்டுக் குழுவினருடன் நேற்றுமுன்தினம் இரவு விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், ரவிக்குமார் எம்.எல்.ஏ.ஆகியோருக்குஇடையேஇடம்பெற்றபேச்சில் மேற்கண்ட தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. குழுவினருடன் சிறிது நேரம் பேசிய பின்னர் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் முதல் அமைச்சர் கருணாநிதி இருந்த அறைக்குச் சென்று பேச்சு விவரங்களை தெரிவித்தார்.

அதன் பின்னர் துணை முதல்வர், திருமாவளவனையும், ரவிக்குமாரையும் முதல் அமைச்சரின் அறைக்கு அழைத்துச் சென்று அங்கு முதல்- அமைச்சர் கருணாநிதியுடன் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சின் போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

தீர்மானத்தில் கூறியிருப்பதாவது:-

2011-ஆம் ஆண்டு தமிழகத்தில் ஏப்ரல்- மே மாதங்களில் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி தி.மு.க. தலைவர் கருணாநிதியும் - விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் அதன் தலைவர் தொல்.திருமாவளவனும் நேற்று முன்தினம் தொகுதி உடன்பாடுகள் குறித்துக் கலந்து பேசி விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாக இந்தத் தேர்தலில் பத்து சட்டப்பேரவைத் தொகுதிகளைப் பங்கீடு செய்து போட்டியிடுவதென்று முடிவு எடுக்கப்படவுள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

பேச்சுக்களை அடுத்து திருமாவளவன் பத்திரிகை யாளர்களிடம் கூறியவை வருமாறு:

தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் 10 தொகுதிகளில் போட்டியிட ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலில் விடுதலை சிறுத்தைகள் இடம்பெறும் தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றி பெற்று, முதல்- அமைச்சர் கருணாநிதி 6 ஆவது முறையாக முதல்வர் ஆவார். அதற்கேற்ப தீவிரமாக களப்பணியாற்றுவோம்.

விடுதலை சிறுத்தைகள் கட்சியும் அங்கீகாரத்தை பெறும். 25 தொகுதிகள் எழுதிக்கொடுத்து அவற்றில் 15 தொகுதிகள் கேட்டோம், 10 தொகுதிகளுக்கு சம்மதித்திருக்கின்றோம். கூட்டணிக் கட்சிகளால் கூடுதல் நெருக்கடி ஏற்படக் கூடாது என்ற காரணத்திற்காகவும், இந்த நெருக்கடியான சூழலில் தி.மு.க.வுடனான நட்புறவைப் பேண வேண்டும் என்றும் இதனை ஏற்றுக் கொண்டுள்ளோம்.

தனிச் சின்னத்தில் போட்டியிடுவோம். 10 தொகுதிகளில் சில பொது தொகுதிகளிலும் போட்டியிடுவோம். என்று அவர் கூறினார்.

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்
1272 சிகப்பு
மிதுனம்
23 25 41 50
25-02-2011
ஜக்பொட் பரிசு ரூபா. 3,110,650/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 251,447 | 20/- | 5,028,940/- |
| 2 இலக்கங்கள் | 23,108 | 40/- | 924,320/- |
| 1 இல. + லக்கினம் | 22,944 | 60/- | 1,376,640/- |
| 2 இல. + லக்கினம் | 2,076 | 200/- | 415,200/- |
| 3 இலக்கங்கள் | 632 | 1000/- | 632,000/- |
| 3 இல. + லக்கினம் | 49 | 10,000/- | 490,000/- |
| 4 இலக்கங்கள் | 4 | 200,000/- | 800,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 3,110,650/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,667,100/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 680 | | 938,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 300,940 | | 10,605,100/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 4,233,700/-

### இரண்டாவது வாய்ப்பு
வெற்றி இலக்கங்கள்
மகரம்
01 03 11 49
ஜக்பொட் பரிசு ரூபா. 300,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 676 | 500/- | 338,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 300,000/- | 300,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 680 | | 938,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-

*உதயன் 28.02.2011ஆம் திகதிய இதழின் 10ஆம் பக்கத்தில் மேலே உள்ள விளம்பரத்துக்குப் பதிலாக மற்றொரு விளம்பரம் தவறுதலாக வெளியாகிவிட்டது.

## தேவை
கொழும்பில் இயங்கும் பிரபல நிறுவனத்துக்கு புத்தகங்கள் சஞ்சிகைகள் வீடுகளில் விநியோகிப்பதற்கு ஆள்கள்தேவை.
தொடர்பு: முகாமையாளர் - 021 5670 100

## தேவை
கணினிக் கல்வி நிறுவனம் ஒன்றுகு பின்வரும் துறைகளில் அனுபவம் உள்ள போதனாசிரியர்கள் தேவை.
1. Accounting Package
2. Internet & E-mail
3. Video Editting
தொடர்புகளுக்கு:
021 222 0785

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



நெடுந்தீவு கிழக்கு 15ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு 5ஆம் வட்டாரம், இல427, கோயில் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்த

**அமரர் நாகமுத்து சுந்தரலிங்கம்**
(ஓய்வு பெற்ற பரிசாரகர் நயினாதீவு வைத்தியசாலை)

தோற்றம் 23.03.1933
மறைவு 13.03.2010

திதி: அபரபக்க திரயோதசி

தாயே! எம்மையெல்லாம் வாழ்வில் உயர்ச்சிபெற வழிகாட்டிய அன்புத் தாயின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.03.2011) புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் .அதனைத் தொடர்ந்து இடம் பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையி லும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

427,கோயில் வீதி,நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



**திருமதி சோதி வல்லிபுரம்**

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சோதி வல்லிபுரம் (28.02.2011) திங்கட் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் முருகையா, காலஞ்சென்றவர்களான வல்லிபுரம், பொன்னம்பலம், பார்வதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கந்தசாமி, குணரத்தினம், ஜெயரத்தினம், பாஸ்கரன், வசீகரன், இந்திராதேவி, கனகம்மா, லோகேஸ்வரி காலஞ்சென்ற கமலாதேவி ஆகியோரின் அன்புத் தாயும் சிவனேஸ்வரி, சிவசக்தி, சசிகலா, பிரதீபா, சங்கீதா,பரமசிங்கம், கந்தையா, பத்மநாதன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2011) புதன்கிழமை முற்பகல் 11மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மாசுவன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

நீர்வேலி வடக்கு. (952), (43)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னையின் உள்ளக்குமுறல்....




ஆர்ப்பாட்டம்: காஷ்மீர் பிரச்சினை காரணமாக காணாமற்போனவர்களின் பெற்றோர் சேர்ந்து, ஓர் அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர். இந்த அமைப்பின் சார்பில், ஸ்ரீநகரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தின் போது காணாமற்போன தனது மகன் இருக்கின்றானா இல்லையா? என்று தெரியாது கண்ணீர் சிந்தும் தாயின் அவலம்.

# கோத்ரா ரயில் எரிப்பு வழக்கில் 11 பேருக்கு தூக்குத் தண்டனை

## குஜராத் உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

அகமதாபாத், குஜராத்தில் ரயில் எரிப்பு வழக்கில் கரசேவகர்கள் 59 பேர் கொல்லப்பட்ட வழக்கில் 11 பேருக்கு தூக்கு தண்டனையும், 20 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்து குஜராத் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வெளியிட்டுள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதியன்று உத்தரப் பிரதேச மாநிலத்திலுள்ள அயோத்தியாவுக்கு சென்று சபர்மிதி எக்ஸ்பிரஸ் மூலம் ஏராளமான சாதுக்கள் திரும்பிக்கொண்டிருந்தனர்.

குஜராத் கோத்ரா ரயில் நிலையத்தில் வன்முறை கும்பல் ஒன்று ரயிலுக்கு தீ வைத்து எரித்தது. இதில் 59 கரசேவகர்கள் கொல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து மாநிலத்தில் பெரும் கலவரம் ஏற்பட்டு ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

கோத்ரா ரயில் எரிப்பு சம்பவம் ஐ.எஸ்.ஐ., அமைப்பு தலைமறைவில் இந்த சதித் திட்டம் நடந்ததாக வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்குத் தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் உத்தரவின்படி சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்பட்டு அதன் தலைவர் மாஜி சி.பி.ஐ. இயக்குநர் ராகவன் தலைமையில் விசாரணை நடைபெற்றது. வழக்கு விசாரணை அகமதாபாத் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்தது.

இந்த வழக்கில் மொத்தம் 124 பேர் சேர்க்கப்பட்டனர். 80 பேர் சிறையில் உள்ளனர். 15 பேர் பிணையில் உள்ளனர். 13 பேர் ஆதாரமின்மையால் விடுவிக்கப்பட்டனர். 16 பேர் தலைமறைவாக உள்ளனர்.

இவர்களில் 95 பேர் மீதான குற்றம் தொடர்பாக 31 பேர் குற்றவாளிகள் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இந்த வழக்கில் ரயிலை எரித்து 59 பேரைக் கொன்ற சதித்திட்டம் உண்மைதான் என நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

இந்த வழக்கில் நம்பத் தகுந்த ஆதாரங்கள் இருந்ததாக நீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியிருக்கிறது. குற்றவாளிகளுக்கான தண்டனை விவரம் நேற்று செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில் 11 பேருக்கு தூக்குத்தண்டனையும், 20 பேருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்படுவதாக நீதிபதி தீர்ப்பளித்தார்.

# இந்திய நாணயங்களில் விரைவில் ரூபாவுக்கான குறியீடு

டில்லி,மார்ச்2

புதியதாக வெளியிடப்படும் நாணயங்களில், ரூபாவுக்கான குறியீடு இடம்பெறும் என, பட்ஜெட்டில் நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி அறிவித்தார். இந்திய ரூபாயை குறிப்பிடுவதற்கு புதிய குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச அளவில் அமெரிக்க டொலர், யூரோ போன்ற கரன்சிகளை போல இந்திய ரூபாவுக்கும் குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது. ரூபா என்று குறிப்பிடுவதற்கு பதிலாக இந்த குறியீட்டை குறிப்பிட வேண்டும் என மத்திய, மாநில அரசுகளுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்தகவலை நேற்றுமுன் தினம் பட்ஜெட் தாக்கலின் போது குறிப்பிட்ட நிதியமைச் சர் பிரணாப் முகர்ஜி, விரைவில் வெளியிட இருக்கும் நாணயங்களில், ரூபாவுக்கான குறியீடு இடம்பெறும் என குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில்,

இந்திய ரூபாவுக்கான குறியீட்டை, சர்வதேச அளவில் அறிமுகப்படுத்தும் வகையில், யுனிகோட் தர ஆணையத்தை மத்திய அரசு அணுகியுள்ளது - என்றார்.

# குட்டக் குட்டக் குனியக் கூடாது துணிச்சலுடன் முடிவெடுக்குக!

## தி.மு.கவுக்கு வீரமணி அறிவுரை

சென்னை, மார்ச் 02

கூட்டணி விடயத்தில் குட்டக் குட்ட குனியாமல் சுதந்திரமாக முடிவெடுக்க வேண்டும் - என்று தி.மு.கவுக்கு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

முதல்வர் கருணாநிதியின் தலைமையில் 5 ஆவது முறையாக நடைபெற்ற தி.மு.க. ஆட்சியில் கருவறை முதல் கல்லறைவரை அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெற்றுள்ளனர்.

தசரதனிடம் கைகேயி வரம் பெற்றதாக இராமாயணக் கதையில் வரும் நிகழ்வைப் போல, தோழமை உணர்வு காட்ட வேண்டிய சில கட்சிகள், தேர்ள் மீது சவாரி செய்ய முயல்கின்றன.

மிரட்டல் பாணி ஆயுதங்களைக் கையில் எடுத்துக் கொண்டு, கற்பனைக் குதிரைகள் மீது சவாரி செய்வது போன்ற நிபந்தனைகளை ஏற்படுத்தினால் அதற்குத் தி.மு.க. இணங்க வேண்டியதில்லை. தி.மு.க. தேர்தல் கால நெருக்கடிகளைச் சந்திக்கும் கட்சி மட்டும் அல்ல. அரசியல் நெருக்கடி கால நெருப்பாற்றில் நீந்தி வந்த ஜனநாயக பீனிக்ஸ் பறவையாகும். தமிழ் மக்கள் தி.மு.க. பக்கம் உள்ளனர்.- என்றார்.

# தெலுங்கானா மாநில கோரிக்கைக்கு ஆதரவு வழங்குமாறு நேற்று ரயில் மறியல் போராட்டம்

ஹைதராபாத்,மார்ச்.2

தனித் தெலுங்கானாவை தனி மாநிலமாக்கும் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து தெலங்கானா ராஷ்ட்ரீய சமிதி, தெலுங்குதேசம், பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகளின் ரயில் மறியல் போராட்டத்தால் தெலங்கானா முழுவதும் நேற்று ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.




தெலுங்கானாப் பகுதியில் உள்ள நல்கொண்டா, வாரங்கல், மகபூப்நகர் மற்றும் ஹைதராபாத்தில் அரசியல் கட்சிகளின் தொண்டர்கள் ரயில்களை மறித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். தெலுங்கானா கூட்டு நடவடிக்கைக் குழு இந்த ரயில் மறியல் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது.

தென் மத்திய ரயில்வேயின் தலைமையகமான செகந்திராபாத் ரயில் நிலையத்தில் தெலுங்கானாப் பகுதியைச் சேர்ந்த தெலுங்குதேச தலைவர்கள் காலை 6 மணியில் இருந்தே மறியலில் ஈடுபட்டனர். அவர்களைப் பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர்.

இதேவேளை தெலுங்குத்தேச எம்.எல்.ஏ. வேணுகோபாலாச்சாரி செகந்திராபாத் ரயில் நிலையத்தில் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்:

பொதுமக்களுக்கு சிரமம் அளிக்க வேண்டும் என்பது எங்களின் நோக்கம் அல்ல. தெலுங்கானாவைத் தனி மாநில மாக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு அனுப்பும் செய்திதான் இந்தப் போராட்டம் என்றார் அவர்.

# இன்னும் பத்து ஆண்டுகளில் தமிழகத்தில் ஆட்சி அமைப்போம்

## பா.ஜ.க.தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன்

பெங்களூர்,மார்ச்2

இன்னும் 10ஆண்டுகளில் தமிழகத்தில் ஆட்சியை அமைப்போம் என, தமிழக பா.ஜ.க. தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

தமிழக சட்டமன்றத் தேர்தல் தொடர்பாக தமிழக கர்நாடக பாரதீய ஜனதா கட்சி நிர்வாகிகளின் ஆலோசனை கூட்டம் பெங்களூரில் நடந்தது.

இதில் கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

தமிழக சட்டசபை தேர்தலில் நாங்கள் எங்களது சொந்த பலத்துடன் போட்டியிடுவதையே விரும்புகிறோம். அப்படி தேர்தலை சந்தித்தால், இரட்டை இலக்க எண்ணில் நங்கள் வெற்றி பெறுவோம். இதுவரை கூட்டணி குறித்து யாருடனும் பேசவில்லை.

தி.மு.க.வைத் தோற்கடிக்க வேண்டும் என்பதுதான் எங்களின் நோக்கம் ஆகும். அதற்காக ஏனைய எல்லா கட்சிகளும் ஒன்றுசேர வேண்டும். அவ்வாறு நடந்தால், நாங்களும் கூட்டணி குறித்து யோசிப்போம். இன்னும் 10 ஆண்டுகளில் தமிழகத்தில் ஆட்சியை அமைப்போம்.

3ஆவது அணி அமைப்பது குறித்து நாங்கள் யோசிக்கவில்லை. கர்நாடக பா.ஜனதாவினர் தேர்தல் வேலை செய்வதன் மூலம் அதிக வெற்றி வாய்ப்புகள் கிட்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மார்ச் 2ஆவது வாரத்தில் தேர்தல் சுற்றுப் பயணத்தை தொடங்குகிறேன் என்றார் அவர்.

# தொகுதிப் பங்கீடு தொடர்பாக தி.மு.க.வுடன் பிரச்சினை இல்லை

## சோனியாவை சந்தித்த பின்னர் தங்கபாலு பேட்டி

தமிழக சட்டமன்றத் தேர்தலில் தொகுதி பங்கீடு தொடர்பாக தி.மு.க - காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே எந்தவித பிரச்சினையும் இல்லை என, தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் தங்கபாலு கூறியுள்ளார்.

தமிழக சட்டமன்றத் தேர்தலில் தொகுதிப் பங்கீடு தொடர்பாக தி.மு.க - காங்கிரஸ் கட்சியினரிடையே இரண்டு முறை அண்ணா அறிவாலயத்தில் பேச்சு இடம்பெற்றது.

இந்த நிலையில் தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுக்களில் ஈடுபட்டு வரும் காங்கிரஸ் கட்சியின் ஐவர் குழுவினர், டில்லியில் காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தியை நேற்று சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின்போது தமிழக காங்கிரஸ் கட்சியின் மேலிட பொறுப்பாளரும், மத்திய அமைச்சருமான குலாம் நபி ஆசாத் உடனிருந்தார். ஐவர் குழுவை சந்தித்த பின்னர் தமிழக நிலவரம் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரத்துடன் சோனியா காந்தி தனியாக ஆலோசனை நடத்தினார். இந்த ஆலோசனைக் கூட்டத்துக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்நாடு காங்கிரஸ் குழுத் தலைவர் தங்கபாலு கூறுகையில்:

தி.மு.க.வுடன் நடத்திய பேச்சு விவரங்களை சோனியா காந்தியிடம் விளக்கினோம். தொகுதிப் பங்கீடு தொடர்பாக தி.மு.க.- காங்கிரஸ் கட்சிகளுக்கிடையே எந்தவித இழுபறியும் இல்லை.

தி.மு.க.வுடன் பேச்சை எப்படி தொடர்வது என்பதை சோனியா காந்தி முடிவு செய்வார். அடுத்த கட்ட பேச்சுக் குறித்து காங்கிரஸ் மேலிடம் அறிவிக்கும். தி.மு.க.வுடன் அடுத்தக் கட்ட பேச்சு இடம் பெறுவது சென்னையிலா அல்லது டில்லியிலா என சோனியா காந்திதான் முடிவு செய்வார் என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யோக சித்த ஆயுள்வேத வைத்தியர்

**சிங்கபாகு பரம்குமார்**

அவர்களுக்கு யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையில் பகுதி நேர விரிவுரையாளராகப் பணி கிடைத்தமைக்கு பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் மூவாயிரத்துக்கு மேற்பட்ட வாத நோயாளர்களை குணப்படுத்தியமைக்கும் வாழ்த்துகின்றோம்.

*0779112969*
*முதலாம் கட்டை, பருத்தித்துறை.*

சிவகுமார் குடும்பத்தினர்
மற்றும் நண்பர்கள்.




சீட்டிழுப்பு இலக்கம் 729 திகதி 28-02-2011

வெற்றி எண்கள்

**01 02 09 38 N** (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 10,000,000/- வெல்லப்பட்டுள்ளது

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 01 | 10,000,000/= | 10,000,000/= |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 17 | 2,000/= | 34,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 480 | 1,000/= | 480,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 745 | 1,000/= | 745,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 18310 | 60/= | 1,098,600/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8593 | 40/= | 343,720/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 214661 | 20/= | 4,293,220/= |
| | | மொத்தம் | ரூ.17,794,540/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| நுவரேலியா | 600848978-6-16 |
| பதுளை | 600844354-7-27 |
| கம்பஹா | 690160477-6-26 |
| குருநாகல் | 600840687-1-41 |
| கண்டி | 600844288-5-45 |
| யாழ்ப்பாணம் | 600843015-3-33 |
| கொழும்பு | 600853776-3-23 |
| காலி | 600857974-3-13 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 18,194,540/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 10,000,000/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 மார்ச் 03 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

# பெண்களுக்கும் மேசன் பயிற்சி

யாழ்ப்பாணம், மார்ச்.2

வடக்கு-கிழக்கு வீடுகள் மீள்நிர்மாணத் திட்டத்தின் கீழ் (நேர்ப்) உலக வங்கியின் நிதியுதவியுடன் மேசன் பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதற்கு யுவதிகளும் விண்ணப்பிக்கலாம் என்று திட்டத்தின் யாழ். மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் த.சாம்சன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

வடக்கில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக இந்தப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி, சங்கானை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் இந்தப் பயிற்சி நெறிகள் இந்த மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படவுள்ளன. நான்கு மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சிக் காலத்தில் நாளொன்றுக்கு 400 ரூபா வீதம் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளது.

பயிற்சி முடிவில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற தரச்சான்றிதழ்களும் மேசன் வேலைக் குரிய உபகரணப் பொதியொன்றும் வழங்கப்படவுள்ளன.

பயிற்சிகளைப் பெற விரும்புபவர்கள் எதிர்வரும் 10 ஆம் திக திக்கு முன்னர் தத்தமது கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக விண்ணப்பிக்கமுடியும் -என்றார். (த-9)

# 'செல்போன்' திருத்தும் பயிற்சி நெறி

சுழிபுரம்,மார்ச்.2

வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் நடத்தப்படும் கையடக்கத் தொலைபேசி திருத்துவதற்கான பயிற்சி வகுப்புகள் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயத்தில் விரைவில் ஆரம்பமாகவுள்ளன என்று அதிபர் கே.சந்திரசேகரன் அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி நெறிக்குப் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திய மாணவர்களும், பயிற்சி நெறியில் ஆர்வமுள்ளோரும் விண்ணப்பிக்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-28)

## மரண அறிவித்தல்

### திருமதி நாகமணி இரட்ணவடிவு



யாழ்ப்பாணம், நல்லூர், முடமாவடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி இரட்ணவடிவு 26.02.2011 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - நாகமணியின் (முன்னாள் சாரதி, இ.போ.ச.) அன்பு மனைவியும் காலஞ்சென்ற இத்தினி - சீதேவி (அருமை) தம்பதியரின் மகளும் தம்பிராசா (ரெயிலர்), காலஞ்சென்ற சண்முகவடிவு (முடமாவடி) ஆகியோரின் சகோதரியும் சிவஞானம் (கொழும்பு), செல்வஞானம் (கனடா) நவஞானம் (இந்திரன் - ஜேர்மனி), ரவீந்திரன் (வாசு - பிரான்ஸ்), இராஜேஸ்வரன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரன் (வெள்ளை - கொழும்பு), சுகிர்தா (லண் டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் தவமணி (இராசாத்தி - கொழும்பு), ரோகினி (கனடா), ஞானலதா (ஜேர்மனி), மைதிலி (டெய்சி - பிராண்ஸ்), சுபேந்தினி (ஜேர்மனி), காமினி (கொழும்பு), சுபீஸ்கரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிறிதர், வனஜா, ரஜீபன் (கனடா), ஜெயக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் பெரிய தாயாரும் சஞ்சீவன், தாரணி (கொழும்பு), அனோஜன், சோபிகா, நிரோசிக்கா (கனடா), றொசான், செறான், செறோலினா (பிரான்ஸ்), சஞ்ஜெயன், சபீனா, சஜீன் (ஜேர்மனி), சரஞ்ஜீவ், நஸ்மிகா, நிசானிக்கா (கொழும்பு), ஜஸ்மிதன், ஜசின் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அக்சயனின் (கொழும்பு) பூட்டியும் இராசமணி, காலஞ்சென்ற நாகமுத்து ஆறுமுகத்தின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2011) வியாழக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*449, இராமலிங்கம் வீதி,*
*முடமாவடி, நல்லூர்.*
*தொலைபேசி இல. 021 2222539*
*0775147869*

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### தம்பு செல்வரட்ணம்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஆடியபாதம் வீதி, கல்வியங்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு செல்வரட்ணம் 27.02.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் மணி மேகலா தேவியின் அன்புக் கணவரும் றஜனி, செல் வசீலன், செல்வறூபன், செல்வச்சந்திரன், சிந்துஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேலாயுதபிள்ளை, துசியா, பாலப்பிரியா, சிவகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் லதுஷா, பிரபாகினி, கீர்த்தனா, சிறேமியா, சிறேபிகா, சிறேஜிதா, சபீரா, சக்திகா, கன்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2011) வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*[illegible]டியபாதம் வீதி,*
*[illegible]யங்காடு.*

தகவல்: மனைவி,
பிள்ளைகள்.

## Computer Express
### Institute of Information Technology

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
0774907444, 021 222 8250, 0777222422

**விசேட கட்டணக்கழிவுடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன**

- Diploma in Microsoft Office — 1000/= — 3 Months
- Diploma in Desktop Publishing — 1000/= — 4 Months
- Diploma in Web Page Designing — 1000/= — 3 Months
- Diploma in Graphic Designing — 1000/= — 4 Months
- Diploma in Hardware Engineering — 1000/= — 3 Months
- Diploma in Auto CAD — 1000/= — 3 Months
- Diploma in Computer Science — 1000/= — 4 Months
- Honors Diploma in Computer Science — 1000/= — 3 Months
- Diploma in Computerized Accounting — 1000/= — 3 Months

**Advances Courses**
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும் பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Batch i - 02 - 03 - 2011 9Am or 3pm
Batch ii - 04 - 03 - 2011 9Am or 3pm
Batch iii - 05 - 03 - 2011 9Am or 4pm
Batch iv - 06 - 03 - 2011 9Am or 4pm

20.03.2011க்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

கணக்கியல் ஆர்வலர்கள், பல்கலைகழக மாணவர்கள், உயர்தொழினுட்பக்கல்லூரி மாணவர்கள், மற்றும் கணனிக்கணக்கியல்துறையில் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போருக்கான...........

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Book + MYOB
கணக்கியல் வரலாற்றில் முதன்முறையாக Peachtree Accounting ... புதிய பிரிவுகள் ஆரம்பம்
TALLY
5.03.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் அணிகளின் போரில் இரு குழுவினரிடையே மோதல்

வலி.வடக்கு,மார்ச்.2

மது போதையில் மைதானத்தினுள் நுழைந்த இரு குழுவின் சண்டையினால் பொன் அணிகளின் கிரிக்கெட் போட்டி சுமார் அரை மணித்தியாலம் வரை நிறுத்திவைக்கப்படவேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் போட்டி மிகவும் விறுவிறுப்பாக நடந்து கொண்டு இருந்த வேளையில் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற குழுவுக்கும், வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த குழு ஒன்றுக்கும் இடையே வாக்குவாதம் முற்றி சண்டை ஆரம்பமானது.

இந்தச் சண்டையின் போது பொல்லுகள், தடிகள் பயன்படுத்தப்பட்டதுடன் சண்டை பிடித்தவர்கள் மைதானத்தினுள் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த போது புகுந்தமையால் போட்டி குழம்பியது. தொடர்ந்து வீரர்களும் மத்தியஸ்தர்களும் பவிலியன் திரும்பினார்கள்.

பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த அவர்கள் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டனர். இதனையடுத்து சண்டையிட்ட குழுவினர் அந்த இடத்தில் இருந்து வெளியேறியமையால் போட்டி தொடர்ந்து நடைபெற்றது.

இந்தச் சண்டையில் ஆறுக்கும் மேற்பட்டவர்கள் காயங்களுக்கு உள்ளாகியதுடன் மேலும் சிலர் சிறு காயங்களுக்கும் உள்ளானார்கள்.

(த-86)



மல்லாகம் மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் மல்லாகம் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி செ.யோகநாதன் 'பான்ட்' வாத்திய அணியுடன் அழைத்துச் செல்லப்படுகிறார். அதிபர் எஸ்.சுப்பிரமணியம் அருகில் காணப்படுகின்றார். (த-86)

## ஊர் சுற்றும் போட்டியில் யாழ்ப்பாண வீரர்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 2

கொழும்பு, பத்தரமுல்லையில் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவிருக்கும் தேசிய ஊர்சுற்றும் போட்டியில் வடமாகாண வீரர்கள், வீராங்கனைகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

ஆண்கள் பிரிவில் எஸ்.ஜெயந்தன், (சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்), எஸ்.ஞானசேகரன்(நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவு), எஸ்.ரஜிதரன்(மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவு) ஆகியோரும்-

பெண்கள் பிரிவில் எஸ்.மேசி(சண்டிலிப்பாய் பிரதேச செயலகம்) என்.காவேரி(தெல்லிப்பழை பிரதேச செயலகம்) ஆகியோரும் இந்தப் போட்டிக்காக 4ஆம் திகதி கொழும்பு செல்கின்றனர்.

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,மார்ச்.2

கைதடி நவீல்ட் பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வி.எஸ்.மகேந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பிறேமகாந்தன் கலந்து கொள்வார்.

(த-ரி)

## மரதன், சைக்கிளோட்டப் போட்டிகள்

வடமராட்சி,மார்ச்2

கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு விழாவை முன்னிட்டு ஆண், பெண் இருபாலாருக்குமான மரதன் ஓட்டப் போட்டி, சைக்கிளோட்டப் போட்டி என்பன எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு பிரதேச செயலக முன்றிலில் இருந்து ஆரம்பமாகவுள்ளன.

கரவெட்டி பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட கழக வீரர்கள் இதில் கலந்துகொள்ள முடியும் எனவும் இதுவரை பெயர் பதிவு செய்யப்படாத வீரர்கள் தமது பெயர் விவரங்களை கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் கேட்டுள்ளார்.

(த-319)

## மத்தியஸ்தர் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 2

யாழ்மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் மத்தியஸ்தர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளது. இதில் அனைத்து மத்தியஸ்தர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தலைவர் கேட்டுள்ளார்.

(த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச்2

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* ஏ.எல்.விளையாட்டுக் கழகம் எதிர் அராலி ஐக்கிய விளையாட்டுக் கழகம்(பி.ப. 3.45 மணி)
* பெரியவிளான் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நவசக்தி விளையாட்டுக் கழகம் (பி.ப. 4.45 மணி).(த-23-86)

## கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டுப் போட்டி

வடமராட்சி, மார்ச்2

கரவெட்டி பிரதேச செயலக விளையாட்டுப் போட்டியின் இறுதி நிகழ்வு எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்தியமகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டு உதவிப் பணிப்பாளர் எஸ்.அண்ணாத்துரை, யாழ் மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி எவ்.ஏ.ரூபசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிப்பார்கள்.

(த-236-319)



Wanted
Marketing
Executive

எமது நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதிநிதிகள் உடனடியாகத் தேவை.
தகுதியுடையவர்கள் சுயவிவரக்கோவையுடன் நேரில் வரவும்.
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
இத்துறையில் ஆர்வம் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்.
கவர்ச்சிகரமான ஊதியம் வழங்கப்படும்.
மேலதிக தகவல்களுக்கு கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

கம்ப்யூட்டர் ருடே
359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 5 677 600
info@computertoday.lk



PRINCESS OF WALES NURSING HOME
(Jaffna)
132, Kokulam Kachcheri Nallur Road,
Jaffna, Srilanka.
Phone +94(21)2226179, +94(21)2226180
princesshosp@gmail.com
Rgd No Nal/DS/774

அமைதியான சூழலில் மகத்தான வைத்திய சேவையும் முதியோர் பராமரிப்பு இல்லமும்

* விசேடமாக மகப்பேற்று (IVF,Programme) (Dr.Davi Selvarajah) சம்பந்தமான ஆலோசனைகளும், சிகிச்சைகளும், நீரிழிவு நோய்க்கான ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்க மிக விரைவில் இந்தியாவில் இருந்து வைத்திய நிபுணர்கள் வருகை தரவுள்ளார்கள். உங்கள் பெயர்களை முன்கூட்டியே பதிவு செய்துகொள்ளுங்கள்.

★ வெளிநோயாளர் பிரிவு(OPD) காலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணிவரை வைத்தியர்களால் பார்வையிடப்படும்.
★ விசேட வைத்திய நிபுணர்களின் சேவையும் சிகிச்சையும்
★ நவீன ஸ்கானிங்(Scan) வசதி, ECG
★ சகலவிதமான இரத்த, சல பரிசோதனைகள்

பதவி வெற்றிடம்



01) HMO (Home medical Officer)
02) Dentist
03) Eye Specialist/Medical Specialist
04) Manager/Administration
05) Night Nurse(Male, Female)
06) Night Security Guard
07) Nursing Supervisor
08) Nurse
09) Cleaning Labourer
10) Accountant/Accounts Assistant
11) Pharmacist
12) Computer Operator/Programmer

ஆர்வமுள்ளோர் தங்களது கல்வித்தகைமை சான்றிதழ்களுடன் இரண்டு புகைப்படங்களுடனும் சனி, ஞாயிறு(5/3, 6/3) முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணிவரையும் நேரில் சமுகமளிக்கவும்.

Medical Director
Princess of Wales Hospital
132, Kachcheri Nallur Road, Jaffna.
எங்கள் சேவை உங்கள் ஆரோக்கியம்
(C/576527)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு கனகசபாபதி கனகேஸ்வரன்
(S.L.A.S)
(பிரதித் தொழில் ஆணையாளர், வடமாகாணம்)

மாவட்டத் தொழில் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் கடந்த 7 வருடங்களாக உதவித் தொழில் ஆணையாளராகச் சிறப்பாகக் கடமை புரிந்து வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் திருவாளர் கனகசபாபதி கனகேஸ்வரன் அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேன்மேலும் பல உயர் பதவிகளைப் பெற்று வளமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

(168)
திரு. க. பிரதீபன்
திருமதி. கி. மகேஸ்வரி, சாவகச்சேரி.

## 31 ஆம் நாள் நினைவலைகளும் நன்றி நவிலலும்

### சின்னத்தம்பி தருமலிங்கம்

பிறப்பு
28
★
12
★
1927



இறப்பு
31
★
01
★
2011

கடந்த 31.01.2011 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் மரணச்செய்தி கேட்டு நேரில் வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக் கும் மற்றும் பல்வேறு வழிகளில் ஆறுதல் அளித்தோருக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவிக்கின்றோம் அமரரின் ஆத்மா சாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று புதன்கிழமை (02.03.2011) மு.ப 11.00 மணிக்கும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கேற்குமாறும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அருகில்,
கோப்பாய் மத்தி.
(சி/576529)
குடும்பத்தினர்.

## எவரெஸ்ட் தாளங்காய்த் தைலம்




★ வாதம், மூட்டுவீக்கம், மூட்டு வேதனை என்பவற்றுக்குச் சிறந்த நிவாரணி
★ யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய சித்த மருத்துவர்களின் கையாட்சி முறைப்படி தயாரிக்கப்பட்டது.
★ யாழ்ப்பாணத்தில் உள்ள எல்லா மருந் தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எவரெஸ்ட் மருந்தகம்
(பதிவு Ay/MF/JA/295)
உசன், மிருசுவில்.

## மரண அறிவித்தல்

### அருளப்பா தியாகராஜா



காரைநகர் சிவன்கோயிலடியைப் பிறப்பிட மாகவும், டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அருளப்பா தியாகராஜா 27.02.2011 ஞாயிற்றுக்கிழமை அன்று கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளப்பா (உமாரொனிக்) - பத்மாவதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் பூமலர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மருமக னும் ஆனைக்கோட்டை உயரப்புலத்தைப் பிறப்பிட மாகவும் தற்போது டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட பாலகௌரி (மொழிபெயர்ப்பாளர்) அவர்களின் ஆருயிர்க்கணவரும் அபராஜிதா (மருத்துவ பீடம், ஒருஸ் பல்கலைக்கழகம்) அவர்களின் பாசமிகு தந்தையும் உமாதேவி, காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி மற்றும் சுந்தரமூர்த்தி (டென்மார்க்), சிவராஜா (சங்கீதா ரெக்ஸ், யாழ்ப் பாணம்), தவராஜா (டென்மார்க்), உத்தரை (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகேந்திரம் (மருந்தாளர்), சொரூபராணி (டென்மார்க்), சத்தியதேவி, மனோரஞ்சினி (டென் மார்க்), ரவிச் சந்திரன் (கனடா), பிரபாவதி (நெதர்லாந்து),இந்துமதி (ஜேர்மனி), காலஞ்சென்ற தளபதி மற்றும் வளர்மதி (நெதர்லாந்து), ஹேமா வதி (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ராஜ்குமார் (நெதர்லாந்து), உதயகுமார் (ஜேர்மனி), ரகுசந்தர் (நெதர்லாந்து), ரவீந்திரகுமார் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்புச் சகலனும் சர் மிளா, காலஞ்சென்ற தனேந்திரன் மற்றும் கீர்த்தனா, கீர்த்திகா ஆகி யோரின் மாமனாரும் சுரேந்திரன், கண்ணதாசன் (பொறியியலாளர், டென்மார்க்), பத்மராணி, பிரதீபன், சிந்துஜா (யாழ். பல்கலைக் கழ கம்), நிலானி, பிரியங்கா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் பிர சன்னா, பிரசாந்,அருள்வர்மா, அருள்வாணி, கிரிசிகேசன், ரூப வாணன், சாய்கீதன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (05.03.2011) சனிக்கிழமை நண்பகல் Vestre store kapel, vestre Kirkegard, Viborgvej 47a, Arhusv Denmark இல் நடைபெறும். என்பதை அறியத் தரு கின்றோம்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன்கோயிலடி,
காரைநகர்.

தவராஜா: 004597856903,
கௌரி: 004597251953.
(953)
தகவல்:
அருளப்பா சிவராஜா (சகோதரன்)
0217902702

## சாவகச்சேரியில் விபத்து

சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் நேற்றுக்காலை 8 மணியளவில் பயணி களுடன் மட்டக்களப்பு நோக்கிச் சென்ற தனியார் பஸ் முன்னால் சென்ற 'டிப்பர்' வாகனத்தை பின்புறமாக மோதியது. இத னால் பஸ்ஸின் முன் கண்ணாடி நொருங் கியது. அதிர்ஷ்ட வசமாக பயணிகள் எவ ரும் காயமடையவில்லை. (ஒ-131-323)

## கொழும்பு றோயலில் ஒருநாள் பயிலரங்கு

கொழும்பு, மார்ச்.02

வாழ்வில் முன்னேற்றத்துக்கு வழி சமைக்கும் வகையிலான பயிலரங்கம் ஒன்று எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு றோயல் கல்லூரியின் ஸ்கில்ஸ் சென்ரரில் நடைபெறவுள்ளது.

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ள இராம. கனகசுப்புரத்தினம் இப் பயிலரங் கில் வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துக்களை வழங்கவுள்ளார்.

இதில் குன்றாத இளமை இரகசியங்கள், குறைவில்லா செல்வத்துக்கு குபேர இராச்சி யங்கள், நினைவாற்றல் மற்றும் மன நலப் பயிலரங்கு இறைவனுடன் இணையும் அதிநுட்ப இரகசியங்கள் போன்ற பயிற்சி களை வழங்கவுள்ளார். இப் பயிலரங் கத்தை யுரேகா மற்றும் எஸ். எஸ்கேசி கல்வி நிலையங்கள் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. (ஒ-10)

### திருத்தி வாசிக்கவும்

இன்றைய பதிப்பில் 17ஆம் பக்கத் தில் வெளிவந்துள்ள தீவக வலயத்தில் ''நெடுந்தீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை'' என்பதை ''மண்டைதீவு றோமன்கத்தோலிக்கப் பாடசாலை'' எனத் திருத்தி வாசிக்கவும்.

### கார் விற்பனை

Daewoo racer Model 18 - xxxx
கார்விற்பனைக் குண்டு (AC, Alow weel, power Staring)
P/ No:- 0775927268

### லொறி விற்பனைக்கு

டயானா Lcxxxx 150 CC 10½ அடி நீளம் கொண்டது உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- P.ராஜன்
0779508243, 0716687451

### காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை மேற்கு, திருஞான சம்பந்தர் வீதியில் சித்தியடி வைரவர் ஆல யம் முன்பாக 08 பரப்புக் காணி விற் பனைக் குண்டு. அமைதியான, பாதுகாப்பான சூழ லில் புளியமரங்கள், பனைமரங்களுடன் நல்ல தண்ணீர்க் கிணற்றுவசதியுடன் காணி அமைந் துள்ளது.

தொடர்பு:-0776030617

### தவறிவிட்டது

ஒதியர், பொலிகண்டியைச் சேர்ந்த நமசிவாயம் லுத்தீபா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (876471426V), பல்கலை அ. அட்டை என்பன பளைக்கும் கொடிகாமத்துக் கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கா ணும் முகவரியில் ஒப்படைக்கவும்.
தொடர்பு: இல 86/1, செறன்டிப்பின், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 0772444172.

### Work Permit

இத்தாலியில் ஆங்கில அறிவுள்ள பெண் வரவேற் பாளரும், டுபாயில் எயார்போர்ட் (ஆண்) சுத்திகரிப் பாளரும் தேவை. Work Permit பெற்றுத்தரப்படும்.
தொடர்பு:- 0777498419

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொக்குவில் கிழக்கு, கோயில் வீதியில்
4 பரப்புக் காணி தனி வீடு,
நன்னீர் கிணறு மற்றும்
இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0757219014

### தவறிவிட்டது

வரணி வடக்கு என்னும் முகவரியுடைய அஸ்வினி அப்பாசாமி சர்மா என்பவரது தே.அ.அ (887441081V) பல்கலைக்கழக அ.அட்டை என்பன யாழ் - பருத்தித்துறை பேருந்தில் 12.02.2011 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 0779506807 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

### Short Period Success

இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு. சாவகச்சேரியில் அமைந்துள்ள Innovage (Multinational) கம்பனிக்கும் வடக்குக், கிழக்கில் ஆரம்பிக்கப்படவுள்ள அதன் கிளைகளுக்கும் முகா மைத்துவத்துக்கான ஆள்சேர்ப்புக்கள் இடம் பெறுகின் றன. தாங்களும் O/L, A/L சித்திபெற் றிருப்பின் உயர்

Udaya- 0717494735, Srikanth0770771377

## எந்த முதலீடும் இல்லாமல் மாதம் ரூபா 50,000/= க்கு மேல் சம்பாதிக்க ஆசையா....?? !!!!



யாழ் குடாநாட்டு இளைஞர் யுவதிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் இணையத்தளம் மூலம் மாதம் ரூபா 50,000/= மேல் வீட்டிலிருந்தபடியே சம்பாதிப்பதற்கு ஓர் இலகு வழிகாட்டல் வகுப்பு

இல்லத்தரிசிகளே நீங்களும் உங்கள் குடும்பத்தை முன்னேற்ற நினைக்கிறீகளா????ஆனால் என்ன வேலை செய்வது. என்று தெரியவில்லை???? முதலீடு இல்லை மற்றும் குழந்தைகளை விட்டு வெளியே சென்று வேலை செய்ய யோசிக்கிறீகளா? கவலையை விடுங்கள் உங்கள் வீட்டிலிருந்தபடியே மாதம் ரூபா 50,000/=மேல் சமபாதித்து கொள்ளுங்கள்

உங்களிடம் இருக்க வேண்டியது ஓர் கணணியும் இணைய வசதியும் மட்டுமே.

குறிப்பு : கணணி பற்றி அறிவில்லாதவர்களும் பயப்படாமல் எம்முடன் இணைந்து கொள்ளலாம்.

வகுப்பு நடை பெறும் நாள்: 05,06 திகதிகளில் மாலை 2.30-6.00
இடம்: யாழ்பாணம் பல நோ.கூ.சங்க மண்டபம்
பயிற்சி கட்டணம்: 3250/= மட்டுமே
பதிவுக்கட்டணம் எதுவுமில்லை
மேலதிக விபரங்களுக்கு 0779235804,0215675916
[illegible] கீழ் பட்டவர்களுக்கு விசேட [illegible]



## அறிவித்தல்

### கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச்சங்கம் - கிளிநொச்சி.

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் தொடர்ந்து கடமைபுரிந்த நிரந்தரப்பணியாளர்கள் இடப்பெயர்வுக்குப் பின்னர் இது வரை கடமைக்குச் சமுகமளிக்காது இருப்பின் 23.03.2011 ஆம் திகதிக்கு முன்னர் கடமைக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். அவ்வாறு குறித்த திகதிக்கு முன் சமுகமளிக்கத் தவறும் பணியாளர்கள் தமது பதவியை வெறிதாக்கியுள்ளார்கள் எனக்கருதப்பட்டு கூட்டுறவுப்பணியாளர் ஆணைக்குழுச் சட்டப்பிர மாணங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள் ளப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

தலைவர்/ பொதுமுகாமையாளர்,
கரைச்சி தெற்கு ப.நோ. கூ. சங்கம்,
கிளிநொச்சி.
(சி/576528)

## சேவை நலன் பாராட்டு

### செல்வி யோகேஸ்வரி - தம்பிராசா



(ஆசிரிய ஆலோசகர், மனைப்பொருளியல்- வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்)

சேவை விவரம்:-

1977- 1979- யா/ கோப்பாய் ம.வி- ஆசிரியர்
1980 - 1982- ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்.
1983 - 1989 நு/ நல்லிளைப்பாற்றிக் கன்னியர் பாடசாலை, ஆசிரியர்
1990 - யா/அச்சுவேலி மத்திய கல்லூரி - ஆசிரியர்
1991 - ஆசிரிய ஆலோசகர்- யாழ்.கல்வி வலயம்

இன்று 60 ஆவது அகவையில் காலடி எடுத்து வைக்கும் சக ஆசிரிய ஆலோசகரின் சேவையைப் பாராட்டுவதோடு அவர் நலமுடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரிய ஆலோசகர் நலன்புரிக் கழகம்,
வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.
(932)

## நோர்த்சீ லிமிட்டெட்,

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சு

### பனிக்கட்டித் தொழிற்சாலைக்கான கூட்டுமுயற்சி விண்ணப்ப அழைப்பு

எமது நிறுவனத்துடன் கூட்டுமுயற்சி நடவடிக்கை யூடாக 20 தொன் வலுவுள்ள பனிக்கட்டித் தொழிற் சாலை ஒன்றினை அமைப்பதற்கு ஆர்வமுள்ள தரப் பினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிக தகவல்களை 04.03.2011 மற்றும் 05.03.2011 ஆகிய திகதிகளில் காலை 9.30 மணி முதல் மு.ப 11.30 வரை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
தொலைபேசி இலக்கம்:- 0213205696

பிரதிப் பொது முகாமையாளர்,
வலைத் தொழிற்சாலை,
குருநகர், யாழ்ப்பாணம்.
(சி/576526)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் தொடர்பான குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படும் என்ற அச்சம் நிலவுகின்றது. ஏற்கனவே ஒருதடவை கொண்டு வரப்பட்ட இத்தகைய குற்றச் சாட்டுக்களை ரஷ்யா, சீனா ஆகிய நட்பு நாடுகளின் துணையுடன் இலங்கை சமாளித்துக் கொண்டது.

ஆனால், போர்க் குற்றங்கள் தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் தொடர்பான நியமங்களைத் திருப்திப்படுத்தக் கூடிய வகையில் இலங்கை அரசு தானே விசாரணைகளை நடத்துவதே சர்வதேச விசாரணை ஒன்றை எதிர்கொள்வதை விட உகந்ததாக இருக்கும் என்று பிளேக் தெரிவித்தார்.

''இந்த விடயங்கள் தொடர்பில் சர்வதேச நியமங்களைப் பின்பற்ற இலங்கை அரசு தவறினால் இவைபற்றிக் கவனத்தில் எடுக்க சர்வதேச விசாரணை ஆணைக்குழு ஒன்றை நியமிக்குமாறு அழுத்தங்கள் அதிகரிக்கும்'' என்றார் பிளேக்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை அமெரிக்கத் தொலைக் காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைக் கூறினார்.

நல்லிணக்கம், பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் என்பன இலங்கையுடனான அமெரிக்க உறவைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழர்களின் கோரிக்கைகளை அடுத்து அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் கொடுத்த அழுத்தங்கள் காரணமாக அதிபர் பராக் ஒபாமா அரசு, இலங்கை விவகாரத்தில் கடுமையான நிலைப்பாட்டை எடுத்திருப்பதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அதன் வெளிப்பாடே பிளேக்கின் அண்மைய கருத்துக்கள் என்றும் அவை சுட்டிக் காட்டுகின்றன.

இறுதிப் போரின் போது 7 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று ஐ.நா. மதிப்பிட்டுள்ளது. ஆனால் இந்த எண்ணிக்கை 30 ஆயிரத்ததைத் தாண்டும் என்று மனித உரிமைகள் குழுக்கள் புள்ளி விவரம் வெளிவிடுகின்றன. ஆனால் இறுதிப் போரின் போது போர்க் குற்றங்கள் நிகழ்ந்தன என்பதை ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ அடியோடு மறுக்கின்றார்.

ஆனால், 2001 ஆம் ஆண்டு நோர்வே நாட்டின் அனுசரணையுடன் செய்துகொள்ளப்பட்ட அமைதி உடன்படிக்கை ஏன் தோல்வி அடைந்தது? என்பதைக் கண்டறிய கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

ஆனால், இந்த ஆணைக்குழுவின் விசாரணைகள் குறித்து அனைத்துலக மனித உரிமைகள் குழுக்கள் திருப்தி தெரிவிக்கவில்லை.இது சுயாதீனமற்ற தொரு குழு என்று தெரிவித்த அவை ஆணைக்குழு முன்பாக சாட்சியமளிக்க விடுக்கப்பட்ட அழைப்பையும் நிராகரித்தன. (உ)

**கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயப் பொங்கல் விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான அறிவித்தல்**

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்தரப் பொங்கல் எதிர்வரும் 19.03.2011 சனிக்கிழமை வழமைபோல நடைபெறவுள்ளது.

இத்தினத்தில் வியாபாரம் மேற்கொள்ளும் வணிகர்களுக்கான வியாபார நிலைய ஏலவிற்பனை 06.03.2011 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலனசபை.

**சுழிபுரம் பறாளாய் வீதியில் நிலம் விற்பனைக்குண்டு**

யா/விக்ரோறியாக் கல்லூரி நிறுவுனரின் வழித்தோன்றல்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பறாளாய் வீதியில் அமைந்துள்ள 6 பரப்பு 6 குழி விஸ்தீரணமுள்ள நிலம் விற்பனைக்குண்டு.

மேற்படி நிலம் விற்றுப் பெறப்படும் பணம், அன்பளிப்பு செய்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நிரந்தர வைப்பிலிடப்பட்டு நிறுவுநர் தின விழாவுக்கு மற்றும் பாடசாலை அபிவிருத்திகளுக்கும் பயன்படுத்தப்படும்.

கொள்வனவு செய்யவிரும்புவோர் தலைவர், செயலாளர் அல்லது அதிபருடன் 15.03.2011 இற்கு முன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர், பழைய மாணவர் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியாவில் வசித்து வருபவருமாகிய (ஸ்ரீ சரவணபகவான் சைவ உணவகம்) உரிமையாளருமாகிய, புங்குடுதீவு கதிர்காம ஆலய தொண்டருமாகிய

**கனகசபை சந்திரபாலன்**

அவர்களின் மறைவையொட்டித் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எமது கதிர்காம முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நிர்வாக சபையினர்,
கதிர்காமமுருகன் ஆலயம்,
புங்குடுதீவு.

*சந்தையடி,*
*புங்குடுதீவு.*

## தூத்துக்குடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் இந்தியர்களை மீட்பதற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளதால், கொழும்புக்கும், தூத்துக்குடிக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 14ஆம் திகதியே ஆரம்பிக்கப்படும் என்று துறைமுக, விமான சேவைகள் பிரதியமைச்சரின் ஊடகச் செயலாளர் சமிந்த கருணாரத்ன நேற்று தெரிவித்தார்.

கொழும்புக்கும், தூத்துக்குடிக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

''சுமார் 500 பயணிகள் அவர்களது பொதிகளுடன் பயணிக்கக்கூடிய வகையில் இந்தக் கப்பல் சேவையில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தக் கப்பல் இந்திய தனியார் நிறுவனம் ஒன்றின் நிர்வாகத்துக்கு உட்பட்டதாகும்.

கொழும்புக்கும், தூத்துக்குடிக்கும் இடையில் 282 கிலோ மீற்றர் தூரம் காணப்படுகிறது. ஆரம்பிக்கப்படவுள்ள பயணிகள் கப்பல் சேவை மூலம் கொழும்பிலிருந்து தூத்துக்குடிக்கு 10 அல்லது 12 மணித்தியாலங்களில் பயணிக்க முடியும். அத்துடன், இதற்கான கப்பல் கட்டணம் கொழும்பு - இந்திய விமானக் கட்டணத்தை விடவும் குறைவாகவே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இராமேஸ்வரத்துக்கும், தலைமன்னாருக்கும் இடையில் விரைவில் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன'' - என்றார் சமிந்த கருணாரத்ன.

## மக்கள்...

*(18, 19 ஆம் பக்கத்தொடர்ச்சி)*

பயிற்சிகள் வழங்குவதற்கேற்ற அடிப்படை வசதிகள் சுதேச மருத்துவ அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டும். கைதடியில் உள்ளது போதனா வைத்திய சாலையாக இருப்பதால் மற்ற ஆரோக்கியசாலையிலிருந்து விசேட சிகிச்சைக்காக நோயாளர்களை அனுமதிக்கும் முறை பேணப்பட வேண்டும். இதனால் மாணவர்கள் நன்மையடைவார்கள்.

ஆய்வுகள் மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகத்தின் உள்ளும், வெளியிலும் தொடர்புகளை பேணவேண்டும். மருத்துபீடம், விவசாய பீடம், விஞ்ஞான, உள்நாட்டு மருத்துவ நிறுவகம் கொழும்பு கம்பஹா விக்கிரமாராச்சி ஆயுள் வேத நிறுவனம், விவசாயத் திணைக்களம், இந்தியாவின் கேரள மாநிலத்திலுள்ள பஞ்சகாம சிகிச்சை நிலையம், அடையாறு மருந்து உற்பத்தி நிலையம் என்பற்றுடன் தொடர்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பாடத்திட்டத்தில் மாற்றங்கள், திருத்தங்கள், பரீட்சை முறைகளில் மாற்றங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட துறைசார்ந்தவர்களை இணைத்து பாடவிதான பட்டறை (Curiculum Workshop) ஒன்றை ஒழுங்கு செய்தல் அவசியமானதாகும்.

ஆரோக்கியசாலைப் பயிற்சிக்காக மாணவர்களை வவுனியா மாவட்ட வைத்தியசாலை, திருகோணமலை, மட்டக்களப்பு வைத்தியசாலைகளுக்கு அனுப்புவதற்கான திட்டங்களை விரைந்து செயற்படுத்துதல் நன்மை பயக்கும்.

மருந்து உற்பத்திகள், மூலிகை உள்ள இடங்களைப் பாதுகாத்தல், தேவையான மூலிகைகளை மருந்து தயாரிப்பதற்காக இனம் கண்டு பயிரிடுதல், வெளி நாட்டவர்களுக்கான பஞ்சகர்ம சிகிச்சை நிலையங்கள் உருவாக்குதல் ஆகியவற்றை தனியார் மற்றும் சமூக பங்களிப்புடன் ஏற்படுத்த வேண்டும். இதன்மூலம் தேசிய மருத்துவர்களின் வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதுடன் பல தொழில் நிலையங்களை நிறுவி தேசிய மருத்துவத்தின் சிறப்பியல்புகளை விருத்தி [illegible] இவற்றின் ஊடாக [illegible] நிலை அடையச் செய்யலாம்.

## பருத்தித்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் உத்திரவிட்டுள்ளார்.

பருத்தித்துறையில் இயங்கும் வெளிநாட்டு உதவி நிறுவனத்தில் வைத்தியராகப் பணிபுரியும் பெண் கடலில் குளித்துக்கொண்டிருந்தார் அப்போது அங்கு வந்த மூவர் குறிப்பிட்ட பெண்ணுடன் தகாத முறையில் நடக்க முயன்றனர். ஊர் மக்கள் மூவரையும் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்ப டைத்தனர்.

நேற்றுமுன்தினம் குறிப்பிட்ட மூன்று மாணவர்களையும் பொலிஸார் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் மூவரையும் பதினான்கு நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்திரவிட்டார்.

வடமராட்சியில் பிரபல கல்லூரி ஒன்றின் மாணவர்களே மறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் ஆவர். (ஒ-ஜ-319)

## முள்ளிவாய்க்காலில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக பதவியேற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கிபீர் விமானங்கள் இரண்டும் விமானப் படையின் 60 ஆவது ஆண்டுப் பூர்த்தி விழாவுக்காக சாகஸ விமான விளையாட் டுக்களை நடத்தும் நோக்கில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தன. அப்போதே இந்த விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்படுகிறது. இந்த விபத்து குறித்து கேள்வியுற்றதும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சம்பவ இடத்துக்குச் சென்று பார்வையிட்டார்.

நேற்றுக் காலை 8.30 மணியளவில் பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது, கம்பஹா மாவட்ட வான் பரப்பில் இந்தக் கோர விபத்து இடம்பெற்றுள்ளது. அத்தனகல்ல வரான விகாரைக்கு அருகில் நெல்லிகஹமுல என்ற இடத்தில் ஒரு விமானம் எரிந்த நிலையில் கீழே விழுந்தது.

மற்றைய விமானம் 300 மீற்றருக்கு அப்பால் விழுந்தது. விமானங்கள் இரண்டும் முழுதாக எரிந்து சாம்பலாகிவிட்டன.

விமானங்கள் விழுந்து நொறுங்கிய இடங்களில் பெருமளவு வீடுகள் இல்லாத காரணத்தால் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை. அருகிலுள்ள சில வீடுகளுக்கு சிறிய சேதங்கள் ஏற்பட்டன எனவும் கம்பஹா பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மொஹான் பெரேரா என்ற விமானியே இந்த விபத்தில் பலியானவராவார். வஜிர ஜெயகொடி என்ற விமானி சிறுகாயங்களுடன் உயிர்த் தப்பினார். பொலிஸாரும், விமானப் படையினரும் தனித்தனியாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-சி)

## மரண அறிவித்தல்கள்

### *திருமதி செல்லம்மா கந்தையா*



தொட்டிலடி, சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா செல்லம்மா நேற்றுமுன்தினம் (28.02.2011) திங்கட்கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதி - பொன்னி தம்பதியரின் அன்பு மகளும் கந்தையாவின் பாசமிகு மனைவியும் இராசலட்சுமி, நாகம்மா, சரஸ்வதி, மாணிக்கம் ஆகியோரின் சகோதரியும் கலைவாணி (ஜேர்மனி), ஜெசீதன் (ஆசிரியர்), ஜெயாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் வரதராஜன் (ஜேர்மனி), றஜிதா (ஆசிரியை) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.03.2011) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 11 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி வீதி,*
*சண்டிலிப்பாய் மத்தி.*

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி செல்வநாதன் செல்வநந்தினி (நந்தினி)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை, கோணேசபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாதன் செல்வநந்தினி நேற்று (01.03.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சுந்தரமூர்த்தி - காலஞ்சென்ற அருந்தவராணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் செல்வநாதனின் அன்பு மனைவியும் சங்கவியின் பாசமிகு தாயாரும் செல்வரஞ்சினி (கனடா), செல்வபிரிந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும் செல்வராசா, செல்வமலர், செல்லத்துரை (சுவிஸ்), செல்வநாயகம் (சுவிஸ்), செல்வராணி, செல்வரஞ்சினி, கபிதரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சரண்யா, தினேஸ், சர்மிளி (கனடா) ஆகியோரின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2011) புதன்கிழமை பி.ப. 4 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*04, கோணசேபுரம்,*
*உவர்மலை, திருகோணமலை.*
*026 3262148*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்யும் சாத்தியம் உண்டு.

# மாணவர்களுக்கான சீருடை விநியோகத்தில் முறைகேடு

## மக்கள் இயக்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 02

2011ஆம் ஆண்டு அரச பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகள் முறையாக விநியோகிக்கப்படவில்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களும் இதில் அடங்குகிறார்கள்.

அதேவேளை, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்குத் தேவையான உபகரணங்களும் முறையாக வழங்கப்படவில்லை என்று பாடசாலைகளைப் பாதுகாக்கும் மக்கள் இயக்கம் குற்றஞ்சாட்டுகிறது.

மருதானையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அந்த இயக்கத்தின் ஊடகப் பேச்சாளர் சுசன் மாலிந்த மேற்கண்டவாறு குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

2011ஆம் ஆண்டுக்கான பாடசாலைச் சீருடை விநியோகத்திற்காக ஆயிரத்து 559 மில்லியன் ரூபா அரசால் ஒதுக் கப்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணைக் கல்வி நடவடிக்கை ஆரம்பமாகி இரண்டு மாதங்களாகியும் பல பாடசாலைகளுக்கு சீருடைகள் விநியோகிக்கப்படவில்லை.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளில் மாணவர்கள் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் கல்வி கற்று வருகின்றனர். யுத்தத்தால் இப்பாடசாலைகளில் உபகரணங்கள் சேதமடைந்துள்ளன. அவற்றை மீளச் செய்து கொடுக்கும் பொறுப்பு அரசுக்கு உள்ளது. இது குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும்.

இதேவேளை, கொழும்பு மாவட்டத்திலும் அதனை அண்டிய சில புறநகர்ப் பாடசாலைகளிலும் இவ்வருடத்துக்கான பாடசாலை மாணவர் சீருடைகள் கறுப்பு நிறத்தில் வழங்கப்பட்டுள்ளன.

பிலியந்தலை கல்வி வலயத்துக்கு உட்பட்ட சில பாடசாலைகளுக்கும், கொட்டாவ பகுதியிலுள்ள சில பாடசாலைகளுக்கும் கறுப்பு நிற காற்சட்டைத் துணி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மாணவர்களுக்கு வெள்ளை அல்லது நீல நிறத்திலான காற்சட்டைத் துணி வழங்கப்பட்டு வந்தது. இந்தத் தடவை வழங்கப்பட்டு வரும் கறுப்பு நிற காற்சட்டைத் துணி தொடர்பில் மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் ஆகியோர் மத்தியில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

- இப்படி அவர் தெரிவித்தார்.

# லிபியாவிலுள்ள இலங்கையர் கிறீஸுக்குச் செல்லத் தடை?

கொழும்பு, மார். 02

லிபியாவில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு கிளர்ச்சி காரணமாக அங்கிருந்து இலங்கையர்கள் கிறீஸிக்குப் பிரவேசிப்பதை மறு அறிவித்தல் வரை தடை செய்வது தொடர்பாக கிறீஸ் அரசு ஆலோசித்து வருகிறது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

லிபியாவில் இடம்பெறும் போராட்டங்கள் காரணமாக அங்கு தொழில் புரியும் இலங்கையர்கள் 36 பேர் உயிர்த்தப்பி படகு மூலம் கிறீஸில் தஞ்சமடைந்தனர். இவர்களில் 16 பேர் காணாமல் போயிருந்த நிலையில், அவர்களில் ஐவர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர் என்று தூதரக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், காணாமற்போன ஏனையவர்களைக் கண்டுபிடிப்பதற்கு கிறீஸ் அரசின் உதவி கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

லிபியாவில் ஏற்பட்டுள்ள கலவரத்தை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு கிறீஸ் நாட்டின் ஊடாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சமடையை சிலர் எதிர்பார்க்கின்றனர் என்று கிறீஸிலுள்ள புத்திஜீவிகள் தெரிவித்துள்ளனர்.

லிபியா நாட்டிலிருந்து இலங்கையர்கள் கிறீஸ் நாட்டுக்கு வர முடியாத வகையில் தடை செய்ய அந்நாட்டு அரசு தீவிர ஆலோசனை நடத்திவருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபைத் தேர்தல்

# ஐ.ம.சு.மு. தோற்றால் பதவியை ராஜினாமா செய்வேன் வென்றால் ஹக்கீம் அமைச்சுப் பதவியைத் துறப்பாரா?

## கிழக்கு மாகாண அமைச்சர் சுபைர் பகிரங்க சவால்

மட்டக்களப்பு, மார்ச் 02

மட்டக்களப்பு கோரளைப் பற்று மேற்கு பிரதேச சபையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கைப்பற்றாவிட்டால் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்வேன். இதேபோல் ஐ.ம.சு.முன்னணி அச்சபையில் ஆட்சியமைத்தால் மு.கா.தலைவர் ரவூப் ஹக்கீம் தனது நீதியமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்வாரா? என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் சவால் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு விடுத்துள்ள விசேட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

கல்குடா தொகுதிக்கும், அங்குள்ள மக்களுக்கும் எவ்வித உதவியும், ஒத்தாசையும் புரியாத மு.காவும், அதன் தலைமையும் காலத்துக்கு காலம் வாக்குக் கேட்க மட்டும் வருவது எவ்வித்தில் நியாயமாகும்?

கடந்த பொதுத் தேர்தலின் போது அம்மக்களின் மனதில் நச்சு விதையை விதைத்து காலங்காலமாக இருந்துவந்த ஒற்றுமையை சீர்குலைத்துவிட்டு மீண்டும் பிரதிநிதித்துவம் பற்றிப் பேசுவது மற்றுமொரு வாக்கு அபகரிப்புக்கு என்பதை கல்குடா மக்கள் அறியாதவர்களல்லர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் அகலக்கால் பதித்திருக்கும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்தான் முஸ்லிம், தமிழ், சிங்களச் சமூகங்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அதிகாரமும், பலமும் கொண்ட கட்சி என்பதை இந்த இடத்தில் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

முஸ்லிம்களின்ஏக கட்சி மு.கா. என்ற நிலை இன்றில்லை. பிரதிநிதித்துவ ரீதியில் மு.காவுக்கு சரிசமனாக அ.இ.ம.கா. திகழ்வதை மு.கா. தலைமை ஏற்றுக்கொண்டுதான்ஆக வேண்டும். ஜனாதிபதியினதும், அரசினதும் நம்பிக்கையைப் பெற்ற கட்சி எமது கட்சி தான். நம்பிக்கைகுரிய தலைமை அமைச்சர் ரிஷாத் பதியுதீன் என்பதை மு.காவும், அதன் தலைமையும் விரும்பியோ விரும்பாமலோ ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

கல்குடா தொகுதிக்குத் தேசியப் பட்டியல் தருவதாக இப்போது மு.கா. தலைமை பிரசாரம் மேற்கொண்டு வருவது உண்மையில் நகைப்பை ஏற்படுத்துகின்றது.

மு.காவின் தேசியப் பட்டியல் எம்.பிக்களான ஹசனலியா அல்லது அஸ்லமா இராஜினாமாச் செய்யப்போவது? இதனையாவது கல்குடா மக்களுக்கு கூறுமாறு மு.கா. தலைமையை நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

தேசியப் பட்டியல் என்றால் என்ன என்பது பற்றி கல்குடா தொகுதி மக்களுக்கு நன்றாகவே தெரியும் என்பதை மு.கா. தரப்பினருக்கு மீண்டுமொரு முறை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.



எனவே, வீணான வதந்திகளைப் பரப்புவதிலும், பொய்ப் பிரசாரம் செய்வதையும் நிறுத்திக்கொள்ளுமாறு கிழக்கு மக்களின் சார்பில் கேட்டுக்கொள்ளும் நான், எனது சவாலை ஏற்றுக்கொள்ளுமாறும், அதனைப் பகிரங்கமாக அறிவிக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

- இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் சுபைர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

CSE
COLOMBO STOCK EXCHANGE

பங்குச்சந்தை µ யாழ்ப்பாணம்
பங்குனி 01, 2011
பங்குச்சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 7701.19↓
மிலங்கா(MPI) 7096.56↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 2690.95Mn
பங்குகளின் அளவு(No.) 77.31Mn
வியாபாரம்(No.) 14870
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
செலான் டிவலொப்மென்ர் 19.00
மேகன்ரைல் ஸிப்பிங் 219.00
சென்றல் இன்டர்சிஸ் 113.00
லங்கா அசோக் 3100.00
பிறின்ர் கேர் 135.20
குறைவு(Top 5 losers) - விலை Rs.
கார்டியன் இன்வெஸ்ர்மன்ர் 2177.80
நுவரெலியா ஹொட்டல் 1018.80
பைன்லேஸ் கொழும்பு 307.10
யூனியன் கெமிகல் 850.00
த பினான்ஸ் 17.80
மேலதிக தகவல்கள்- www.cse.lk

# நிகழ்வுகள்

### ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச்.2

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் கலந்துகொள்வார்.

நேற்று நடைபெறவிருந்த இக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் நாளையே நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

### பேச்சுத் திறன் காணும் வைவம்

யாழ்ப்பாணம்,மார்ச்.2

முன்பள்ளி மாணவர்களின் பேச்சுத்திறனை விருத்தி செய்யும் பொருட்டு ''பேச்சுத்திறன் காணும் வைவம்'' இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு பிறவுண் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ விக்னேஸ்வரா ஞானக்குழந்தைகள் முன்பள்ளியில் பாடசாலை ஆசிரியர் சியாமா ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(ந-313)

### பொதுக் கூட்டம்

வலி.கிழக்குப் பிரதேச செயலக பண்பாட்டு பேரவையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வலி.கிழக்குப் பிரதேச செயலர் எம்.பிரதீபன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பொதுக் கூட்டத்தில் பண்பாட்டுப் பேரவையின் இந்த வருடத்துக்கான செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்படவிருப்பதால் சகலரையும் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(ந-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை வெசாக் தினத்துக்கு முன் நடத்துங்கள்

## ஐ.தே.க. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 02

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை மே மாதம் வெசாக் தினத்துக்கு முன் நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சி தேர்தல் ஆணையாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

அரசின் தேர்தல் பிரசாரங்கள் மந்தமாகவே இடம்பெறுகின்றன. தேசிய மட்டத்தில் பிரசாரங்கள் இன்னும் இடம்பெறவில்லை. வேட்பாளர்களே சிறுசிறு பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தோல்வி நிச்சயம் என்பதை அறிந்துள்ள அரசு வாக்காளர்களை மிரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. வாக்காளர்கள் வாக்குச்சாவடிக்குச் செல்வதைத் தடுக்கும் நடவடிக்கைகளை அரசு இப்போதே தொடங்கிவிட்டது.

அரச வேட்பாளர்கள் சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். அரச சொத்துக்கள் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. நாம் திங்கட்கிழமை கிழக்கு மாகாணத்துக்குச் சென்றபோது எம்மிடம் இந்தக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

அரச சொத்துகள் தேர்தலுக்காகப் பயன்படுத்தப்படக் கூடாது என்று தேர்தல் ஆணையாளர் முதலில் கூறியிருந்தார். பின்னர் அந்த முடிவை மாற்றி அரச சொத்துக்கள் பாவிக்கப்பட்டால் வேட்பாளர்கள் அவர்களுக்குப் பணம் செலுத்த வேண்டும் என்று கூறினார்.

கடந்த தேர்தல்களின் போது தேர்தல் பிரசாரங்களுக்காக ரூபவாஹினியை பயன்படுத்தியமைக்காக அரசு 4 கோடி 40 லட்சம் ரூபா பணம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த நிலையில் அரச சொத்துக்களை பாவிக்கும் வேட்பாளர்கள் பணம் செலுத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

உள்ளூராட்சிச் சபைகளில் மூன்றில் ஒரு பகுதி ஒத்திப் போடப்பட்டுள்ளது. உலகக் கிண்ணக் கிரிக்கெட்டைக் காரணம் காட்டியும் வேறு பல விடயங்களை காரணம் காட்டியுமே தேர்தல் ஒத்திப்போடப்பட்டது.



மே மாதம் வெசாக் தினத்துக்கு முன்னர் ஒத்திப் போடப்பட்ட சபைகளுக்கான தேர்தலை தேர்தல் ஆணையாளர் நடத்த வேண்டும்.

ஒத்திப்போடப்பட்ட சபைகளுக்காக ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படுவதற்கு முன் இத்தேர்தல் நடத்தப்பட வேண்டும் - என்றார்.

# எலிக் காய்ச்சலுக்கு இலக்கான 18 பேர் வவுனியா ஆஸ்பத்திரியில்

வவுனியா, மார்ச் 02

வவுனியா மாவட்டத்தில் 18 பேர் எலிக் காய்ச்சலுக்கு இலக்காகியுள்ளனர்.

வவுனியா பொது வைத்தியசாலைக்கு கடுமையான காய்ச்சல் என சிகிச்சைபெற வந்தவர்களின் மாதிரி இரத்தங்கள் பரிசோதிக்கப்பட்டபோதே இவர்கள் இனங் காணப்பட்டனர் என்று வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

வயல் வேலைகளில் ஈடுபட்ட பூவரசன் குளம், சாஸ்திரி கூழாங்குளம் பிரதேச பொது மக்களே இந்நோயினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# வாடகை வீடுகளுக்கு ரூ. 50 ஆயிரம் போதாதாம்

## அமைச்சர்கள் போர்க்கொடி

கொழும்பு, மார்ச் 02

வீட்டு வாடகையாக வழங்கப்படும் 50 ஆயிரம் ரூபா போதாது என்று சில அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

கொழும்பில் தமக்கு உத்தியோகபூர்வ வீடுகளை வழங்கும்படியும், தற்போது வீட்டு வாடகையாக வழங்கப்படும் 50 ஆயிரம் ரூபா போதாது என்றும் 20 அமைச்சர்களும், 15 பிரதி அமைச்சர்களும் பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரத்னவிடம் கூட்டாக வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

உத்தியோகபூர்வ அலுவல்களுக்காகத் தாம் கொழும்பில் அதிக நாட்கள் தங்க வேண்டியிருப்பதாகவும், தமது அலுவல்களைக் கவனிக்க கொழும்பில் வீடுகள் தேவை எனவும் அவர்கள் தெரி வித்துள்ளனர்.

அரச உயர் அதிகாரிகளுக்கென ஒதுக்கப்பட்டுள்ள வீடுகளில் சிலவற்றை அமைச்சர்களுக்குப் பெற்றுக் கொடுக்க முடியுமா என பொது நிர்வாக அமைச்சர் ஜோன் செனவிரத்ன ஆராய்ந்து வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



கம்பஹா அத்தனகல வரான பிரதேச வான் பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த இரண்டு 'கிபீர்' விமானங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி கீழே விழுந்து நொருங்கின. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நொருங்கிய விமானம் ஒன்றை சென்று பார்வையிட்டார்.

# சிவராத்திரி தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 2

வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தில் இன்று இரவு முழுவதும் சிவராத்திரியை ஒட்டி விசேட நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நான்கு சாமமும் விசேட பூசை வழிபாடுகளும் விசேட நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

அதிகாலை கீரிமலைக் கரைக்கு நகுலேஸ்வரர் பெருமான் எழுந்தருளி கண்டசி தீர்த்தம் இடம்பெறும்.

சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்க பக்தர்கள் ஆலயத்துக்கு வர வசதியாக விசேட போக்குவரத்துச் சேவைகளை போக்குவரத்துச் சபையினரும் தனியார் பஸ் சேவையினரும் நடத்தவுள்ளனர்.

ஆலயத்தில் கூடும் பக்தர்களுக்கு விசேட வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. (ஒ-ஐ)

* * *

தென்புலோலி மூச்சம்பவம் சிவனாலய மகா சிவராத்திரி விழா இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு முதலாம் சாமப் பூசையுடன் ஆரம்பமாகி தொடர்ந்து இரவு 9.30 மணிக்கு இரண்டாம் சாமப் பூசையும் இடம்பெறும்.

தொடர்ந்து அகில இலங்கை இளங்கோ கழகம் வழங்கும் பட்டிமன்றமும் மற்றும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (ஒ-323)

* * *

ஊரெழு சத்திபுரம் சிவபூரணி முத்தமிழ் மன்ற அறநெறிப் பாடசாலை நடத்தும் மகாசிவராத்திரி விழா இன்று புதன்கிழமை இரவு 7.30 மணிக்கு வீரகத்தி விநாயகர் ஆலயத்துக்கு அருகிலுள்ள புதிய விழாத் திடலில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் ந.து.ஜெயதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக தொழில் துறை அமைச்சின் ஊடகச் செயலாளர் எம்.நடேசலிங்கமும், சிறப்புவிருந்தினராக இளைப்பாறிய அதிபர் ச.சற்குணசர்மாவும் யாழ்.ஊரெழு கணேச வித்தியாசாலை அதிபர் கி.திரிகரனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

* * *

மண்கும்பான் வெள்ளைப்புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் மகாசிவராத்திரி விழா இன்று புதன் கிழமை இரவு நடைபெறவுள்ளது.

நான்கு சாமப்பூசைகளும் இடம்பெறுவதுடன் மறுநாள் அதிகாலை 5.30மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

* * *

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடத்தப்படும் சிவராத்திரி விழா இன்று புதன் கிழமை காரைநகர் சிவகாமி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

* * *

பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோயிலின் மகாசிவராத்திரி தின நிகழ்வுகள் இன்று புதன் கிழமை நடைபெறவுள்ளன. (ற-28)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்.2

அகில இலங்கைத் திருமறை மன்றத்தினால் ''ஈழநாட்டுத் திருப்பதிகங்கள் பாராயணம்'' இன்று புதன்கிழமை காலை தொடக்கம் மாலை வரை ஆலயங்கள் தோறும் நடைபெறவுள்ளது.

மகாசிவராத்திரியை முன்னிட்டு நடைபெறும் இந்தநிகழ்வில் பன்னிரு திருமுறைப் பாராயணமும் இடம்பெறும்.

(ற-313)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்.2

யாழ்.மத்தி பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் மகா சிவராத்திரி விழா இன்று புதன்கிழமை மாலை 6 மணி முதல் மறுநாள் காலை 6 மணிவரை தொடர்ச்சியாக நான்கு சாம பூஜைகளுடன் நடைபெறவுள்ளது.

(ற)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச்.2

தென்கோவை, பழைய வீதி ஸ்ரீசாந்திலிங் கேஸ்வரர் திருக்கோயிலின் பாற்குட அபிஷேகமும், மகாசிவராத்திரி விழாவும் இன்று புதன் கிழமை காலை 8.30மணி தொடக்கம் நடைபெறவுள்ளது.

பாலாபிசேகம் காலை 8.30 மணி தொடக்கம் 10.30மணி வரையும் இரவு நான்கு சாமமும் அபிசேகப் பூஜைகளும் இடம்பெறும். (ற)

***

யாழ்ப்பாணம், மார்ச் 2

நல்லூர் சட்டநாதர் சிவன்கோயில் சிவராத்திரி விழா இன்று புதன்கிழமை 7 மணிக்கு சங்காபிஷேகம் நான்கு சாமப் பூசைகளுடன் நடைபெறும். (ஒ-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த ராஜபக்ஷ அரசு வீட்டுக்கு செல்லும் காலம் நெருங்கி விட்டது

## நேற்றைய ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பியின் ரில்வின் முழக்கம்

கொழும்பு, மார்ச் 02

மஹிந்த ராஜபக்ஷ அரசு வீட்டுக்குச் செல்லும் காலம் நெருங்கிவிட்டது - என்று ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து கொழும்பில் நேற்று ஜே.வி.பி. தலைமையில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பி.ப. 4 மணியளவில் கம்பல் மைதானத்துக்கு முன்பாக ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டம் கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தை வந்தடைந்தது.

இதில் கலந்துகொண்டு பேசியபோதே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் -

பொருள்களின் விலை உயர்வடைந்து செல்கிறது. வேலை வாய்ப்புக்கள் இல்லை. மக்கள் மூன்று வேளைகளிலும் மரக்கறிகளுடன் சாப்பிட முடியாது திண்டாடுகின்றனர். கிழங்கும் சோறும் மாத்திரமே மக்கள் சாப்பிடுகின்றனர். அவற்றின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதனால் மக்கள் கஷ்டப்படுகின்றனர். இவ்வாறானதொரு அரசு நாட்டுக்குத் தேவையில்லை. மஹிந்த ராஜபக்ஷ அரசு வீட்டுக்குச் செல்லும் காலம் நெருங்கிவிட்டது - என்று கூறினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் கூறியவை வருமாறு -

நாளுக்கு நாள் பொருள்களின் விலை உயர்வடைந்து செல்கிறது. பொருள்களின் விலைகள் உயர்வடைந்து செல்வதால் மக்கள் கஷ்டப்படுகின்றனர். இந் நிலையில், பொருள்களின் விலைகளைக் குறைக்குமாறும் மக்களுக்கான நிவாரணங்களை வழங்குமாறும் அரசை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2009ஆம் ஆண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை. - என்றார்.

# இலங்கை மீனவர்கள் விடுதலை

கொழும்பு, மார்ச் 02

இந்தியக் கடல் எல்லைக்குள் நுழைந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6 இலங்கை மீனவர்களை இந்தியா விடுதலை செய்துள்ளது.

இந்தநிலையில் இவர்கள் இன்றைய தினம் இலங்கை சென்றடைவார்கள் என்று சென்னைப் பிரதி இலங்கைத் தூதர் வடிவேல் கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவர்களை இலங்கைக்கு ஹெலி மூலம் அனுப்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தியாவின் ஆந்திர பிரதேசத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எட்டு மீன்பிடிப் படகுகளையும் அதில் பயணித்த 43 இலங்கை மீனவர்களும் இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அவர்கள் இலங்கைக் கடற்படையினரிடம் எதிர்வரும் நான்காம் திகதி இந்திய - இலங்கைக் கடல் எல்லையில் வைத்து கையளிக்கப்படுவர் என வடிவேல் கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மீண்டும் சாதனை படைக்க
வெற்றித் தேர்வு
ஜனவரி முதல் யூலை வரை 20 தேர்வுகள்
2011 - தரம் : 5ற்கு
ஜனவரி முதல் நவம்பர் வரை 15 தேர்வுகள்
2011 - தரம் : 4ற்கு
தரம்:5 - 1,2,3 தரம்:4 - 1
இப்போது புத்தகசாலைகளில் பெறலாம்
பூபாலசிங்கம் | துர்க்கா | மொடேன் | அறிவுநதி | K B K
0775388471, 212229016, 0773126807

பங்குனி 2011 புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் ஆரம்பம்



edexcel INTERNATIONAL BTEC
HND
Business
Management

முகாமைத்துவத் துறையில் உங்கள் தகுதியையும், தகைமையையும் உயர்த்திக் கொள்வதோடு குறுகிய காலத்தில் குறைந்த செலவுடன் பிரித்தானிய முன்னணிப் பல்கலைக்கழகம் ஒன்றின் முகாமைத்துவப் பட்டதாரியாகும் வாய்ப்பையும் பெற்றுக் கொள்ளுங்கள்.

அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் அனேகரின் வேண்டுகோளுக்கு இணங்க வார இறுதிநாள் பிரிவுகளும் ஆரம்பம்.

மேலதிக விபரங்களுக்கு
021 4900 900

"கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச்சாம்ராஜ்யம்"

IIS CITY CAMPUS
200, Sivan Pannai Road, Jaffna.
Tel : 021 222 8060 Fax : 021 222 6933
E-mail : info@iis.edu.lk Web : www. iis.edu.lk

## ஆரிய - திராவிட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'எமது சங்கத்தின் வளர்ச்சிக்காக நீண்ட காலம் பாடுபட்டவரும் தமிழ் வளர்த்த தமிழ் அறிஞருமான அமரர் அளவெட்டிப் பண்டிதர் க. நாகலிங்கத்தின் நினைவஞ்சலிக் கூட்டத்தை பெரியளவில் நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகையில், நேற்றுமுற்பகல் 10 மணிக்கு சீருடையில் வந்த இராணுவத்தினர், நீங்கள் இனிமேல் இந்தக் கட்டடத்தில் இயங்க முடியாது என்று கூறினர்'.

- இவ்வாறு கடம்பேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

1921 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாழ். ஆரிய, திரா விட பாஷா விருத்திச் சங்கம் யாழ். மாவட்டத்தில் பல பண்டி தர்களை உருவாக்கி தமிழ்மொழியை வளர்த்துவருகின்ற பாரம்பரியமிக்கதொரு தமிழ் வளர்த்த சங்கம்.

யாழ். கொட்டடி மூடப்பட்டிருந்த பாரதி பாஷா வித்தியாசாலையின் கட்டடத்தை அந்தக் காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சுந்தரம் டிவகலாலா சங்கச் செயற்பாடுகளுக்காக வழங்கியிருந்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணச் செயலாளரின் பணிப்புரைக்கு அமையவும் சுற்றுநிருபங்களுக்கு அமையவும் இந்தக் கட்டடத்தை சொந்தமாக சங்கம் வைத்திருக்க முடியும் என்று 1999 ஆம் ஆண்டு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராக இருந்த என்.தணிகாசலம்பிள்ளை எழுத்து மூலம் தங்களுக்கு அறிவித்துளார்.

அதன் பின்னர் 1999.09.19 ஆம் திகதி முதல் இந்தக் கட்டடத்தில் பண்டிதர் பரீட்சைக்கான வகுப்புகள், மாணவர்களுக்கான தமிழ், ஆங்கில, சமஸ்கிருத வகுப்புகள் நடை பெற்று வருகின்றன.'

வடமாகாண ஆளுநரின் உத்தரவின் பேரிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்வதாக இராணுவத்தின் தம்மிடம் தெரிவித்தனர் என்றும் அவர் கூறினார்.

நீண்டகாலமாக யாழ். மண்ணில் பல தமிழ்ப் பண்டிதர்களை உருவாக்கி அதன் ஊடாகத் தமிழ் மொழியை வளர்த்து வந்த ஆரியதிராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தை அந்தக் கட்டடத்தில் இருந்து வெளியேறுமாறு இராணுவத்தினர் அறிவித்துள்ளமை தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் பெரும் விசனத்தையும், அதிருப் தியையும் ஏற்படுத்தி உள்ளது. (உ-9)

கலைமகள் அழகு நிலா
Beauty Academy



புதிய பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்
பிரிவு I: 05.03.2011, பிரிவு II: 07.03.2011

பயிற்சியின் நிறைவில் Diploma சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சி யின் மூலம் ஒரு அழகு நிலையம் நடத்தும் தகுதி யைப் பெற்றுக்கொள்ளலாம். கீழ்வரும் பயிற்சிகள் அனைத்தும் செயன் முறையாகும். பயிற்சி பெற ஆர்வமுள்ள மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

பயிற்சிகள்
★ Facial (10 வகை)
★ Threading
★ Pimple Treatment
★ Waxing
★ Hair Stratening
★ Hair Perming
★ Hair Cutting
★ Hair Colouring
★ Hair Dye
★ Pedeicure manicure
★ நறுமுகப்பவுடர் இயந்திரம் மூலம் அகற்றப்படும்.
★ Bleaching
★ Face Cleaning
★ Bridal makeup (6 வகை)
★ Wedding Icing

பயிற்சி நேரம் - மு.ப. 10 மணி பி.ப. 1.30 வரை
அனுமதிக் கட்டணம்: 6000/-

கலைமகள் அழகு நிலா
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம். தொ.பே: 0773719071

## மரண அறிவித்தல்

### தங்கராசா சிறிகரன்

(தகவல் தொழில் நுட்ப பூங்கா பணியாளர், யாழ்ப்பாணம்)



அராலி வடக்கு, செட்டியார்மடத்தைப் பிறப்பிடமாகவும் தாமரை வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா சிறிகரன் நேற்று (01.03.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராசா - வள்ளியம்மை தம்பதியரின் இளைய புதல்வரும் குணரத்தினம் - பரிமளம் தம்பதியரின் மருமகனும் ஜெயந்தினியின் (ஆசிரியை, யா/வண்.வைத்திலிங்கம் வித்தியாலயம்) அன்புக் கணவரும் பவித்திரன், அட்சயா, மிதுசியா ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமசிவராசா (லண்டன்), தவராசா (லண்டன்), கிருபா (அராலி வடக்கு), நிர்மலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பவானி (கனடா), சிறிதரன் (கனடா), சுகந்தினி (கனடா), ரஜனி (யாழ்ப்பாணம்), ஸ்ரீகாந்தன் (கனடா), ஸ்ரீகருணகுமார் (கனடா), ஸ்ரீரஞ்சன் (யாழ்ப்பாணம்), துஷாந்தினி (இந்தியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.03.2011) புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*59, தாமரை வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

75% special offer
நவீன தொழில்நுட்பங்கள், Advanced Video Editing மென்பொருள்களையும் உள்ளடக்கிய தமிழ் மொழி விளக்கங்களுடனான முழுமையான Video Editing கற்கை நெறி.
Diploma in Video Production & Multimedia
Introduction to Digital Video, Adobe Premiere Pro CS3, ParticleIllusion, Pinnacle Studio, COOL 3D Studio, Adobe After Effects, Nuendo, & VCD Cutter
அனைத்து டிப்ளோமா கற்கை நெறிகளுக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பம் : 04-03-2011, 05-03-2011, 07-03-11
DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி, சாவகச்சேரி. Tel. :021-227 0243

Quick Learning Course
Spoken English with Grammar
Duration 1 Month Rs. 3000.00
உரையாடல் பயிற்சிகள். பேச்சுப் பயிற்சிகள். உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video visuals மூலமாக நடாத்தப்படுகிறது
A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும்
திங்கள் முதல் வெள்ளிவரை வகுப்புகள் நடைபெறும் & Full time special
07-03-2011
Batch 12 : 09.00 AM - 01.00 PM
Batch 13 : 01.30 PM - 05.30 PM
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
No.15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna. ஆரியகுளத்துச் சந்திக்கருகில் கொசி Hotel மேல்
Tel :021 2224550 HotLines: 0777222422/ 0777585913/0714299935
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே நீங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org